147500

# சிவபுர மஹாத்மியமென்னும் சிவபுரி புராணம்

(C)

Q23:38·2114ஓ
N28

147500

# சிவபுரி புராணம்

சிதம்பர சுவாமிகளின் பாதசேகரரான

ஸ்ரீமத்

சி. சுப்பைய சுவாமிகளால்

மொழி பெயர்க்கப்பட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-MAY 1928
MADRAS

கோட்டையூர்

க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரால்

சென்னை - சூளை,

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1928

[ரிஜிஸ்டர்ட் காபிரைட்.]

Q23:38.21145
N28
147500.

திலிருந்து ஒரு மைலில் தூரத்தில் உள்ளது.

உ

சிவமயம்

சிவபுர மாஹாத்மிய மென்னும்

# சிவபுரி புராணம்

இது

வடமொழியிலிருந்து

ஸ்ரீ கோவிலூராதீனம் சிதம்பரம்

பொன்னம்பல சுவாமிகள் மடாலயம்

சிதம்பர சுவாமிகளின் பாதசேகரரான

ஸ்ரீமத்

சி. சுப்பைய சுவாமிகளால்

மொழி பெயர்க்கப்பட்டு

கோட்டையூர்

க. வீ. சோ. வீ. அழகப்ப செட்டியாரால்

சென்னை - சூளை,

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1928

[ரிஜிஸ்டர்ட் காபிரைட்.]

PRINTED AT
SRI BHARATHI PRESS,
CHOOLAI MADRAS.

147500
சென்னை-600 008.



சிவமயம்

# இரண்டாம் பதிப்பின்

# முகவுரை.

திருவளர்ந்தோங்கும் இந்நிலவுலகின்கண்ணுள்ள மக்க
ளின் மனவிருளைப் போக்குவான் கருதிக் கருணைக்கடலாய்
விளங்கும் ஸ்ரீமந்நாராயணரின் திருவவதாரமாகிய ஸ்ரீ
வேத வியாஸ மகா முனிவர், தாம் திருவாய்மலர்ந்துள்ள
பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்த புராணத்
திலே ஸநத்குமார சம்ஹிதையிலே சிவ விஷ்ணு சம்வாத
மாகச் சிவபுரிதலத்தின் சிறப்பை வடமொழியில் சிவபுர
மாஹாத்மியமென்று மிகத் தெளிவாய்க் கூறியுள்ளார்.

சிவபுரியின் சிறப்பை வடமொழியில் வல்லுநர் மாத்
திரம் ஸ்காந்தபுராணத்தை ஓதி யுணருமாற்றலுடையவரா
யிருக்கின்றனர். அம்மொழிபறியா ஏனையோர் அம்மான்
மியங்களை யுணருமாற்றலிலராயிருக்கின்றனர். ஆகையால்
தமிழுணர்வுடையாரும் அதனை யுணர்ந்து அறம்பொரு
ளின்பம் வீடென்னு நால்வகைப் பேற்றையு மொருங்கே
யடையவேண்டுமென்று கருதுபவரும், சிவ பக்தசிரோ
மணியாய் விளங்குபவருமாகிய கோட்டையூர் தன வைசிய
ரான க. வீ. சோ. வீ. அழகப்பசெட்டியார் அவர்களின்
வேண்டுகோளுக்கிணங்கிப் பண்டிதர்களேயன்றி ஏனையோ
ரும் எளிதில் உணரும் வண்ணம் தேனினுமினிய தெள்ளிய
தமிழில் அச்சிவபுரியின் மான்மியங்களை சிவபுரிபுராண

மென்னும் பெயர் தந்து வடமொழி மூலத்தினின்றும் சிறிதும் வேறுபடாமல் மொழிபெயர்த்துள்ளேன். ஆனால் தனித்தமிழ் நடையினுஞ் சிறிது மாறுபட்ட கதியுடையதாக இது விளங்கும்.

இந்நூலை இவ்வண்ணம் தண்டமிழில் இயற்றுமாற்றலை எனக்கருளியுள்ள ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணியின் பொற்பாத கமலங்களை மனமொழி மெய்களான் எஞ்ஞான்றும் வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

சி. சுப்பையா சுவாமி.

---



சிவமயம்.

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

திருநெல்வாயில் என்கின்ற

# சிவபுரி தேவாரப்பதிகம்.

இராகம் - பண் - இத்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புடையினார் புள்ளி கால்பொருந்திய
மடையினார் மணி நீர்நெல்வாயிலார்
நடையினால் விரற் கோவணந்நயந் (க)
துடையினா ரெம துச்சியாரே.

வாங்கினார் மதின் மேற்கணை வெள்ளந்
தாங்கினார் தலை யாயதன்மையர்
நீங்கு நீர நெல் வாயிலார்தொழ (உ)
வோங்கினா ரெம துச்சியாரே.

நிச்சலேத்து நெல் வாயிலார்தொழ
விச்சை யாலுறை வாரெமீசனார்
கச்சை யாவதோர் பாம்பினார் கவி (ங)
னிச்சையா ரெம துச்சியாரே.

மறையினார் மழு வாளினார்மல்கு
பிறையினார் பிறை யோடிலங்கிய
நிறையினா ரெவ் வாயிலார்தொழு (ச)
மிறைவனா ரெம துச்சியாரே.

விருத்தனாகி வெண்ணீறுபூசிய
கருத்தனார் கன லாட்டுகந்தவர்
திருத்த னாரநெல் வாயின்மேவிய (ரு)
வொருத்தனா ரெம துச்சியாரே.

காரினார் கொன்றைக் கண்ணியார் மல்கு
பேரினார் பிறை யோடிலங்கிய
நீரினார நெல் வாயிலார்தொழு
மேரினா ரெம துச்சியாரே. (௬)

ஆதியா ரந்த மாயினார்வினை
கோதியார்மதில் கூட்டழித்தவர்
நீதியா ரநெல் வாயிலார்மறை
யோதியா ரெம துச்சியாரே. (௭)

பற்றினா னரக் கன்கயிலையை
யொற்றினா ரொரு கால்விர லுற
நெற்றியாரநெல் வாயிலார்தொழும்
பெற்றியா ரெம துச்சியாரே. (௮)

நாடினார் மணி வண்ணனான்முகன்
கூடினார் குறு காதகொள்கையர்
நீடினார நெல் வாயிலார்தலை
யோடினா ரெம துச்சியாரே. (௯)

குண்ட மண்டுவர்க் கூறை மூடர்சொற்
பண்ட மாகவை யாத பண்பினர்
விண்ட பங்குநெல் வாயி லார்நஞ்சை
யுண்ட கண்ட ரெம் முச்சியாரே. (௧௦)

நண்பயங்குநெல் வாயி லீசனைச்
சண்பைஞான சம் பந்தன் சொல்லிவை
பண்பயன் கொளப் பாட வல்லவர்
விண்பயன் கொளும் வேட்கை யாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

குமரன் துணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருநெல்வாயில் என்கின்ற

# சிவபுரி திருப்புகழ்

தனன தானன தானதாத் தனந்த
தனன தானன தானதாத் தனந்த
தனன தானன தானதாத் தனந்த தனதான

அறிவி லாதவ ரீனர்பேச் சிரண்டு
பகருநாவினர் லோபர்தீக் குணங்க
ளதிக பாதகர் மாதர்மேற் கலன்கள் புனை *யாதர்

அசடர் பூமிசை வீணராய்ப் பிறந்து
திரியு மானுடர் பேதைமார்க் கிரங்கி
யழியு மாலினர் நீதிநூற் பயன்கள் தெரியாத

நெறியி லாதவர் சூதினாற் கவர்ந்து
பொருள்செய் பூரியர் மோகமாய்ப் ரபஞ்ச
நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறி

நினைவு பாழ்பட வாடிநோக்கிழந்து
வறுமை யாகிய தீயினமேற் கிடந்து
நெளியு நீன்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே

நறிய வார்குழல் வானநாட் டரம்பை
மகளிர் காதலர் தோள்கள்வேட் டிணங்கி
நகைகொ டேழிசை பாடிமேற் பொலிந்து களிகூற

* ஆதர்-அறிவில்லாதவர்.

நடுவு லாதகு ரோதமாய்த் தடிந்த
தகுவர் மாதர்ம ணாளர்தோட் பிரிந்து
நசைபொ ருதழு தாகமாய்த் தழுங்கி யிடர்கூர

மறியு மாழ்கட லூடுபோய்க் கரந்து
கவடு கோடியின் மேனுமாய்ப் பரந்து
வளரு மாவிரு கூறதாய்த் தடிந்த வடிவேலா

மருவு காளமு கில்கள்கூட் டெழுந்து
மதியு லாவிய மாடமேற் படிந்த
வயல்கள் மேவுநெல் வாயில்வீற் றிருந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

ஸ்ரீ கணேசாயநம:

சிவபுர மாஹாத்மிய மென்கின்ற

# சிவபுரி புராணம்

## பாயிரம்.

ஸ்தல நடன கணபதி துதி

சீர்பூத்த சிவபுரத்தி லின்பமெலாஞ்
சேர்ந்து நாஞ்சிறந் தோராகப்
பார்பூத்த நான்முகனு நாரணனும்
பார்க்கரிய பரமன் பாலே
பேர்பூத்த கனகவல்லி யேந்திழையே
யிபமிதென வீன்ற வெந்தைக்
கார்பூத்த நடமிடுமென் கணபதியின்
கழலடியைக் கருத்துள் வைப்பாம். (க)

ஒருகொம் பிருசெவி மும்மத நால்வாயோ டைந்துகரன்
அருவிந்து பாலன்முன் னையிரண் டோடிரண் டாம்பெயரா
திருநட்ட நாதன் திருநட்ட மாடச் சிவபுரிவாய் [ன்
வருநட்ட மாடும் பரமொட்டு மானையை வாழ்த்துதுமே (உ)

வீடு மின்பமு மிக்க பொருளறங்
கூடு மன்பர்க் கருடருங் கொற்றவன்
நாடு மின்பச் சிவபுரி வாய்நட
மாடு மானை யடிதொழு துய்துமே. (௩)

சுப்பிரமண்யர் துதி.

மிக்க தாம்கிரி நூலுணர் மேலவர்
தக்க வேபுகழ் செல்வாய் தனிலமர்
தக்கன் வேள்வி தகர்த்தவன் றந்திடுஞ்
செக்கர் வேலவன் சேவடி போற்றுவாம். (௪)

சீரோங்கச் சிவசமயஞ் செழித்தோங்க
அன்பரெலாஞ் சிறப்புற் றோங்கப்
பாரோங்கப் பரஞானம் பலித் தோங்கப்
பலமனைத்தும் பண்போ டோங்கக்
காரோங்கு மிமையவரைக் காரிகையோர்
புறமோங்குங் கயிலைப் பெம்மான்
பேரோங்கு நுதற்கணிடைப் பிறந்தோங்கு (௫)
மறுமுகனைப் பேணி வாழ்வாம்.

சிவபுரேசர் துதி.

கொற்ற போர்விளை குந்திதன் மைந்தனுன்
பெற்ற பேர்படை பாசுப தாத்திர
முற்றன னுச்சி நாத னினதருள் (௬)
நெற்றி மேல்விழி நெல்வாயி லெந்தையே.

அவமறுத் தெம்மை யாண்டிடு மான்ற
ளன்பினு லின்புறு கவிசொல்
சிவமுறு முத்துச் சிவிகையூர் காழிச்
செல்வர்த மடியவ ரெவர்க்கும்
உவமையி லுணவை யுவந்துச்சிப் போதி
னுதவிநெல் வாயமர்ந் தன்பர்
பவமதை யகற்றும் பரமன திருதாட் (௭)
பங்கயஞ் சிரத்தணிந் துய்வாம்.

விடையுடை நீல கண்டனற் பாசு
பதமருள் வேணியெம் பெருமான்
புடையின ரெனவே யெம்பெரு மக்கட்
பெரியவர் புரிதரு தொடையான்
சடையுடை வீணை முனிதொழு சொன்னக்
கொடிப்படர் தருசிவ புரிவந்
திடையுடைத் தெய்வ மனைத்துமா யிலங்கு
முச்சியா னடியிறைஞ் சுதுமே.



கனகவல்லியம்மை துதி.

சித்தர் வீணைச் சுரமுனி நித்தமும்
பத்தி மாழை மலரிடும் பான்மையாற்
சுத்த ஞானச் சுவணக் கொடியெனு (௯)
முத்தி யீயு முதல்வியை முன்னுவாம்.

சித்தர்சுரர் முனிவரொடு திகிரிமழுக்
குண்டிகைத்தே வரும்போற் றுப்பின்
முத்தாகத் தமர்ந்தொளிரு முழுமணியை
முத்தாப மொழிப்பா னேத்தும்
பத்தர்பவப் பிணியகற்று மருமருந்தைப்
பரன்விழையு மமுதை ஞானச்
சுத்தகுணச் சிற்சொருபச் சுவணவல்லி (௰)
யம்மையையாந் தொழுது வாழ்வாம்.

தக்ஷிணாமூர்த்தி துதி.

மேருவின் தென்பால் மிகவளர் வடவின்
மௌனியாய் நீழலின் விளங்கிச்
சீருறும் பரம வுணர்வினை நால்வர்
சேர்ந்திடச் செங்கரத் துணர்த்திப்
பாரினிலினிய பதியெலாம் விளங்கிப்
பக்குவர் பரகதி யதனைத்
தேருற வென்றுஞ் சிவபுரி யமருந் (௰௧)
தக்ஷிணா மூர்த்திதாள் போற்றி.

சரஸ்வதி துதி.

ஞானநற் கனியுண் டென்றும்
நலிதலற் றிலங்கு மேனி
தானடைந் தயனு மென்னுந்
தனித்தபஞ் சரத்திற் றங்கி

வானவர் துதிப்ப மேலா
மறையையே பகர்வ தாஞ்ச
மானமில் விஞ்சை ரூப
வன்னிதாள் வணங்கல் செய்வாம். (௰௨

நால்வராதி யறுபத்துமூவர் துதி.

ஞானசம்பந்தர் நற்றிருவடியை
நாவினுக்கரையர் மெய்ப்பதத்தை
யூனசம்பந்த மின்றியநாவ
லூரர்காலிணையினை ஞான
வானசம்பந்த முறுமொருவாத
வூரர்தாண்மலரை யெக்காலும்
மோனசம்பந்தமுறு மறுபத்து
மூவர்மொய் கழலிணைத் தொழுவாம். (௰௩)

அருட்குரு துதி.

சங்கர குருவின்சார் பரம்பரையிற்
சாலிவாடி றைவியினருளாற்
பொங்குறுங் கோயிலூர் மரபதனிற்
பொலிந்திடுஞ் சிதம்பரப்பதியில்
எங்குறுவடிவாய்க் கயிலைநீத்தெழுந்த
வீசனுஞ் சிதம்பரவாசான்
தங்குறுங்கருணை வலியினாலிதனைத்
தமிழினிலாற்றிடத் துணிந்தேன். (௰௪)

இந்நூற்பயன்.

சிவபுரத்தீசன் திருக்கதை தன்னைச்
செங்கையா லெழுதினோர் படித்தோர்
நவமுறப்பிறர்க்குப் போதித்தோர் சிறிது
நாழிகையாயினுங் கேட்டோர்



பவமற அறமும் பொருளுநல்லின்பும்
பாரினிற்பெற்று வாழ்ந்ததன்பின்
அவமறுத்தாளு மரனடிக்கீழ்ச்சென்
றமலவீ டெய்திவாழ்குவரே. (௰௫)

அவையடக்கம்.

கருங்கட லதனில்மூழ்கக்
கருத்திலரேனு மோர்காற்
பெரும்பயனெண்ணி மூழ்கும்
பெற்றிபோ லுலகில்யாரும்
வரும்பயனறியா நாயேன்
வாய்மொழி விரும்பாரேனுஞ்
அரும்பெறற் சிவபுரேசன்
அரும்புக ழெனக்கொள்வாரால் (௰௬)

இந்நூல் வரலாறு.

வாதரா யணனல் வகுத்தநூற் களினுள்
வளமிகு மகிமைகள் வாய்ந்த
மேதகு காந்த மெனும்புரா ணமதில்
மேவுமோர் மதியென விளங்குந்
தீதறு முதற்சங் கிதையினிற் கூறுந்
தேர்சிவ னரியின் சம்வாத
மோதினன் சூதன் சௌனகா திகட்கென்
றுரைத்தன னிந்தநூல் வழியே (௰௭)

பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

# சிவபுரி புராணம்.

காப்பு விநாயகர் துதி.

கலி விருத்தம்.

சீரிலங்குஞ் சிவபுரிமான்மியம்
பாரிலங்கு மொழித்தமிழ்ப்பாச்செயப்
பேரிலங்குஞ்சிவன் சிவைபெற்றவோர்
ஏரிலங்கு மிபந்தனை யேத்துவாம்.

## முதலாவது அத்தியாயம்.

### க்ஷேத்திர மகிமை யுரைத்தல்

ஞானனந்தவடிவினையும் தாமரை யிதழையொத்த கண்களையும் உடையவரும், தேவகூட்டங்களால் வணங்கப்பட்டவருமான மேன்மை பொருந்திய யானைமுகத்தை யுடைய விநாயகக்கடவுளை வணங்குகின்றேன்.

### இருஷிகள் வினவல்.

ஓ! சூதபுத்திரரே! மகா பாக்கியசாலியே! சகல சாஸ்திரார்த்தங்களையுமுணர்ந்தவரே! உம்மிடமிருந்து சகலமும் விரிவாகவும் சுருக்கமாகவுங் கேட்கப்பட்டன. இப்போது இரகசியங்களாகவும், உடனே பலனை யளிப்பனவாகவும், மகாத்மாக்களான பிரம்மவித்துக்களால் பூஜிக்கப்பட்டனவாகவு மிருக்கின்ற பலவிதமான சிவக்ஷேத்திரங்களைக் கேட்க அன்பாக விரும்புகின்றோம். ஓ! வியாஸசிஷ்யரே! மகாமதியுடையவரே! எங்கள்மீது உமக்குத் தயையிருத்தால் ஓ! வியாபகரே! சிவபெருமானுடைய கதாமிர்தம் அடிக்கடி பருகப்பட்டதேனும் விசேஷமாய்க் கேட்க வேண்டுமென்ற அதிக ஆவல் எங்களுக்குண்டாகின்ற



தாகையால்; இப்போது சொல்லவேண்டும். எங்களுக்குத் திருப்தியுண்டாகவில்லை. உம்முடைய அநுக்கிரகத்தால் அதிகமாகக் கேட்கவேண்டுமென்ற ஆவல் அடிக்கடி விருத்தியாகின்றது எங்களுக் கிதோபதேசஞ் செய்வதில் பகவானை நீர் குருவன்றோ? என்று தோத்திரஞ் செய்வதிற் பரவசரான முனிகளால் துதிக்கப்பட்ட சூதர், இருதய தாமரையில் சிவபெருமானைத் தியானித்து மயிர்க்கூச் செறிந்த உடம்பையும் நல்ல விரதத்தையுமுடையவராய் முனிகளைப்பார்த்து இனிமையான வாக்கியத்தைச் சொன்னார்.

### சூதர் சொல்லல்.

முனிசிரேஷ்டர்களான உம்மால் சகலவுலகிற்கும்
இதமானதும், புண்ணிய மானதும், சகலசித்தியைச் செய்
வதும், சுபமானதுமான இக்கேள்வி நன்கு வினவப்பட்
டது. எப்போது உங்களுடைய ஜென்மத்தை அழிக்கும்
படியான கேட்க வேண்டுமென்ற புத்தி அன்போடுண்
டானதோ அப்போதே முனிகளாகிய நீங்களனைவர்களும்
செய்யவேண்டிய வினைத்தொழிலைஞ் செய்து முடித்தவராவீர்கள்.
அழகுவாய்ந்த சிவக்ஷேத்திரங்களையும் சிவனுடைய வைப
வங்களையும் சிவபக்தருள்ள இடங்களையும் சிவனுடைய
தீர்த்தங்களையும், ஓ! முனிசிரேஷ்டர்களே! கேட்க இச்சை
யெவனுக்குண்டாகின்றதோ அவன் மேலானவன் என்பது
எல்லாச் சாஸ்திரங்களிலும் நிச்சயிக்கப்பட்டது. ஆகை
யால் முனிகளான நீங்களனைவரும் கிருதார்த்தர்களே
யென்பது எனது நிச்சயம் இப்போது உங்களுக்குச்
சொல்லுகின்றேன். அளவிடமுடியாத மேன்மைவாய்ந்த
சம்புவின் பலவிதமான ஸ்தானங்களை மிகுந்த அன்போடு
கேளுங்கள். ஹரியின் பொருட்டுத் தேவ தேவரான சந்திர
சூடரால் யாதொன்று சொல்லப்பட்டதோ, ஓ! விப்ரர்களே!

அதை இப்போது உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். இந்தச் சூதபுத்திரர் இங்ஙனங் கூறி ...பட்டத்தால் சுற்றப்பட்டவராய் மனதில், தேவராயும் மகாதேவராயும் அர்த்த சந்திரனைச் சிரசில் சூடினவராயும் புலித்தோலாடை யுடையவராயும் ஜடையாகிய மகுடத்தால் அலங்கரிக்கப்பட்டவராயும் விபூதியாகின்ற வாபரணத்தால் விளங்குமங்கத்தையும் உருத்திராக்ஷமணி யாபரணத்தையும் மேலான சர்ப்பமாகிய அரைஞாணல் கட்டிய யானைத் தோலாடையையு முடையவராயும், மான்கன்று, பாசு, ஸ்படிகமாலை, அக்ஷமாலை, சர்ப்பம் இவற்றைத் தண்டம் போன்ற கைகளால் தாங்குகிறவரும், கருணைக் கிருப்பிடமானவரும், கோடி மன்மதரின் அழகுவாய்ந்தவரும், ஸ்படிகமலைபோன்றவரும, சமுசாரத்திற்கு நேரே மருந்தானவராயுமுள்ள தேவேசரைத் தியானித்துத் துதித்தார். சந்திர சூடரே! உமக்கு நமஸ்காரம். சூலபாணியே உமக்கு நமஸ்காரம். பாசுகையரே! உமக்கு நமஸ்காரம். மேலான பரமாத்மாவே! உமக்கு நமஸ்காரம். வேதாந்தங்களா லுணரத்தக்கவருக்கு நமஸ்காரம். வேதங்களி லதிகாரணருக்கு நமஸ்காரம். உமையோடுங் கூடினவருக்கு நமஸ்காரம். காண்டலுக்கினியவருக்கு ஞானவடிவானவருக்கு நமஸ்காரம், நமஸ்காரம். இந்தச் சராசரமான உலகனைத்தும் எவரிடமிருந்துண்டானதோ, பிரக்ஞான சொரூபராயும், மாயை விடுபட்டவருமான அந்த உமக்கு நமஸ்காரம். விக்கினக் கூட்டங்களான இருட்டிற்குச் சூரியரான உமக்கு நமஸ்காரம். யானைத்தோலாடை யுடையவரும் சந்திரகலை... சூடினவருமான உமக்கு நமஸ்காரம். ஓ! சகல உல...கும் மாதாவே! உலகமயமானவளே! சுத்த விக்ஞான மூர்த்தியே! தேவியே! உனக்கு நமஸ்காரம். நமஸ்காரம். எவளுடைய கடைக்கண்ணின் வீக்ஷயால் ஊமைகளும்



இயல்பாகக் கவிகளாகின்றனரோ அந்தச் சரஸ்வதிக்கு நமஸ்காரம் நமஸ்காரம். சகல வேதங்களையும் வேறு பிரித்தவரும் தவசிகளுக்குள் மேலானவரும் விசுத்தமான ஞான தேகமுடையவருமான வியாச குருவிற்கு நமஸ்காரம். என்று முனிபுங்கவர் துதித்துச் சிரசில் அஞ்சலியைச் செய்து சுற்றிலுமுள்ளவரும், காயமனங்களின் வணக்கமுடையவரும், விபூதியணிந்த பரிசுத்தமான உடம்பையும் உருத்திராக்ஷமாலை யாபரணத்தையும் தொங்கும் ஜடாபாரத்தினையும் எப்போதுஞ் செய்யப்பட்ட அஞ்சலியையுமுடையவருமான முனிக்கூட்டத்தைப்பார்த்து அன்போடு சிவஸ்தானங்களைச் சொல்ல (சூதர்) ஆரம்பித்தார்.

சூதர் சொல்லல்.

முன்னொரு காலத்திலே உலக நாயகராய விஷ்ணு கைலாச பர்வதமான மந்திரத்தி(வீட்டி)லே பார்வதியோடுங் கூடினவரும், சுரர் சித்தர் இவர்களால் சேவிக்கப்பட்டவருமான உருத்திரரை மேலான அன்போடு நமஸ்கரித்து உலக நன்மையைக் கேட்டார் ஓ சர்வக்ஞரே! கிருபைக் கடலே! நித்தியானந்த வடிவினரே! உலகைந்தொழில் ஒன்றையே முக்கியமாக வுடையவரே! உலகிற்குப்பதியே! பூலோகத்திலே தேவரீருக்குப் பிரியமானவைகளாகவும் இரம்மியமானவைகளாகவும் எந்த ஸ்தானங்களி லிருக்கின்றனவோ ஓ! தேவேசரே! அவையனைத்தையும் காருண்யத்தால் எனக்குச் சொல்லவேண்டும். ஓ! சம்புவே! தேவரீர் திருவடித் தாமரையைவிட கதி காணப்படவில்லை, என்று உலகங்களைச் ஜெபித்த அந்த விஷ்ணுவால் கேட்கப்பட்ட சிவபெருமான் கொஞ்சஞ் சிரித்து (பகவானான பரமேசுரர்) சொன்னார்.

சிவன் சொல்லல்.

ஓ! தாமரை இதழ்போன்ற கண்ணரே! உலகத்திற் கினிமையானதும் நன்மையானது மானவிது உம்மால் கேட்

கப்பட்டது. இதற்குமுன் ஒருவருக்கும் சொல்லப்படாவதை உமக்குச் சொல்லுகின்றேன். எனது ஸ்தானம் வாராணசியும் அப்படியே கோதாவரி தீரமும் அப்படியே புண்ணியமான பஞ்சவடியும் ஸ்ரீசைலமும் தக்ஷிண கைலாசமும் எனக்குப் பிரியமானவையென்று தெரிந்துகொள்வீர். காஞ்சியும் பாடலாரண்யமும் மஹத்தான சிதம்பரபுரமும் திருவெண்காடும் மாயூரமும் வேதாரண்யமும் எனக்குப் பிரியமானவை. கமலாலய மென்னுந் திருவாரூரும் மகத்தான ஸ்ரீமத் திருவையாறும் மதுரையென்ற புண்யமான புரியும் அப்படியே இராமேசுவர மென்னும் பெயர் வாய்ந்ததும் மகா புண்யமான திருநெல்வேலியும் திரிகூடசிகரமென்பதும் (இது இலங்காபுரியைத் தனது ஓர் முடியால் தாங்கும் பர்வதமென்று இராமாயணமும் தில்லையிலுள்ள பெருமாள் சிகரமும் சிற்சபை சிகரமும் திருமூலர் சிகரமுங் கூடியது என்று ஆன்றோருங் கூறுகின்றனர்) இவை முதலிய வேறு அநேக ஸ்தானங்களும் ஓ! தாமரைக் கண்ணரே! எனக்குப் பிரியதரமானவைகளென்று தெரிந்துகொள்வீர். அங்ஙனமேனும் இப்போது இரகசியமானவற்றை விசேஷமாகச் சொல்லுகின்றேன். புண்டரீகபுரமும் விருத்தாசலமும் திருவண்ணாமலையும் அப்படியே சிவபுரமென்னும் பெயருடையதும் பாடலீபுரமென்னு நாமமுடையதும் கபிலரிஷியால் பூஜிக்கப்பட்ட மற்றோர் இந்திரகீலமென்னும் பெயர்வாய்ந்ததும் ஓ! செந்தாமரைக் கண்ணரே! அதிகப்பிரீதியைச் செய்வனவென்று தெரிந்துகொள்வீர். அருச்சுனன் யாண்டு பாசுபதாஸ்திரம் பெற்றனனோ ஸ்ரீமத் சிவபுரமென்னும் பெயர் வாய்ந்த அந்த க்ஷேத்திரம் மோக்ஷமளிப்பதாகத் தெரிந்துகொள்வீர். அவ்விடத்தில் நான் எப்போதும் சாந்நித்தியமாயிருக்கின்றேன். ஓ! ஹரியே! மற்றவற்றினின்றும் மேலானவிது



எனக்குப் பிரியதமமானது. ஓ! மாதவரே! உலகத்திலே இதற்கு மேலான ஸ்தானமில்லை. அவ்விடத்திலே நான் உமையான பார்வதியோடும் ஞானமுடைய கணேசஸ்கந்த புத்திரரோடும் எப்போதும் சாந்நித்தியமாயிருக்கின்றேன். முற்காலத்தில் அகஸ்தியர் முதலிய முனிகள் என்னைப் பூஜித்து வேதாந்த வாக்கியத்தாலுண்டான ஞானத்தையடைந்து மேலான மோக்ஷத்தை யடைந்தார்கள். ஓ! அச்சுதரே! சரஸ்வதியோடு பிரமதேவரும் என்னைத்தியானித்து அளவிட முடியாத ஐசுவரியத்தை ஆண்டு எனதனுக்கிரகத்தாலடைந்தனர். சிவபுர மென்னும் ஸ்தானத்தில் சூரியன் முதலிய எல்லாக்கிரகங்களும் அம்பிகையோடுங் கூடிய என்னைத் தியானித்துத் தமததிகாரங்களை அடைந்தன. நீரும் ஓர்காலத்தில் என்னைப்பக்தியோடு ஆண்டுப்பூஜித்து இராக்ஷஸ சிரேஷ்டர்களை மூன்றுலோக நன்மையின் பொருட்டு ஜெயிக்கப்போகின்றீர். சத்துருவைக்கொல்லுவதும் ஆதித்தியனுக்குச் சமானமானதுமான சக்கரத்தை என்னிடமிருந்து நீர் அடைந்து எனது பூஜையின் வலுவால் தேவசத்துருமுதலியவர்களை ஜெயிக்கப்போகின்றீர். ஓ! விஷ்ணுவே! கிருபையின் வலுவால் நான் உமக்குப் பிரசந்நமாவேன். ஆண்டுச்செய்த ஜெபம் யாகம் தானம் எல்லாங் கோடிகுணமாகின்றன. அவிமுக்த முதலியதேசங்களில் கோடி ஜெபங்களினால் எந்தப்பலம் அடையப்படுகின்றதோ ஓ! விஷ்ணுவே! அந்தப்பலம் ஒரு ஆவிருத்தியா (ஒருதரத்தினை)லுண்டாகின்றது. கோதாவரிமுதலிய தேசங்களிலும் நைமிசாரண்யமுதலிய வனங்களிலும் விதியோடு செய்யப்பட்ட ஆயிரம் ஆகுதிகளால் எந்தப்பயனுண்டாகுமோ அவிமுக்த முதலிய தேசங்களில் கோடிஜெபங்களால் எந்தப் பலமுண்டாகுமோ அந்தப்பலத்தை ஆண்டொரு ஆகுதியாலேயே எப்போதும் மனிதன் அடைகின்

றுன். கங்கைமுதலிய புண்யதீர்த்தங்களில் சூரிய சந்திர கிர
கணகாலங்களில் மேன்மையான வேதவித்துக்களுக்கு மிகு
தியாகக் கொடுக்கப்பட்ட தனங்களால் (தனங்களைக்
கொடுத்தலால்) எந்தப் புண்யம் அடையப்படுகின்றதோ
அது ஆண்டுப் பணமாத்திரத்தால் (ஒருபணத்தைக்கொடுத்
தல் மாத்திரத்தால்) அடையப்படுகின்றது. ஈண்டுச்சந்தேக
மில்லை. ஓ! ஹரியே! என்னால் சத்தியமாகச் சொல்லப்பட்
டது. ஓ! லக்ஷ்மிநாயகரே! கபிலர்முதலிய முனிசிரேஷ்டர்
வேறுஸ்தானங்களில் செய்யமுடியாத தீவிரமான தவங்
களால் உத்தமமான சித்தியை அடையாமல் உத்தமோத்
தமமான சித்தியையளிக்கும் க்ஷேத்திரத்தை நந்திகேசர்
மூலமாகக்கேட்டு அப்போது சிவபுரத்தையடைந்து என்
னைத்துதித்தும் வணங்கியும் எனதநுக்கிரகத்தால் அநாயாச
மாகச் சமுசாரத்தைத் தாண்டினார்கள். எப்படி எல்லாமந்
திரங்களிலும் பஞ்சாக்ஷர மந்திரம் மேலானதோ எப்படி
எல்லா வேதங்களிலும் இருக்வேதம் மிக மேலானதோ
ஓ! தாமரைக்கண்ணரே! எல்லாத்தேவர்களிலும் நான் எப்
படிச் சிரேஷ்டனோ அப்படிச் சிவபுரமென்ற எனது
ஸ்தானம் எல்லாவற்றினும் உத்தமோத்தமமானது. ஆகை
யால் எனக்குப் பிரீதியைக்கொடுக்கும் ஸ்தானம் உலகத்
திலே அதற்குச்சமமாயில்லை. சுருதிஸ்மிருதிகளில் காசி
முதலிய எந்தத்தேசங்கள் கேட்கப்படுகின்றனவோ ஓ!
மாதவரே! அவற்றினுள்ளும் எனக்கு அது மிகப்பிரிய
மானதென்று தெரிந்துகொள்வீர். அவ்விடத்திலே முன்
னொருகாலத்தில் பிரமதேவர் உலகங்களையெல்லாஞ் சிருஷ்
டிக்க விச்சையுடையவராய் ஓ! கேசவா! சரஸ்வதியோடுங்
கூடப் பூஜித்தார். (அதனால்) சந்தோஷித்திருக்கின்றேன்.
அப்போது ஆதரவால் பக்தியோடு என்னைப் பிரார்த்
தித்தார். பிரமதேவர் பூமியில் தண்டம்போல் வணங்கிச்



செய்யப்பட்ட அஞ்சலியஸ்தராய் ஓ! பகவானே! உண்
டான, உண்டாகப்போகின்றவைகளுக்கு ஈசனே! உலகங்
களுக்கெல்லா மொரேகாரணனே! உன்னை இவ்விடத்
திலே எப்போதும் பொற்றாமரைகளாற் பூஜிக்கிறேன்.
அம்பிகையோடும் இரண்டு புத்திரர்களோடும் ரிஷபத்
தோடும் (அதிகார) நந்தியோடும் சகலபிரமதர்க (கணநா
தர்க) ளோடும் எப்போதும் சாந்நித்தியமுடையவராக
இருக்கவேண்டும் என்று ஓ! லக்ஷ்மிபதியே! காயமனங்க
ளின் வணக்கமுடைய பிரமதேவரால் வேண்டிக்கொள்ளப்
பட்ட நான் கருணையின்வலுவால் அங்ஙனமேயாகுக
வென்று பிரமதேவருக்கு வரமளித்தேன். அதனால் நான்
அவ்விடத்தில் தேவியோடு எல்லோராலும் எப்போதும்
மானஸ ஸரோவரத்திலுண்டான பரிசுத்தமான பொற்றாம
ரைகளைக்கொண்டு மேலான ரிஷிகளால் பூஜிக்கப்பட்டும்
துதிக்கப்பட்டும் (நான்) அம்பிகையோடு வசிக்கின்றேன்.
ஸ்தானத்தின் வைபவத்தையறிந்து எம்மனிதர் ஆண்டு
வசிக்கின்றனரோ (அவர்) என்னுலகத்தில் அதிகபூஜையைப்
பெறுகின்றனர். ஈண்டு விசாரிக்க வேண்டிய காரியமில்லை.
ஈண்டு இலிங்கத்தில் நான்குயுகங்களிலும் சாந்நித்திய
மாயிருந்து எப்போதும் சேவைசெய்பவருக்கு விரும்பிய
வனைத்தையும் சீக்கிரங்கொடுக்கின்றேன். வேறு எல்லா
ஸ்தானங்களிலும் எனக்கு ஒவ்வோர்காலத்தில் நிலைப்புண்
டாகின்றது. புண்டரீகபுரத்திலும் சிவபுரமென்பதிலும்
நான் எப்போதும் அம்பிகையோடு வசிக்கின்றேன். ஓ!
லக்ஷ்மி நாயகரே! இதனை மேலாகத்தெரிந்துகொள்வீர்.
ஆண்டு எனக்கு வெளிப்படுதலும் மறைதலும் ஒருபோது
மில்லை. ஓ! அச்சுதரே! ஸ்தானத்தின் வைபமுழுவதும்
சுருக்கமாகச் சொல்லப்பட்டது. ஆண்டு என்னை நீர் பூஜித்
துத் திதியின்புத்திரர்களை வெல்வீராக.

### சூதர் சொல்லல்.

சாக்ஷியாயும் சகலவுலகப்பிரபுவாயுமுள்ள சம்பு இப்படி விஷ்ணுவிற்குத் திருவாய்மலர்ந்தருளிப் பார்வதியோடு கூடியவராய் இனிமையான உத்தியானத்திற் சென்றார். பகவான் சகலதேவேசரான விஷ்ணு இங்ஙனம் சம்புவின் பாற்கேட்டு இனிமேல் தைத்தியர்களை வதைக்கும்வழியை ஆலோசித்துக்கொண்டு வைகுண்டத்தையடைந்தார்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில் ஸனத்குமாரஸம்ஹிதையில் சிவபுரிபுராணத்தில் க்ஷேத்திரமகிமை யுரைக்கும் முதலத்தியாயம் முடிந்தது.

---

## இரண்டாவது அத்தியாயம்.

### க்ஷேத்திர வெல்லை யுரைத்தல்.

### முனிகள் வினவல்.

ஓ! வியாபகரே! அந்தச் சிவபுரம் யாண்டுள்ளது? முன் யாரால் உண்டுபண்ணப்பட்டது? ஆண்டு எம்முனிகள் பூர்வம் சங்கரனைப் பூஜித்தார்கள்? பகவானான பிரமதேவர் எதன் பொருட்டுக்கடினமான தபசைச் செய்தார்? இவர் எந்தச் சித்தியை யடைந்தார்? அந்த க்ஷேத்திரம் என்ன சிறப்புடையது? ஓ! வியாபகரே! காசிமுதலிய தேசங்களிலும் (இது) எப்படிப் பிரியதமமாகின்றது? எவ்வளவு நீளத்தையும் அகலத்தையுமுடையது? என்ன வைபவமுடையது? என்ன மேலானஉயர்வை யுடையது? அவையனைத்தையும் விஸ்தாரமாகத் தேவரீரிடமிருந்து கேட்கவிரும்புகின்றோம்.

### சூதர் சொல்லல்.

காவேரிக்கு வடக்கும் கிழக்குச்சமுத்திரத்திற்கு மேற்கும் விருத்தகங்கைக்குத் தெற்கும் *இந்திரகீலத்திற்குக் கிழக்கும் ஸ்ரீஹரமென்னும் புண்டரீகபுரத்திற்கு அக்கினி திசையும் ஸ்ரீகாளிகையென்னும் (இக்கிராமதேவதையாகிய அரசாயி அம்பா) க்ஷேத்திரத்தின் ஈசான்யதிசையுமாகிய இவற்றின் மத்தியில் மிகமேலானதாயும் சகலபாபங்களைக் கெடுப்பதாயும் அந்தக்ஷேத்திரமிருக்கின்றது. (அது) மகாபாதகக்கூட்டங்களால் அடுக்கமுடியாததாயும் மிக விளங்குவதாயும் ஆண்டுச் சம்பகம், புன்னைகம், பாதிரி, விருக்ஷங்களால் விளங்குவதாயுமுள்ளது. (அது) பெரிய அலைகளையுடையனவாயும் வாசனையுடையனவாகச் செய்யப்பட்ட திக்குகளாகின்ற முகங்களையுடையனவாயுமுள்ள ஏரிகளா

---

* இது இந்திரனால் பூஜிக்கப்பட்ட சிவதலம்.

ளும், மிகத்தெளிந்த மங்களமான நீரையுடைய வாபீகூபத
டாகங்களாலும், தாமரைகளாலும், மகரந்தத்தேனை யுண்டு
மதர்த்த வண்டுகளாலும், நீலோத்பலம் நெருங்கிய குட்டை
களாலும், வண்டின் சத்தங்களாலும், முனிகளுடைய ஆசிர
மங்களாலும், எல்லாத் திக்குகளிலும் சூழப்பட்டுள்ளது.
(அது) தென்னை, மா, பலா, இருப்பை, அகில், தும்பை,
பச்சிலை மரம், பனை, கூந்தற்பனை, தாழை, எலுமிச்சை,
சுரபுன்னாகம், முல்லை, குங்குமப்பூச்செடி, பழமுண்பாலை,
பாதிரி முதலியவைகளும் புரசு, புளி, பெருநாவல், பில
க்ஷம், அரசு, ஆல் முதலியவைகளும், சேங்கொட்டை,
நெல்லி, தட்டைகுண்டுமணிச்செடி, மகிழம், பொன்னிறப்
பூவுள்ள முட்குறிஞ்சி, மலையகத்தி, பாக்குமரம், நாகப்பூ
மரம், காசிக்கட்டிமரம், முதலிய பலவித விருக்ஷங்களும்,
பழமுடையனவாய் நான்குபக்கங்களிலும் சூழ்ந்து விளங்
கப்பட்டுமுள்ளது. தில்லைவனமெனப்படுவதும், புலி, கரடி,
இவற்றின் கூட்டங்களுடையதும் கொழுத்தவேட்டை மிரு
கம் நிரம்பினதும் பசு பக்ஷிகளால் மிகச் சத்திக்கப்பட்ட
தும் சிம்மங்களின் ஹுங்காரங்களாலும், கொழுத்த
யானைக்கூட்டங்களின் சத்தங்களாலும், பயங்கரமானதாய்,
வால்மான் (சாமரங் கொடுப்பது) காட்டுப்பசு, மான்,
கட்கம், பன்றிமுதலிய கூட்டங்கள் எங்குஞ் சஞ்சரிக்கின்ற
மையின் இராக்ஷசர்களுக்குங் கிட்டக்கூடாததாயுமிருக்கின்
றது. அதன் மத்தியில்; கிரக, வேதாள, சாகினி, டாகினி
களாற் சூழப்பட்டதும் மகேசுரன் ஆக்ஞையால் க்ஷேத்திர
பாலரால் இரக்ஷிக்கப்பட்டதுமான அந்த க்ஷேத்திரம்
பாபஜெந்துக்களின் பாபக்கூட்டங்களைப்போக்குவது. சகல
புண்ணியங்களின் பலனைக் கொடுப்பது. ஆபத்து என்
னுங் காட்டிற்குக் காடாக்கினியாயுள்ளது. ஓ! சுத்தமான
விரத முடையவர்களே! (அது) காமக் குரோத முதலிய



தோஷங்களால் அடுக்கக்கூடாதது. ஓ! ஆஸ்திகர்களே!
ஆண்டு வசிப்பவர்களுக்கு மரணத்தாலாகும் பயம் யாண்டு
மில்லை. க்ஷேத்திரங்களுக்குள் உத்தமமான க்ஷேத்திரம்.
மனிதர்களுக்குச் சகல சித்தியையுஞ் செய்வது. காசி முத
லிய தேசங்கள் முக்தி காரணமாயிருக்கின்றன. இது சீக்
கிரம் சித்தியைக் கொடுப்பது என்பதாக ஆகமங்கள் கூறு
கின்றன. விராட் புருஷனுடைய மிக்க அழகிய பரிசுத்த
மான இருதய தாமரையில் பாபமற்ற முனிகள் அதை
மேலான வீடு என்கின்றனர். (அது) வேதவித்துக்களான
முனிசிரேஷ்டர்களால் மிக்க அன்போடு பூஜிக்கப்பட்டது.
சகலவுலகங்களின் இனிமையை விரும்பும் சிவபிரானாலேயே
உண்டாக்கப்பட்டது. சிவபிரானாலேயே அவிமுக்தம், சிவ
புரம், விருத்தாசலம், திரிகோடிகை (ஆகிய) இவைகள்
முக்திஸ்தானங்களாக உண்டு பண்ணப்பட்டன. மற்றை
ஸ்தானங்களைப்போல் பிரமதேவரா லுண்டுபண்ணப் பட
வில்லை. சிவபிரான் வியாபகனாயினும் ஓ! துவிசர்களே!
கண்ணாடி முதலியவற்றிற்போல நேராக ஓ! முநீசரே!
மேலானவற்றில் எப்போதுமே பிரதிவிம் பிக்கின்றான். சிவ
பிரானுடைய மிகமேலான பிரசாதத்தையேனும் பிரீதியை
யேனும் எவர் விரும்புகின்றனரோ? புண்யசாலிகளான
எந்த ஜனங்கள் சாஸ்வதமான பதத்தை விரும்புகின்ற
னரோ.? ஓ! விப்பிரேந்திரர்களே! அவர்கள் மேலானபக்தி
யோடுங் கூட ஆண்டு வாசஞ்செய்ய வேண்டியது. கண்
ணுவர், பராசரர், ஜாபாலி, கௌதமர், வசிஷ்டர், வாமதே
வர், கஸ்யபர், புளகர், பரத்துவாஜர், அகஸ்தியர், ஜமதக்
கினி, ஜடாலகர், அஷ்டாவக்ரர், ஆணிமாண்டவ்யர், நார
தர், உடுலோமகர், வேத வேதாங்கங்களின் கரையைக்
கண்ட இவர்முதலிய முனிவரர்கள், ஆண்டுச்சர்வேசுரத்வம்
தேவத்துவம் மூன்றுகண்கள் ஆகியவற்றையுடைய இலிங்

கத்தைச், சதருத்ரீய மந்திரத்தினாலும், பலவிதமான ருத்திரசூக்தங்களாலும், திரியம்பகமந்திரத்தினாலும், பஞ்சப்பிரம்மத்தைக் கூறுபவைகளாலும், உருத்திரோபநிஷத்தோடுங்கூடின பஞ்சாக்ஷர மந்திரத்தினாலும், அப்படியே புருஷசூக்தத்தினாலும், (ஈசனை) அபிஷேகஞ்செய்துவைத்தார்கள். கருப்பூர சந்தன முதலியவற்றாலும், தூபதீப உபசாரங்களாலும், தாமரை, வில்வம், ஊமத்தை, அறுகு முளையின் புதியவிதழ்கள், இவைகளாலும் ஈசானனைச் சிவன் ருத்திரன் முதலிய நாமங்களால் அருச்சித்தார்கள். மகா நைவேத்தியத்தை ஈசனுக்கு முன்வைத்து நிவேதித்தவரானார்கள். சகல வுபநிஷதங்களிலுள்ள தோத்திரங்களினால் பலவிதமாகத் துதித்தார்கள். பின்னர்க் கருணையிலுத்தமரான சிவபெருமானார் அவருக்குப் பிரசந்நரானார். மனந்திருந்தப்பெறாதவர்களுக்கு அடையமுடியாத சொரூபத்தைக் காண்பித்தார். (அது) கோடிசூரியப் பிரகாசமானது. கோடி சந்திர சீதளமானது. மேலான ஆனந்தத்தை நன்றாகக் கொடுப்பது. சத்தாயுஞ் சித்தாயுமுள்ளது. உவமையற்றது. பிரகாசங்களின் கூட்டமானது. அதனை முனிகள் ஞானக்கண்ணால் பார்த்து, ஓ! விப்பிரர்களே! கிரந்தி (அகங்காரத்திற்கு மான்மாவிற்கு முள்ள தாதாத்மிய வடிவானமுடிச்சு) விடுபட்டவர்களாய் அதிக சந்தோஷமுடையவரானார்கள். அதேவிதமான தேவியையுங்கூடப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் முனிகள் நன்றாக அருச்சித்தார்கள். இரண்டுபக்கங்களிலுமுள்ள இரண்டு புத்திரர்களையும், நந்திகேசுரரையும், விருஷபத்தையும் பிரமதர்களின் அதிபதிகளையும், அப்படிப்பட்ட பூஜையினால் மிகவும் உபாசனையைச் செய்தார்கள். ஆண்டு அந்த முனிவரர்கள் மூன்று இரவு வசித்து இந்தப் பிரகாரமாகவே தினந்தோறும் நிந்தையற்ற பூஜையைச் செய்தனர். பிரசா



த்தா லடையப்பட்ட விக்ஞான முடையோராய்ச் சிவனையும் சிலையையும் நமஸ்கரித்துச் சிவக்ஞானத்தையும் அடைந்து எல்லோரும் வந்த வண்ணமே சென்றனர். இந்தப்படி ஏனைய முனிவரர்கள் சிவபுரேசரான சிவனை நமஸ்கரித்துத் துதித்து வருத்தமின்றிச் சமுசாரக்கட்டினின்றும் விடுபட்டார்கள். முனிவரான நீங்களும் சிவபுரமென்னும் ஸ்தானத்தைப் பிறவிக்கட்டை நீக்கிக்கொள்ளச் சீக்கிரமாகவே சேவிப்பீர்களாக.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸநத்குமார ஸம்ஹிதையில் சிவபுரிபுராணத்தில்
க்ஷேத்திரத்தின் எல்லை யுரைக்கும்
இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

## மூன்றாவது அத்தியாயம்.

### பிரமதேவர் படைப்பாற்றலை யடைதல்.

ஓ! வேதவித்துக்களே! அளவிடமுடியாத தேஜஸையுடைய பிரம தேவரின் தவத்தின் காரணத்தைப் பின் நன்றாகச் சொல்லுகின்றேன், நீங்கள் கேட்பீர்களாக. முன்னொருகாலத்தில் உலகைப் பரிபாலிப்பவரும், பகவானுமான, பிரமதேவர் சிருஷ்டிக்குந்தன்மையை அடைந்து இது முன்போலுண்டாகுக என்று மனத்தால் நினைத்தார். இவர் சிருஷ்டிக்கத்தக்க வுலகைக் கொஞ்சமும் யாண்டும் முன்னிலையில் பார்க்கவில்லை. வாடியவதனமுமுடையவராய் மனதில் நினைத்தார். பலபிறவிகளிலியற்றிய புண்ணியங்களாலும் செய்யமுடியாத தவங்களாலும் எவ்வாற்றாலோ (என்னால்) சிருஷ்டிக்குக் கருத்தாவாயிருக்குந்தன்மை அடையப்பட்டது. இது சுரர்களாலும் அசுரர்களாலும் அடையமுடியாதது. சிதானந்தகந வடிவமான சம்புவின் அநுக்கிரகப்படியே சிருஷ்டிக்க முயன்றவென்னால் அற்பமுஞ் சிருஷ்டிக்கப்படவில்லை. உண்டாக்குஞ் சக்தி எனக்கு ஏனில்லை? எனக்குத் தடைசெய்பவர் யாவருளர்? யானெனினோ? முதலுண்டானவன். என்னாலனைத்து மியற்றப்படப்போகின்றன. என்று சிந்திக்கின்ற அவருக்கு ஓர்மாதுகாணப்பட்டாள். சுத்தஸ்படிககாந்தியுடையவள். மூன்று கண்களையுடையவள். அவள் நான்கு புஜங்களையுடையவள். சகல ஆபரண அலங்கார முடையவள். மேலான வஸ்திரம், மாலை, சந்தனமுடையவள். பாதிச்சந்திரனைச் சூடியவள். இத்தகையாளை உலகைப்படைப்போர் பார்த்து, ஓ தாமரையிதழையொத்த கண்களையுடையவளே! நீயார்? என்று இந்தப்பிரகாரமாகச் சந்தோஷப் பட்டவராகக் கேட்டார். ஓ பிரமதேவரே! எனது பிறப்பை ஆனந்தவடிவான சம்பு



வினிடமிருந்து தெரிந்துகொள்வீராக. உலகத்தில் என்னைச் சரஸ்வதியென்றும், என்னைச் சத்தசொரூபியென்றும் சொல்லுவார்கள். ஞானசொரூபியாகவென்னைச் சம்பு சிருஷ்டித்து எனக்குப் பெயரையும் தொழிலையும் விதித்து ஓ அழகுடையவளே! தேவியே! இந்தப் பிரமதேவர் உன்னால் சக்தியுடையவராயிருக்க. இதோ ஓர் களங்கமற்ற சோதிக்கூட்டம் காணப்படுகின்றதல்லவா? அதில் நான் எப்போதும் எனது சத்தியோடு தனிமையாக நிற்கின்றேன். ஆண்டுப் பிரமதேவரோடு என்னைப் பூஜிப்பாயாக என்று எனக்குச்சொல்லுகின்றவராய் ஓ வியாபகரே! உமது சமீபத்திற்கு அப்பரமேசர் அனுப்பினார். அதனால் ஈண்டு யான் சத்தியாயிருக்கின்றேன். நீர் என்னால் சத்திமானுவீர். பரமேசரது பூஜையின்பொருட்டுத் தேஜசோடுங் கூடின அவ்விடத்திற்கு நாமிருவரும் போவோமாக. ஓ துவிஜசிரேஷ்டர்களே! அவளுடைய இந்த வார்த்தையைக் கேட்டு அவளோடுங்கூட அக்ஞான இருட்டைப் போக்குவதாயும் கோடிசந்திர சூரியாக்கினி சொரூபமாயுமுள்ள பிரகாசக்கூட்டம் எந்த ஆகாயத்தின்மத்தியிலிருக்கின்றதோ அந்த இடத்திற்குச்சென்றனர்.

### முனிகள் வினவல்.

முதலில் பிரமதேவரொருவரன்றோ? விருந்தனர்! பின்னர்ச் சத்தியுண்டானாள். இருக்கின்ற இவ்விரண்டுபேர்களாலும் உலகமுழுவதும் பின்னரன்றோ உண்டாக்கப்படப்போகின்றது. ஈண்டிடையிற் சிவபிரானாற் சொல்லப்பட்ட பிரகாசக்கூட்டம் எப்படி யுண்டானது? ஓ சூதரே! சகலார்த்தங்களையு முணர்ந்தவரே! அப்படிப்பட்ட இந்தச் சமுசயத்தை யழிப்பீராக.

### சூதர் சொல்லல்.

உலககாரணரான சிவபிரான் நித்தியராயிருப்பதுபோல அவரால் எல்லாவுலகங்களிலும் மேலான நான்குஸ்தானங்

கள் நித்தியமாக வுண்டாக்கப்பட்டன. உலகமழியும்போது மழிவதில்லை. உலகுள்ளபோது முண்டாவதில்லை. வாராணசியும் விருத்தாசலமும் அப்படியே மகத்தான சிவபுரமும் திரிகோடிகை யென்பதுமான இந்நான்கு ஸ்தானங்களும் நித்தியமானவை. அவை ஜோதிக் கூட்டவடிவாக, ஓ துவிஜர்களே ! எப்போதும் விளங்குகின்றன. பின்னர் அப்படியே பிரமதேவர் எழுத்து வடிவான சரஸ்வதியோடுங்கூட அஞ்சலியஸ்தராய் ஸ்தானத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்காரஞ்செய்தார். எப்படி ஆகாயத்தில் சூரியனோ அப்படி அது விளங்குகின்றது. பிராகாரம் கோபுரம் உள்ளேயுள்ள அறை திண்ணை இவற்றையுடையதாய், ஓ துவிஜர்களே! தேஜோமயமாய் மிக விளங்குவதை அப்போது பார்த்தார். அந்தப்பிரகாரமாகவே வண்டுக்கூட்டங்களால் ரீங்காரஞ்செய்யப்பட்ட தாமரைப்பூக்களையுடையதாயும், உயருகின்ற அலைகளால் விழுங்கப்பட்ட படிவரிசைகளையுடையதாயும் இருக்கின்ற தீர்த்தத்தையும், ஆநந்தமாகிய அலையால் அசைக்கப்பட்ட மனமுடையவராய்ப் பிரமதேவர் பார்த்தார். அந்தச்சரஸ்வதியோடுங்கூட வியப்பையடைந்த மனமுடையவராய் (அதில்) மூழ்கினார். ஆகாயத்தின் மத்தியிலுள்ளதாயும் பிரமதர்களால் சூழப்பட்டதாயும் உள்ள அந்த ஸ்தானத்திற்குப் போனார். பிரம்பைக் கையிலுடையவராய் வாயிற்படியிலுள்ள நந்திதேவரால் உத்தரவளிக்கப்பட்டும் அம்பிகையோடுங் கூடின சிவனையும் இரண்டு குமாரர்களையும் தரிசிக்கவில்லை. பலவித வடிவங்களையுடைய பிரமதர்களை மாத்திரம் பிரமதேவர் பார்த்தார். ஓ பிரமதர்களே! நீங்கள் ஈண்டு எதன்பொருட்டுச் சுற்றிலும் நிற்கின்றீர்கள்? இவ்விடம் உள்ளே சூனியமாயிருக்கின்றது. தேவனெனினோ ஈண்டுக் காணப்படவில்லை. என்ற அவரது வாக்கியத்தைக்



கேட்டுச் சிவபிரானது ஏவலைச்செய்கின்ற பிரமதர்கள் கிருபையினால் பிரமதேவருக்குப் புன்னகையோடு சொன்னார்கள்.

### பிரமதர் சொல்லல்.

யனந்திருந்தப்பெறாத உம்மையொத்த அனைவர்களாலும் சிவபிரானார் காணக்கூடியவரல்லர். பழைமையாயும் பரிசுத்தமாயுமுள்ள வேதாந்தங்களாலு முணரக்கூடாதவர். சிவபிரானுடைய காளகண்டத்திலோ பிரமவிஷ்ணு முதலிய தேவர்களின் சிரசாகிய கபாலமாலைகளின் வரிசைகள் விழித்துக்கொண்டிருக்கின்றன. வீரரையழித்தவரும் மூன்றுகண்ணுடையவருமான உமையின் நாயகரை யாவரறிவார். பரமாயும், சம்புவாயும் கருணாரசக்கடலாயும் பக்தியாலறியத்தக்க வராயுமுள்ளவர். எதன் பொருட்டு எங்கள் முன்னிலையில் மோகமடைந்தவராய் அவசரத்துடன் பிதற்றுகின்றீர். ஓ! பிரமதேவரே! இப்போது உமையின் நாயகரைப் பார்க்க விருப்பமுண்டானால் தாமரையிதழையொத்த இந்தச் சரஸ்வதியோடும் பக்தி பாவனையுடன் தவஞ்செய்வீராக வென்று நந்திகேசரை முதன்மையாகக் கொண்டுசெல்லும் பிரமதர்முதலியவர்கள் சொன்னதைக்கேட்டு மோகமற்றவராய்ச் சம்புவின் உபாசனையைச் செய்தார். மலர்ந்த தாமரையையுடைய கிருபாசமுத்திரமென்னு நாமமுடைய தீர்த்தத்தில் வாக்குவடிவான தேவியோடு ஸ்நானஞ்செய்து சஞ்சலமுடைய மனதை நிறுத்தி, இருதயதாமரையின் மத்தியிலுள்ள கர்ணிகையின் நடுவிலுள்ளவராயும், நான்கு புஜங்களையும் அசைகின்ற சந்திரகலை பொருந்திய சுருட்டைமயிரையு முடையவராயும், நீலகண்டத்தையும் சந்திரகாந்தியையும் உடையவராயும், சமானமற்றவராயுமுள்ள சிவஜோதிக்கூட்டமானவராயும், அப்படிப்பட்ட அவரது தேவியோடு தியானிப்பவராய் நெடுங்காலமிருந்தார். உபாசித்த அவரது மனம்

சரத்காலத்தில் அத்தியந்தஞ் சேறில்லாத குட்டையின் நீர்போல் சீக்கிரம் அதிக நிர்மலமானது. சித்தத்தின் பரிபக்குவத்தைச் சீக்கிரமாய்ப் பரிசோதித்து ஆகாசத்தின் மத்தியிலுள்ள சம்புவான தேவேசர் சாந்தமனமுடைய பிரமதேவருக்குப் பிரசாதமளித்தார். (அப்போது) பேரி மேள தாளங்களின் அற்புதமான சத்தத்தைக்கேட்டார். அப்படியே வீணை குழல் முதலிய வாத்தியநாதம் பெரியதாக வுண்டாயிற்று. திக்குக்கூட்டம் செவிடாக்கப்பட்டதாக மத்தளம் தம்பட்டம் இவற்றின் சத்தமும் சங்குகள் சல்லரிகள் இவற்றின் சத்தங்களும் பரவி யெழுந்தன. அநேக வாத்தியங்களின் கோஷமானது அதிகமாக உண்டானது. மகாநாதத்தைக்கேட்டுப் பிரமதேவர் தியானத்திலிருந்து வெளிப்பட்டார். தடாகத்தாமரைப்பூக்களைப்போல் வரிசையான கண்களைத்திறந்து தாமரையிலுதித்தவர் மனதின்விருத்தியை வெளியிற்செலுத்தினர். எண்ணமுடியாத சூரியக்கூட்டம்போல், சந்திரகலையைத் தரித்த சிவபெருமான் மேலான ரிஷபத்தின்மீது வெளிப்பட்டார். நான்குமுகப் பிரமதேவரானவிவர் தேவியோடும் அதிவிரைவாக வெழுந்து சோம்பலில்லாமல் தண்டம்போல் அடிக்கடி நமஸ்காரஞ்செய்தார். சிரசில் இருகரங்களையுங் குவித்துப் பாதமுதல் சிரசுவரையிலுந் தரிசித்தார். தேவதேவராயும், உலக காரணராயும் ரிஷபத்தின் மேலுள்ளவராயும், சரத்கால நூறு சந்திரகாந்தியுடையவராயும், வெள்ளிமலைக்குச் சமானமானவராயும், களங்க மற்ற சந்திரப்பிரகாசம் பொருந்திய முகாரவிந்தத்தையும் பிறைச்சந்திரன் விளங்குஞ் சிரசையும் மின்னல்போன்று பொன்னிறம்வாய்ந்த ஜடையையும் பாதிச்சந்திரனையொத்த அழகிய நெற்றியில் திலகம்போன்ற கண்ணையும்மிகவு நீலநிறம் வாய்ந்த இமைக



ளோடுங்கூடிய புருவக்கொடியின் விளக்கமுடையவராயும், படத்தின்மணி பிரகாசிக்கின்ற ஆதிசேஷனாகியகாதிலுள்ள குண்டலத்தையுடைமையால் விளங்குகின்ற ஆச்சரியமான இரு கன்னங்களால் மனதிற்குப் பிரியமானவராயும்; நிச்சயஞ்செய்யப்பட்ட தாமரையின் அழகு வாய்ந்து நீண்ட கண்களையும், எள்ளின்பூவின் அழகைக் கீழ்ப்படுத்துகின்ற நாசியையும், முகத்தின் அழகாகிய பிரவாகத்திற்குத் தடாகமாகிய மோவாய்க் கட்டையின் பிரகாசத்தையும், செந்தாமரை இதழின் காந்தியைச் செய்யும் அழகிய அதரத்தையும், புன்சிரிப்பாகிய முளை விளங்கும் தளிர்போன்ற உதட்டின் சேர்க்கையின் ஜொலிப்பையும், துயரற்ற கண்டத்திற்பற்றியுள்ள கொடிய விஷமாகிய மணிப்பிரகாசத்தையும், முறையே வரமளிப்பதும் அபயமுத்திரையுடையதுமான செந்தாமரைப்போன்ற இரண்டுகைகளையுமுடைவராயும், வேறிரண்டு கைகளால் மான்குட்டியையும், பரசாயுதத்தையும், தாங்குகின்றவராயும்; ஆதிசேடன் முதலிய சர்ப்பங்களின் மணிகள் கோத்த கங்கணத்தாலான அலங்காரத்தையும், நான்கு புஜங்களையும், உயர்ந்த மார்பினிடத்தில் முத்து மாலையையும், கோடி மன்மதரின் அழகைப் பழிக்கும் அங்கங்களின் காந்தியையும், மூன்று மடிப்பு மடிக்கப்பட்டு உயர்வாய்ப் பருத்து விளங்குகின்ற வயிற்றையும், மிகவுயர்ந்த நாபியையும், சுற்றப்பட்ட புலித்தோலாடையையும், அழகாகிய அமிர்தமொழுகுகின்ற திரக்ஷியான துடை விளங்கும் இடையையும், மாமிசம் பருத்தலினால் வட்டமான முழங்கால் சில்லியையும், பாதிச் சந்திரனையொத்த நகக்கூட்டங்களையும், செந்தாமரையைக் கீழ்ப்படுத்துகின்ற இரண்டு திருவடிகளின் அழகையுமுடையவருமான சிவபெருமானையும்; அவரது இடதுபாகமாகிய இருப்பிடத்தையும், வண்டு மொய்க்கும் அழகிய

கூந்தலையும், சுத்தமான ஞானவடிவத்தையு முடையவளும்; ஆனந்த இரஸப்பிரவாகத்தையும், உதயமாகின்ற அநேககோடி சூரியகாந்திபோன்ற செந்நிறத்தையும், மலர்ந்த தாழம்பூவின் இதழ்களால் மிகவுயர்ந்த மேகம்போன்ற கூந்தலையும், இடைவெளியில்லாமல் குங்குமம் விளங்குகின்ற உச்சியிலுள்ள வகுட்டையும், முல்லை யரும்பின் அழகை கீழ்ப்படுத்தும் தந்தவரிசையையும், சிறிதுமலர்ந்த ஆநந்த புன்சிரிப்புஅமைந்த சிவந்த அதரத்தையும், பருத்த முத்துமாலைகளின் அழகு விளங்குகின்ற மடிப்புடைய கழுத்தையும், விலையற்ற பொன்சேர்த்து மாணிக்கத்தாற் செய்யப்பட்ட கண்டாபரணாலங்காரத்தையும், சமமாய்ப் பருத்து நெருங்கிஉன்னதமான ஸ்தநகலச பாரத்தாலாகிய வளைவையும், இரத்தினம்பதித்த காதோலை, கடக முதலியவற்றின் அலங்காரத்தையும், செந்நிறப் புடவையால் மறைக்கப்பட்ட அகன்ற கடிதடத்தையும், ஒலிக்கின்ற சுவர்ணங்கலந்து மாணிக்கத்தினாற்செய்த கிங்கிணியுடைய ஒட்டியாணத்தாலாகிய விளக்கத்தையும், பலவிதமான மணிகள்கோத்த நூபுரங்களால் விளங்கும் பாதத்தையு முடையவளும்; சகலாபரணங்களோடுங் கூடியவளும், சகல அழகுகளாலும் சேவிக்கப்பட்டவளும், சகல வுலகங்களுக்கும் மாதாவானவளும், சகல வித்தைகளையும் கொடுப்பவளுமான அம்பிகையையும், அதற்குமேல் மேலான யானைமுகத்தை யுடையவரும், விரோதியை யடக்கும் ஆறுமுகத்தை யுடையவரும், சகலாபரணங்களோடுங் கூடியவர்களும், இரண்டு பக்கங்களிலும் சேவிக்கின்றவர்களுமான கணபதி சுப்பிரமண்யர்களையும், பகவானான பிரமதேவர் (அந்தத் தேவனுந் தேவியுமாகிய இருவரையுந்) தரிசித்தார். பலவித ஸ்தோத்திரங்களால் சங்கரனைத் துதித்துப் பிரார்த்தித்தார். முன் பார்க்கப்படாத தேவரீரைப் பார்த்தலினால் எனது கண்களுக்குப்



பயன் கிடைத்தது. ஓ சங்கரரே! சம்புவே! இப்போது தொண்டனான எனக்கு அநுக்கிரகிப்பீராக. பழிப்பற்ற பக்தியின்றித் தேவரீர் அறியப்படாதவர். தேவரீர் பிரசாதமெவனுக்குண்டோ அவன் அனைவருக்கும் மேலான குருவாகின்றான். தேவரீர் பிரசாதமின்றியவனுக்கு யாது மோக்ஷமுண்டாகின்றது?

சூதர் சொல்லல்.

என்று துதித்த அவரைப் பிநாகத்தைத் தரித்தவரான தேவதேவர் பார்த்து ஓ! பிரமதேவரே! உமக்கு மங்களமுண்டாகக் கடவது. வரத்தை வேண்டுவீராக. விரும்பியதைக் கொடுக்கின்றேனென்று சங்கரால் சொல்லப்பட்டது. இவர் பூமியில் தண்டம்போல் நமஸ்கரித்து அழிவற்ற சிருஷ்டி சக்திக்காக அந்தத் தேவனைப் பிரார்த்தித்தார்.

பிரமதேவர் சொல்லல்.

ஓ வியாபகரே! என்மீதுள்ள கிருபையால் தேவரீர் பிரசன்னமாயிருப்பீரானால், பிறப்பை யழிக்குந் தேவேசரான தேவரீரைப் பூஜிப்பேன். ஈண்டு எப்போதும் மகாதேவியோடு எனக்குப் பிரசன்னமா யிருப்பீராக.

சூதர் சொல்லல்.

என்ற அந்தப் பரமேஷ்டியான பிரமதேவரின் வாக்கியத்தைக் கேட்டுப் பகவானான உருத்திரர் அங்ஙனமே யாகுகவென்று சிருஷ்டித் தொழிலில் சாமர்த்திய முடைமையைக் கொடுத்தார். சம்பு, தயையால் அங்ஙனமே சாந்நித்யமாயிருந்தார். எந்த ரூபமுடையவராய், எந்தப் பிரபாவமுடையவராய், எந்த வைபவமுடையவராய், பகவான் எப்படிப் பிரசந்நமானாரோ அப்படியே அவருக்கு எப்போதும் பிரசந்நமா யிருந்தார். பின்பு அவரது பிரசாதத்தினாற் சகல வுலகையுஞ் சிருஷ்டித்தார். அது

முதல் ஆண்டுத் தேவேசனைப் பொற்றாமரை மலர்களால் உலகவடிவான பிரமதேவர் பக்திபாவனையை முன்னிலையி லுடையவராய்ப் பூஜித்தார். ஆகையாலாண்டு மங்களவடிவான சதாசிவன் எப்போதும் சாந்நித்திய மடைந்திருக்கின்றார். உலக நன்மையிற் பிரியமுடையவரான பகவானை உருத்திரர் பக்தியினாலேயே யறியத்தக்கவர். ஓ! வேதத்தையுணர்ந்தவருள் மேலானவர்களே! உங்களுக்கு (இது) சுருக்கமாய் நன்றாகச் சொல்லப்பட்டது. ஓ துவிஜர்களே! நீங்களும் மகேசருடைய பிரசாதத்தினால் சீக்கிரமாகப் பிரதிபந்தமான சகலத்தையும் விடுத்துப் பக்தியோடு எப்போதும் பூஜியுங்கள். இவ் வத்தியாயத்தினை எவன் கேட்கின்றானோ, அல்லது அடங்கிய மனமுடையவனைக் கேட்பிக்கின்றானோ, ஓ துவிஜர்களே! அவனுக்குச் சம்பு, பிரயாசையில்லாமல் சிவபதத்தை யளிக்கின்றார். பிறப்பினிடையில் ஒருதரமேனும் இதனைக் கேட்பிக்கவேண்டும். அல்லது படிக்கவேண்டும். அல்லது கேட்கவேண்டும்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸநத்குமாரஸம் ஹிதையில் சிவபுரிபுராணத்தில்
பிரமதேவர் படைப்பு ஆற்றலை யடைந்த
மூன்றாவது அத்தியாயம் முடிந்தது.

## நான்காவது அத்தியாயம்.

### கிருபாசாகரதீர்த்த வரலாறுரைத்தல்.

### முனிகள் வினவல்

ஓ முனிவரரே! கிருபாசாகரமென்று யாதொரு தீர்த்தஞ் சொல்லப்பட்டதோ, புண்ணியமுடையோருள் மேலானவரே! அந்தத் தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லியருளல்வேண்டும்.

### சூதர் சொல்லல்.

சகல பாபங்களையுங் கெடுக்கும் தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுகின்றேன். சகல ஆநந்தத்தையுஞ் செய்வது. புண்ணியமானது. சகல சம்பத்தையுங் கொடுப்பது. சுபமானது. மூழ்கல் மாத்திரத்தால் ஜந்துக்களுக்குப் பரிசுத்தமான ஞானத்தைக் கொடுப்பது. முற்காலத்தில் அருந்ததி எதில் மூழ்கி மிக நிர்ம்மலவதியானாளோ? எதனை ஆசமனஞ்செய்து ஐசுவரியமுடைய நாரதர் சகல வித்தைகளுக்கும் இருப்பிடமானாரோ? தவசிகளுக்குள் மேலான பகவானை வசிஷ்டர் எதில் மூழ்கி மிகவுந் தாண்டமுடியாத புத்திரசோகமாகிய பெரிய சமுத்திரத்தைத் தாண்டினாரோ? அந்த மங்களமான தீர்த்த மாகாத்மியத்தைக் கேட்டு, ஈசருடைய பதவியை யடைகின்றனர். ஓ மகா பாக்கியசாலிகளே! சாவதானமான மனதோடுங் கேட்பீர்களாக. முன்னொரு காலத்திலே மேலான தைத்தியர்கள் முப்புர வடிவினர்களாய் இருந்தனர். (அவர்கள்) மகா மாயாவிகள். குரூரமானவர்கள். பிரியம்போன்று வடிவையெடுப்பவர்கள். மகா பலமுடையவர்கள். இரும்பு வடிவான பட்டணத்தை உடம்பாக வுடையவர்களாய்ச் சிலபேர் விளங்கினார்கள். சிலர் மேலான பொன் நகரத்தை உடம்பாக உடையவர்கள். அவர்கள் நூறுயோசனை

அகன்றவர்கள். ஒரு காலத்தில் புருஷ வடிவமாயிருப்பவர்கள். ஒரு காலத்தில் மலைரூபமாயிருப்பவர்கள். ஒரு காலத்தில் சமுத்திரம்போன்ற அங்கமுடையவர்கள். ஒரு காலத்தில் மேகம்போன்ற ரூபமுடையவர்கள். ஓ துவிஜர்களே! விஷ்ணு முதலிய சர்வதேவர்களாலும் வெற்றி கொள்ளப்படாதவர். (அவர்களால்) சுர, அசுர, மனிதர்களோடுங்கூடின உலகனைத்தும் துன்புறுத்தப்பட்டன. பட்டணவடிவமான இம்மூவர்களால் மூன்றுலகும் கொளுத்தவும் முறிக்கவும் பட்டன. கதறுகின்றவர்களான தேவக்கூட்டங்கள் கஷ்டத்தைப் பொறுக்கச் சத்தியற்றவர்களாய் எல்லோரும் ஓடித் திக்குகளிலும் விதுக்கு (மூலை) களிலும் ஒளிந்தார்கள். தேவசிரேஷ்டர்கள், மூவரையும் நேரில் வெல்ல ஆற்றலற்றவர்களாய் ஒருகாலத்தில் தெய்வலோகத்திற்கூடி (ஆலோசித்து) இந்திரன் பிர்ம்மா விஷ்ணுமுதலிய சர்வ தேவசிரேஷ்டர்கள், மகாமேருவின் சுபகை யென்னும் குகையை யடைந்து இவர்களுடைய மிகக் கொடியதான செய்கையை நினைத்து வருந்தினார்கள்.

## தேவர்கள் சொல்லல்.

உலகங்களுக்குப் பதிகளான நாமும் நமது மாதர்களும் இப்படிப்பட்ட பொறுக்கமுடியாத கஷ்டத்தை ஓ தேவர்களே! சில இடத்திலும் சில காலத்திலும் சென்று அடைந்தோம். மனிதர், யக்ஷர், நாகர், தவசிகள் இவர்களைக் குறித்து யாது இசைக்கவேண்டும்? அவர்கள் சிவபிரானிடமிருந்து வரம்பெற்றவர்கள். ஜெயிக்கக்கூடாதவர்கள். பயங்கரமானவர்கள். ஓ தேவசிரேஷ்டர்களே! எங்ஙனமிவர்களுக்குச் சீக்கிரம் நாசமுண்டாகும். என்று நன்றாகச் சிந்திக்கின்ற அவர்கள் அழிவற்ற விஷ்ணுவைக் கேட்டார்கள். ஓ அசுரரை அழிப்பவரே! பிரம விஷ்ணு வமரர்



களுக்கு நீரே கதி. நீர் நிரம்பிய நேத்திரமுள்ள முகமுடைய அந்தத் தேவக்கூட்டங்களால் இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஹரி தாமரையில் மறைந்துள்ள வண்டுபோல் மிருதுவான வாக்கியத்தைச் சொன்னார்.

## விஷ்ணு சொல்லல்.

அசுரர்களைச் ஜெயிப்பதற்கு நான் சக்தனல்லன். பிரமதேவருமல்லர். தேவிந்திரனுமல்லன். எவர் அவர்களுக்கு வரங்கொடுத்தாரோ நெற்றிக்கண்ணையுடைய அவரைத்தவிர (ஜெயிக்கமுடியாது.) நாங்களும் அவரது பூஜையால் விஷ்ணு பதவி முதலியவற்றை அடைந்தோம். அவர்களும் லோகேசரான அவரைப் பூஜித்து வெல்லமுடியாத வலுவையடைந்திருக்கின்றார்கள். தபோவலுவின் அநுசாரமாக வலுவும் வீரியமுங் காணப்படுகின்றன. அவர்கள் நம்மைக் கொல்ல வல்லவர்கள். அவர்களை நாம் கொல்லச் சக்தியற்றவர்கள். பக்தர்களுக்கு மேலான இருப்பிடமானவரும் அவர்களுக்கு வலுவைக்கொடுத்தவருமான தேவனை ஆராதிப்போமாக. தோத்திரங்களினால் துதிப்போமாக. அவர் பிரசாதமளிப்பார்.

## சூதர் சொல்லல்.

இங்ஙனம் விஷ்ணு சொல்லி இந்திரர் முதலியவர்களோடு உருத்திரலோகஞ் சென்றார். பிரமத வதிபர்களால் சூழப்பட்டுள்ள உருத்திரரைப் பார்த்து (அவர்கள்) நமஸ்காரஞ் செய்தார்கள். மன்மதனைக் கொன்ற மகாதேவரைப் பலவிதமான தோத்திரங்களினாற் றுதித்தார்கள்.

## தேவர்கள் சொல்லல்.

சங்கரரே! வெல்க. சர்வக்ஞரே! வெல்க. நித்தியரே ஞானவடிவினரே! வேதாகமங்களுக் கப்பாலானவரே! வெல்க. தாண்டவபண்டிதரே! வெல்க. உருத்திரரே!

வெல்க. அந்தமின்றியவரே! வெல்க. தைத்தியரைக் கொல்பவரே! வெல்க. பாதிச்சந்திரனைச் சிரசிலுடையவருக்கு நமஸ்காரம். சாந்தியை மேலாகக்கொண்டவருக்கு நமஸ்காரம். பிரமதேவர் முதலியோரால் வணங்கத்தக்கவருக்கு நமஸ்காரம். பரமாத்மாவான வுமக்கு நமஸ்காரம். எவரிடமிருந்து இவ்வுலகனைத்து முண்டாகின்றதோ எவரிடமடங்குகின்றதோ, மேலான அனுபூதி யொன்றினாலேயே யறியத்தக்க (அப்படிப்பட்ட) குருவிற்கு நமஸ்காரம். உலகனைத்து மெவருக்கு ஓரம்சமா யிருக்கின்றதோ? எவரது விளக்கத்தால் விளங்குகின்றதோ? ஞானத்தா லடையத்தக்க பரிபூரணவடிவான (அப்படிப்பட்ட) வுமக்கு நமஸ்காரம். ஓ ஈசரே! எவரது மாயையின் பிரபாவத்தால் நாங்கள் மோகமுற்றவர்களாய் உயர்வான இடத்தை உணர்ந்திலேமோ (அப்படிப்பட்ட) சேதன சொரூபியான வுமக்கு நமஸ்காரம் "ஆவோராஜான" மென்ற மந்திரத்தால் முனிவரர்கள் எவரைப் பூஜித்துத் தமதான்மாவை அறிந்தனரோ அவரை நாங்கள் துதிசெய்கின்றோம். எவரது பிரபாவத்தை யறியாமல் பிரமதேவரும் இந்த ஹரியாகிய நானும் சிரசையும் பாதத்தையும் அளவிட்டறிய மூடாத்மாக்களாய் முயற்சி செய்தனமோ? ஓ சிவபிரானே! அப்படிப்பட்டவராயும் உருத்திரராயுமுள்ள தேவரீரை நாங்கள் துதிசெய்கின்றோம். அசுரர்கள் பிரபலர்களாயும், வீரர்களாயும், பொன்முதலிய லோகசரீரமுடைய வர்களாயும் உலகனைத்தையும் நாசஞ்செய்கின்றனர். ஓ பிரபுவே! அவர்களைக் கொன்று எங்களை இரக்ஷிக்கவேண்டும். என்று துதிசெய்வதில் குசலர்களான நமஸ்காரஞ் செய்கின்ற தேவக்கூட்டங்களால் துதிக்கப்பட்டவரான தேவநாயகராயுள்ள உருத்திரர் சந்தோஷமான மனமுடையவராய்ப் பார்த்துச் சொன்னார்.



## உருத்திரர் சொல்லல்.

ஓ தேவர்களே! நீங்கள் பசுக்கள் உங்களுக்கு நான் பதியாகவிருக்கின்றேன். ஓ தேவசிரேஷ்டர்களே! உங்களுடைய நாலு தோத்திரங்களினால் பிரசந்நமாயிருக்கின்றேன். முப்புராது மகத்தான திரிபுரத்தை நான் க்ஷணத்தில் நாசஞ்செய்வேன்.

## தேவர்கள் சொல்லல்.

ஓ ஈசரே! அந்த அசுரர்கள் தேவ அளவினால் நூறு யோசனை அகன்றவர்கள். அப்படிப்பட்ட வேஷத்தையெடுத்துக்கொண்டு அவர்களைக் குறித்துப் போகவேண்டும். பகவானான தேவரீர், வாக்காலும், சிரிப்பாலும், பார்வையாலும், நகத்தாலும், அவர்களை அழிக்கச் சக்தியுடையவரே. அங்ஙனமாயினும், சாமக்கிரிகளைக் கொள்ளுதலான நல்ல ஆடம்பரத்தின் பொருட்டுத் தேவரீருக்குப் பாணமாக நான் ஆகின்றேன். நல்ல மேரு கோதண்டமாகவும், பூமி இரதமாகவும், ஆகின்றன. சூரியசந்திரர்கள் இரண்டு சக்கரங்களாகவும், யசுர்(வேத) முதலியவைகள் குதிரைகளாகவும், பிரமதேவர் தேர்ப்பாகராகவும், தேவர்கள் காலாட்படைகளாகவும், ஆகின்றனர். என்ற விஷ்ணுவின் வாக்கியத்தைக் கேட்டு அங்ஙனமே யாகுகவென்று ஈசர் சொன்னார். அந்த க்ஷணத்திலேயே அவரனைவரும் அவ்வவ் வடிவமாக அமைந்து நின்றனர். பூமியான இரதத்தில் ஏறிக்கொண்டும், மேருவாகிய வில்லைத் தாங்கிக்கொண்டும் விஷ்ணுவாகிய பாணத்தை எடுத்துக்கொண்டும் திக்குக் கூட்டங்களைச் செவிடு படுத்துவனவாயும், சமுத்திர சத்தத்தை மறைப்பனவாயும் உள்ள தேவதுந்துபி (முதலிய) சத்தங்களோடு பிரளயகாலத்துண்டாகும் அநேக கோடி காலாக்கினிக்குச் சமமான பிரகாசமுடையவராய்ப் பகவானான உருத்திரர் திரிபுர ராக்ஷசர்களை அழிக்கப் புறப்பட்

டார். மிக்க பயங்கரமானதும் மகாமாயையில் தெளிந்த சாமர்த்திய முடையதுமான திரிபுரம் யாண்டிருக்கின்றதோ அங்குச் சென்று பாணத்திற்கிலக்கான அத்திரிபுரத்தில் பாணத்தை விடுத்தார். அப்போது நெற்றியிலுள்ள அக்கினிக் கண்ணை நன்றாகத் திறந்தார். திறந்த நெருப்புக் கண்ணை யுடையவராய்ப் பார்க்கவேண்டுமென்ற இச்சையால் நெடுங்காலமிருந்தார். நேத்திராக்கினியினின்று முண்டான சுவாலை சகலத்தையும் விழுங்கினதாய்; புரவாசிகளின் முப்புரங்களையும் கொளுத்தி உலகையும் நன்றாகப் பயமுறுத்தினது. அதனால் சகல தேவகணங்களும் வற்றிப் போன உடலையும் மாலையையுமுடையவரானார்கள். ஓ ஆஸ்திகர்களே! இந்திரர் முதலிய தேவர்கள் பயமுடையோராய் மகாதேவரான தேவரைச் சரணமடைந்து இந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தார்கள் ஓ சம்புவே! நேத்திரத்தைத் திறந்தது போதும். முப்புரமும் தகிக்கப்பட்டன. சுவாலையின் தாபத்தால் இந்தத் தேவர்களான நாங்கள் முழுவதுங் குடிக்கப்பட்ட இரத்த முடையவர்களானோம். ஓ தேவதேவரே! உலகபதியே! தாபமுழுவதுந் தணிப்பீராக. என்று சொல்லிப் புஷ்பமாரிக்கூட்டங்களால் ஈசனை யருச்சித்தார்கள். தேவர்களாலும் தபோதனர்களாலும் பூஜிக்கப்பட்ட சங்கரர் சாந்தமான கோப முடையவரானார். உருத்திரர் கருணாரசத்தைக்கொண்டார். அவரது கடைக்கண்வழியாக மகத்தான கிருபா வமிர்த ரஸம் ஒழுகினது. பாணத்தாலான தாபம் சாந்தியாதற் பொருட்டு அதில் தேவர்கள் மூழ்கினார்கள் ஆண்டு மூழ்கின மாத்திரத்தால் விடுபட்ட வருத்தக் கூட்டங்களை யுடையவர்களாய்ச் சீக்கிரம் தேவர்கள் அடையப்பட்ட ஆநந்த சம்பத்தை யுடையவர்களானார்கள். ஓ துவிஜர்களே! சம்புவின் கிருபா வமிர்தரஸமே அந்தத் தீர்த்தமாக வானது.



அதற்குக் கங்கையுஞ் சமமன்று. எந்தத்தடாகமு (சம) மன்று. மிக்க மேலானவர்களே! பாபத்தை நீக்குவனவாய்ப் புண்ணியங்களான எந்தத் தீர்த்தங்கள் (உலகத்தில்) உண்டோ? அவையனைத்தும் இந்தத் தீர்த்தத்தில் (உண்டென) நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். குஷ்டமுதலிய வியாதிக் கூட்டங்கள் ஸ்தானத்தின் வைபவத்தினால் நாசமாகின்றன. ஈண்டுக் கால விசேஷமில்லை. மனிதர்களாலெப்போதும் ஸ்நானஞ் செய்யத்தக்கது. சிவனுடைய கருணையை விரும்புபவரால் சோர்வின்றி ஸ்நானஞ் செய்யத்தக்கது. நல்ல முமுக்ஷுக்களால் நித்தியகருமத்தைப் போலவே ஸ்நானஞ் செய்யத்தக்கது. கிருபாசாகரமென்னும் பெயருள்ள இந்தப் பரமேச தீர்த்தத்தில் நான்கு ஆசிரமங்களிலுள்ளவர்களாலும் ஞானசித்தியின் பொருட்டு ஸ்நானஞ் செய்யத்தக்கது. அதன் சம்பந்தப்பட்ட வாயு யாண்டு வீசுகின்றதோ அவ்விடம் பரிசுத்தமாகின்றது. விருக்ஷங்களும், கொடிகளும், பக்ஷிகளும், பசுக்களும் காற்றின் சம்பந்தத்தின் பெருமையினால் மோக்ஷமடைகின்றன. சமுசயமில்லை. எவன் காற்றால் தொடப்படுகின்றானோ அப்போது அவனுடைய பிதிரர்கள் சந்தோஷமடைகின்றார்கள். இந்தமேலான தீர்த்தத்தில் எவன் ஸ்நானஞ் செய்து பிதிர் தேவதைகளுக்குத் தர்ப்பணஞ் செய்கின்றானோ அந்த வுயர்ந்த மனிதன் எழுபத்தொரு குலங்களைக் கரையேற்றுகின்றான். அதன் கரையில் செய்த பிண்டதானத்தால் கயையிலும், பல்குனிதடத்திலும், உருத்திர பாதமுதலிய தேசங்களிலும் செய்த பிண்டதான பலம் உண்டாகின்றது. காதளவான ஜலத்தில் நின்று கொண்டு பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபிக்கவேண்டியது. ஆயிரந்தரம் திருப்புதல் மாத்திரத்தில் ஓரெழுத்திற்கு லக்ஷஜெபமாகின்றது. பலவிதமான மந்திரங்களை நாபியளவான நீரிலிருந்து ஜெபிக்கவேண்டியது. ஒருநாட்

ஜெபித்த ஒரு மந்திரத்திற்கு அநேக மந்திரங்களைப் பலதரஞ்ஜெபித்த பயன் நிச்சயமாயுண்டாகும். ஓ பிராம்மணர்களே! அதிகமாகச் சொல்லுவதெற்றிற்கு; விரும்பிய பொருளைத்துஞ் சித்திக்கும் பொருட்டு மேலான தீர்த்தத்தில் சிரத்தையோடுங்கூட ஒருதரமேனும் ஸ்நானஞ் செய்யத்தக்கது. ஆறுமாசஞ் செய்த நியமமான ஸ்நானத்தால் வந்தியை புத்திரனை யுடையவளாகின்றாள். ஓ த்விஜர்களே! சோகத்தால் பீடிக்கப்பட்டவன் மூன்று மாச ஸ்நானத்தால் சோகத்தினின்றும் விடுபடுகின்றான். விதிப்படி வருஷ ஸ்நானத்தால் வித்தையை விரும்புபவன் வித்தையையடைகின்றான். என்ன வெகுவாகச் சொல்லுவதால் யாது (பயன்.) தீர்த்தம் மிகப்பரிசுத்தமாக்குவது. மூழ்கலால் சகல ஜந்துக்களின் மகா பாபத்தை யழிப்பது. ஓ முனிவரர்களே! பிரியத்தோடு தீர்த்தத்தின் வைபவம் நன்றாகச் சொல்லப்பட்டது. நீங்களும் அதில் மூழ்கி விரும்பிய சித்தியையெல்லாம் அடைவீர்களாக.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸநத்குமாரஸம் ஹிதையில் சிவபுரிபுராணத்தில்
கிருபாசாகர தீர்த்தவரலாறுரைக்கும்
நான்காவது அத்தியாயம் முடிந்தது.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

### சரஸ்வதி தவமுரைத்தல்.

### சூதர் சொல்லல்.

சிவபுரமென்னும் ஸ்தானத்தில் மகா பாக்கியசாலியும், தாமரைக்கண்ணை யுடையவளுமாகிய வாணி தீவிரமான தவத்தைச் செய்தாள். உலக காரணரான பிரமதேவரைப் பதியாக அடைய விரும்பிச் சிவனுடைய இடது பாகத்தில் அலங்காரமாயுள்ள பூரணமான சக்தியைச் சிந்தித்து ஹிருதய தாமரையில் பவானியைத் தியானிப்பவளாய் மந்திரத்தை ஆதரவோடு ஜெபித்தாள். அதனால் நெடுநாளைக்குப் பின்னர்ப் பரதேவதை பிரசன்னமாய் ஓ சரஸ்வதியே! எதன் பொருட்டுத் தவஞ் செய்தாய்? தவத்தால் நான் சந்தோஷமடைந்திருக்கின்றேன். ஓ மகா பாக்கியசாலியே! வரத்தைக்கேள். உனக்கு விரும்பியதைக் கொடுக்கின்றேன் (என்றாள்.)

### சரஸ்வதி சொல்லல்.

சுராசுரமுனிவரர்களால் பூஜிக்கத்தக்க திருவடித்தாமரையை யுடையவளே! மேலானவளுக்கு நமஸ்காரம். பார்வதிக்கு நமஸ்காரம். உலகை யுண்டாக்குபவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், சிவைக்கு நமஸ்காரம். சிவனது இடது பாகத்தில் அலங்காரமானவளுக்கு நமஸ்காரம். உலக காரணரூப மானவளுக்கு நமஸ்காரம். உலகாகார மூர்த்திக்கு நமஸ்காரம். பரமானவளுக்கு நமஸ்காரம். க்ஷேமமானவளுக்கு நமஸ்காரம். மங்களமானவளுக்கு எப்பொதும் நமஸ்காரம். மங்கள ரூபமானவளுக்கு நமஸ்காரம். காத்தியாயினிக்கு நமஸ்காரம், நமஸ்காரம். என்று சரஸ்வதியால் துதிக்கப்பட்ட மகா ஈசானியான பர்வத புத்திரி சந்தோஷத்தை யடைந்திருக்கின்றேன், விரும்பப்பட்ட

தைக் கேள். முன் சொல்லியுள்ளதை உனக்குக் கொடுக்கின்றேன். என்ற இந்த அவளது வாக்கியத்தைக் கேட்டுச் சரஸ்வதி, முன்னிலையில் வணங்கி உன்னிடம் நான் அடைக்கலம் புகுந்தேன் பிரமதேவரை எனக்குப் பதியாகச் செய்வாய் (என்றாள்.) பிரமதேவர் சீக்கிரமாகவே உன்னை மனைவியாக வரிப்பார். உன்னோடுங் கூட உலகனைத்தையும் உண்டாக்கப்போகின்றார் சமுசயமில்லை. (என்று) இங்ஙனங் கூறி அந்தப் பராசத்தி மறைவினைச் செய்தாள். பராசத்தியின் பிரசாதத்தினால் (சரஸ்வதி) பிரமதேவரை அன்போடு கணவனாக வரித்தாள். யாண்டு இந்தப் பாரதி பதியை விரும்பியவளாய்த் தவஞ் செய்தாளோ ஆண்டுத் தனது நாமத்தால் மாதுருகை என்னுந் தீர்த்தத்தை யவளுண்டாக்கினாள்.

## முனிகள் வினவல்.

எங்களுக்கு ஸ்தானத்தின் நிச்சயத்தையும் பரமேசரின் லிங்கத்தின் வைபவத்தையும் ஓ நல்ல விரதசாலியே! உள்ளபடி யெங்களுக்குச் சொல்ல அருகராயிருக்கின்றீர்.

## சூதர் சொல்லல்.

ஓ முனீசர்களே ! சுற்றிலும் ஒரு குரோச விஸ்தாரமுடையதாய் எங்கும் எப்போதும் விளக்க முடையதாய் ஸ்தானம் விளங்குகின்றது. அந்த க்ஷேத்திரத்தில் சுற்றிலும் அநேக தீர்த்தங்களும், ஸ்தானங்களும், ஓ மகா பாக்கியசாலிகளே! மகரிஷிகளா லுண்டுபண்ணப்பட்டன. தேவ சிரேஷ்டர்களால் பூஜிக்கப்பட்டன. சகல சித்திகளையுங் கொடுப்பன வேதத்திற் சொல்லிய சகல புருஷார்த்தங்களையு மளிப்பன. ஓ முனிவரர்களே! அஹோ! திவ்விய தேஜோமயமாய் விளங்குகின்றன. அவற்றின் மத்தியில் பரமேசருக்கு (உரிய) பிரதானமான மேலான ஸ்தா



ணம் ; கின்னரர்களாலும், யக்ஷ கந்தர்வர்களாலும், சித்
தர்களாலும், சாத்தியர்களாலும், சாரணர்களாலும் மாணி
பத்திரர் முதலிய பிரமத கணாதிபதிகளாலும் ரக்ஷஸ், பூத,
பிசாசர்களாலும் பக்தியோடு எப்போதுஞ் சேவிக்கப்
பட்டது. தம்பட்ட முதலிய வாத்தியங்களை வாசிப்பவர்க
ளாலும் சந்தோஷத்தால் நடனஞ்செய்கின்ற அப்சரஸ்திரீ
களாலும் புகழப்பட்டது. வீணா வேணு மிருதங்கங்களின்
சத்தங்களால் சத்தமுடையதாகச் செய்யப்பட்டது. எப்
போதும் பிர்ம்மத்தைச் சொல்லுகின்றவர்களால் பக்தி
யோடு மெங்கு மாராதிக்கப்பட்டது. உருத்திர அத்திய
யனத்தையே செய்யும் ஏனைய மேலான ரிஷிகளால் சூழப்
பட்டது. நன்றாய் மனவடக்கமுடையவர்களாக, வேதத்
தையே சொல்லுகின்ற வேனையோர்களால் சேவிக்கப்பட்
டது. ஜடை, மரவுரியோடுங் கூடியவர்களாலும், கமண்ட
லத்தைக் கையிலுடையவர்களாலும். பஸ்ம திரிபுண்டர
ருத்திராக்ஷங்களைத் தரிக்கின்றவர்களான தபோதனர்களா
லும், பஞ்சாக்ஷரத்தையே ஜெபிக்கின்றவர்களாலும், அழி
வற்ற சிவத்தைத் தியானிக்கின்றவர்களாலும் *சோமனுக்கு
நமஸ்காரம். உருத்திரனுக்கு நமஸ்காரம். தாம்ரனுக்கு
நமஸ்காரம். அருணனுக்கு நமஸ்காரம். சங்கனுக்கு நமஸ
காரம். சர்வனுக்கு நமஸ்காரம். பசுக்களின் பதிக்கு
நமஸ்காரம். உக்கிரனுக்கு நமஸ்காரம். பீமனுக்கு நமஸ
காரம். அக்ரேவதனுக்கு நமஸ்காரம். தூரேவதனுக்கு
நமஸ்கார மிருக்க. சங்கரிப்பவனுக்கு நமஸ்காரம். மிகவுஞ்
சங்கரிப்பவனுக்கு நமஸ்காரம். விருக்ஷ ரூபனானவனுக்கு
நமஸ்காரம். நக்ஷத்திரமானவனுக்கு நமஸ்காரம். சம்புவிற்கு
நமஸ்காரம். சுகத்தை ஆக்குபவனான உனக்கு நமஸ்காரம.
சங்கரனான உனக்கு நமஸ்காரமிருக்க சிவனுக்கு எப்

* இவைகள் வேதப்பிரயோகங்கள்.

போதும் நமஸ்காரம். சிவதரனுக்கு நமஸ்காரம். என்று துதித்து மகேசனை நமஸ்காரஞ் செய்கின்ற முனிகளாலும் எங்கும் சூழப்பட்டதாயும்; திக்குகளில் தேவதுந்துபி சத்திக்கப்பட்டதாயுமுள்ள அவ்விடத்தில் பகவானான ருத்திரர் பார்வதியோடுங் கூடியவராய் இருக்கின்றார். வடிவமுடைய வேதங்களாலும், சொரூபமுடைய யாகாதிகளாலும், ஆகாரத்தோடுங்கூடின பிரணவத்தாலும், அப்படியே ஆகமங்களாலும், எப்போதுஞ் சேவிக்கத்தக்கவராயும், ஆகிருதியோடுங்கூடின சகல வித்தைகளாலுந் துதிக்கப்பட்டவராயும், வடிவையுடையனவாய் ஒழுகுகின்ற கங்கை முதலியவைகளால் சூழப்பட்டவராயும், கையிற் பிரம்பையுடைய கணத்தலைவர்களால் விலக்கப்பட்ட முன்னுள்ள ஜனங்களாலும், நந்தியால காண்பிக்கப்பட்டவர்களாய் ஜயசத்த முதலியவற்றோடு நமஸ்காரஞ் செய்கின்றவர்களாலும், துதிக்கப்பட்டவராயும், சநகர் முதலிய முனிகளான முமுக்ஷுக்களாலும் துதிக்கப்பட்டவராயும், பைரவர் முதலிய அநேக அவதார சிரேஷ்டர்களாலும், விஷ்ணுருத்திரர் பிரமதேவர்களாலும், பகவான் உபசரிக்கப்பட்டவராயும் எப்படி மேலான கைலையங்கிரியின் சிகரத்திலே இரத்தின மண்டபத்திலே இரமிக்கின்றாரோ? அப்படியே சிவபுரமென்னும் க்ஷேத்திரத்திலே சகல மங்களவடிவான பார்வதியோடும் தமது பிரியததால் எடுத்த வடிவுடையவராய்ச் சகல வைபவங்களோடும் இரமித்துக்கொண்டிருக்கின்றார். சிவன் சகல வித்தைகளுக்கும் ஈசானன். சகல பூதங்களுக்கும் ஈஸ்வரன். பிரமதேவருக்கு அதிபதி. பிரணவப் பொருள். சகல அநுக்கிரக இச்சையால் தமது பக்தர்களாலும் பிரமதேவராலும் வேண்டிக்கொள்ளப்பட்டவராய் அந்த இடத்தில் இரமித்துக்கொண்டிருக்கின்றார். உலகமாதாவோடுங்கூடின எந்தச்சர்வ பூதேசர் யாண்டு உலக காரணராயும்,



சுராசுரர்களால் வணங்கப்பட்டவராயும் விளங்குகின்றாரோ (ஆண்டு) ஹிருதயக்கிரந்தி பேதிக்கப்படுகின்றது. சகல சந்தேகங்களுஞ் சேதிக்கப்படுகின்றன. இவனுடைய கருமங்களும் அழிகின்றன. பராபரரான அவரைக் காணுங் காலத்திலே. சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும் எந்தத்தேவன் கேட்கவும் நினைக்கவும் படுகின்றானோ? அந்தச்சிவபுரேசனைத் தரிசித்தால் மீண்டும் பூமியிற் பிறப்பதில்லை. எவருடைய காருண்ணிய வீக்ஷணத்தினாற் பிரமவிஷ்ணுக்களின் பதப்பிராப்தி யுண்டாகின்றதோ அந்தச் சிவபுரேசரைவிட மோக்ஷத்தின் பொருட்டு வேறுவழியில்லை. விராட்டும் அவரே. ஸ்வராட்டும் அவரே. ஸம்ராட்டும் அவரே. இந்திரனும் அவரே. பிரஜாபதியுமவரே. ஓ துவிஜர்களே! ஐசுவரியமுடைய அவரே அஷ்டமூர்த்தியென்று சுருதிகளில் கேட்கப்படுகின்றார். அணுவினுமிக்கவணுவாகவும், மகத்தினு மிக்கமகத்தாகவும் இருந்தாலும் உலகைப் பாலிப்பவராகவும் பாதிப்பெண் வடிவைத்தாங்கு கின்றவராகவும் பக்தர்களை இரக்ஷிக்கும் பொருட்டுச் சிவபிரான் காணப்படுகின்றார். மனதோடு வாக்குச் சென்றடையாமல் எவரினின்றுந் திரும்புகின்றதோ அந்த உமையின் நாயகரைப் பரிசுத்தமான முனிகள் ஆண்டுப் பார்க்கின்றனர். மாயா சம்பந்தமின்றியவர்கள், எவரை யடைந்து மீளுதலில்லையோ (அவர்கள்) வேதாந்தக்ஞானத்தால் மிக்கவலுவான அஞ்ஞான விருள் என்னும் வனத்தை அத்தியந்த மெரித்தவர்களாய் மேலான அமிர்தத்தை வரிஷிப்பவரான (அந்தத்) தேவேசரை ஆண்டுப் பார்க்கின்றார்கள். அநேக பிறவிகளில் நன்றாகக் கிடைத்த புண்ணியங்களின் பரிபக்குவ பலத்தினாலேயே சாதுக்கள் சிவபுரேசரை யுண்மையாகப் பார்க்கின்றார்கள். சகல வுலகிற்கு மாதாரராயும், மாயாரகிதராயும், துயரற்றவராயுமுள்ள சிவபுரேசரைத்

தரிசித்தால், கர்த்தவ்வியமொன்று (செய்யத்தக்கது ஒன்று) மில்லை.

### முனிகள் வினவல்.

அங்கே அம்பிகையோடுங் கூடியவராயும் சமுசாரத்தை விடுவிப்பவராயுமுள்ள சிவபிரான் சாந்நித்தியமடைந்திருக்கின்றார். ஈண்டுக் கால விசேஷமில்லை என்பதாகத் தேவரீரால் சொல்லப்பட்டது. தேவர்கள் எப்படிச் சேவிக்கின்றார்கள்? அதே பரமேசர் புண்டரீக புரத்தில் எப்போதும் எப்படி நடனத்தைச் செய்கின்றார்? ஓ பிரமவித்துவரரே! அப்படிப்பட்ட இந்தச் சந்தேகத்தைக் கருணையால் கெடுப்பீராக.

### சூதர் சொல்லல்.

சாக்ஷாத் சுத்த சைதன்ய சின்மய பரப்பிரம்மம் எங்குமிருந்துகொண்டு தனது இச்சையால் தானே அநேகமாவோமென்று விரும்பினது. ஓ பிராம்மண சிரேஷ்டர்களே! தனது மாயாசத்தியினால் வேறுபட்டதாய் அநேகமானது. முன்னர் சமஷ்டி அபிமானத்தால் பிரம்மாண்டமான விராட்டானது. அங்ஙனமே வியஷ்டியான ஜீவர்களும் ஓ துவிஜர்களே! அநேக பிரகாரமாக வுண்டானார்கள். சகலத்திலுமுள்ளீடாய்ச் சன்மாத்திரமான சிவன், சத்தியமுதலிய இலக்ஷணமுடையவராய், ஆகாயத்தைப் போல் வியாபித்து எப்போதும் நிர்விகாரராய் நன்றாகப் பிரகாசிக்கின்றார். அத்தியாத்மத்திலும் அதிபூதத்திலும் விளங்குவனவான ஷடாதாரமென்னும் பெயருள்ள ஸ்தானங்கள், ஓ பிராம்மணவரர்களே! மகேசருக்கு இருக்கின்றன. அவைமுக்கியமானவை. அவற்றில் தேவேசர் தன்னை, உபாசிப்பவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். ஓ பூசுரர்களே! விராட்டென்னும் பெயருடையவருக்குச் சிதம்பரம் ஹிருதய தாமரை. ஆண்டுத் தேவேசர் பக்தர்



142580 600 008

களுக்குச் சந்தோஷத்தைக் [illegible] செய்கின்றார். கோரமான சம்சார[illegible]துக்கத்தைக் கெடுப்பதும், சமானமற்றதுமான சம்புவின் ஆநந்தத் தாண்டவத்தை வியாக்கிரபாதர், பதஞ்சலி முதலியவர்கள் பூரண திருப்தியாகக் கழுத்துவரையிலுங் குடித்துக் கிருதகிருத்தியத் தன்மையை யடைந்தனர். பிரமாண்டத்தைத் திருமேனியாகக்கொண்ட சுத்த சத்துவமுடைய வீராட்புருஷனுக்குச் சிவபுரமென்னும் ஸ்தானம் உருத்திரக் கிரந்தியென்று சொல்லப்பட்டதன்றோ? எவர்கள் மீண்டுந் திரும்புதலின்றிய மேலான இடத்தை விரும்புகின்றனரோ அவர்களுக்குச் சிவபிரான் உருத்திரக் கிரந்தியை யழித்துத் தானே தன்னைக் காண்பிக்கின்றார். எம்மனிதன் கிரந்தி நாசமில்லாமல் மோக்ஷத்தை விரும்புகின்றானோ அவன் பசுவை யுண்ணுதலினாலேயே தனது நீசத்தன்மையை நீக்க விரும்புகின்றான். இருதயக்கிரந்தி பேதிக்கப்படுகின்றது என்று சுருதி கூறிற்று. கிரந்தி ஸ்தானமாகச் சகல முமுக்ஷுக்களாலும் உபாசிக்கப்படுகின்றது. கிரந்தியை அழிக்குங் கிருபாநிதியாகிய சிவபிரான் ஆண்டிருக்கின்றார். அவரை விட்டு மனிதன் மிகவுங் களங்கமற்ற மோக்ஷத்தை அடையமாட்டான். எவன் கிரந்தி நாசமாக யோக்கியமானவனோ அவனுக்கு அந்த மகேசரிடத்தில் இயல்பான புத்தி யுண்டாகின்றது. கோடி ஜன்மங்களாலும் வேறு வழியாக இல்லை. காசியிலேனும் [illegible]ண்டரீகபுரத்திலேனும் அல்லது வேறு க்ஷேத்திரங்களி[illegible]லும் மனிதர்களா லுபாசிக்கப்பட்ட சிவபிரான் ஆண்டு மோக்ஷ மளிப்பவராகின்றார். ஆனந்த ரூபியான சம்புவின் நடனமாத்திரத்திற்கே புண்டரீகபுரத்தில் பிரதான முண்டு. கிரந்தி மோக்ஷமும் சாக்ஷாத் அநுக்கிரகத்தா லாகின்றது. கிரந்தி ஸ்தானமான சிவபுரத்தில் கிரந்தி நாசஞ் செய்வதில் பிர

Q2:8:38.2114 SP
1128

தானுமுண்டு. நடன முதலிய தொழில்களும் ஒவ்வோர் காலத்தில் சம்பவிக்கின்றன. ஆகையால் ஓ விப்பிரர்களே! மோக்ஷத்தை விரும்புகின்றவர்களான கபிலர் முதலிய முனிகள் மூலக்கிரந்தியை அழிக்கு மிச்சையை யுடையவர்களாய் ஆண்டுச் சிவபிரானைப் பூஜிக்கின்றார்கள். பிரசாதத்தினாலேயே மாயையினின்றும் சீக்கிரமாக விடுபட்டவரானார்கள். ஆகையால் அனாதி சம்சார மாயாபாசத்தை அழிக்கின்ற ஹரனை நமஸ்கரித்துத் துதித்துத் தியானித்துப் பரமபதத்தை யடையவேண்டும். ஓ புண்ணியசாலிகளுக்குள் மேலானவர்களே! அதனால் முக்தி க்ஷேத்திரமெனப்படுகின்றது. நூறு ஜென்மங்களாலும் அதன் வைபவத்தைச் சொல்லமுடியாது. அந்த க்ஷேத்திரத்தின் மகிமையைச் சொல்ல வியாசருஞ் சமர்த்தரல்லர். சாக்ஷாத் சங்கரரான சிவனும் அறிகின்றாரோ இல்லையோ வென்று எனக்குத் தெரியவில்லை. மகேசருக்குப் பிரியமாயும் மோக்ஷத்தை யளிப்பதாயுமான அவ்விடத்து எந்த ஜந்துக்கள் வசிக்கின்றனவோ அவைகள் ஹரன் பக்கத்தில் வசிப்பனவாய்க் கஜமுக ஷண்முகர்களைக் காட்டிலும் அதிக மானவைகளாய்ச் சந்தோஷிக்கின்றன. பிராணிகளால் கொடுக்கப்பட்டதும், செய்யப்பட்ட யாகமும், ஜெபிக்கப்பட்டதும், மேருவிற்குச் சமமாந் தன்மையை யடைகின்றன. அம்பிகாபதியின் கிருபாபலத்தினால் அவனுக்குக் கருவிலுதித்த லுண்டாகாது. பசு பக்ஷி மிருக முதலிய உடம்பை யுடையவர்களால் உமாபதியான ஆதிதேவர் எப்போதும் துதிக்கப் படத்தக்கவர். சம்சாரக் கட்டினின்றும் விடுவிப்பவரான இவர், தனது சேவடித் தாமரையைச் சேவிப்பவரை மிகுந்த கிருபையினால் கரையேற்றுகின்றார்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில் ஸநத்குமார ஸம்ஹிதையில் சிவபுரிபுராணத்தில் சரஸ்வதி தவமுரைக்கும் ஐந்தாவது அத்தியாயம் முடிந்தது.

---

# ஆறாவது அத்தியாயம்.

## இலிங்க வைபவ முரைத்தல்.

### சூதர் சொல்லல்.

ஆகையால் இனிமேல் இலிங்கத்தின் வைபத்தைப் பிரியத்தோடு நன்றாகச் சொல்லுகின்றேன். மேலான பக்தியோடுங் கூடினவர்களாய்க் கேளுங்கள். மிகவும் மங்களமாயும், சகல புதுமையைச் செய்வதாயும், சகல சம்பத்தையும் ஞானத்தையுங் கொடுப்பதாயுமுள்ளது. எதனைக் கேட்டு ஈசருடைய சாஸ்வதமான பரமபதத்தையடைகின்றனரோ. முன்னொரு காலத்தில் அளக்கமுடியாத வடிவையும், சக்கரம், வில், கதை இவற்றையுடைய கையையும், கிரீடத்தையும், பொன் குண்டலத்தையும் உடைய சகல உலக நாயகரான விஷ்ணு பகவான், மூவுலகையும் அளக்க முடியாத சாமர்த்தியத்தால் பரிபாலித்தார். சுராசுரர்களோடுங்கூடின கந்தர்வர், யக்ஷர், பந்நகர் இவர்களால் வணங்கப்பட்டவராய் மனைவியான இலக்ஷ்மியோடுங் கூட வைகுண்டத்தில் வசித்தார். பின்னொரு காலத்தில் ஓ துவிஜர்களே! கஸ்யபரிடமிருந்து தைத்திய சிரேஷ்டர்கள் உண்டானார்கள். (அவர்கள்) மகா பலமுடையவர்கள். மகா வீரியர்கள். மகா உத்ஸாகமுடையவர். மிக முயற்சியுடையோர். ஒரே கையினால் பிரம்மாண்டத்தையும் பிளக்கப்பழகியவர்கள். சிலபேர் பர்வதங்களையும் பந்துபோல் எடுக்கப் பழகியவர்கள். பிரவீண (மிகக்கெட்டிக்கார)ரான சிலபேர் எழுசமுத்திரத்தின் ஜலத்தையுங் குடிக்கச் சமர்த்தர்கள். மற்றுஞ்சிலர் பூமியையும், ஆகாசத்தையும் கீழும் மேலும் திருப்பச் சமர்த்தர். மற்றுஞ் சிலர் இந்திரன் முதலிய திக்குப் பாலர்களோடு யுத்தஞ்செய்ய நிபுணர்கள். சில வசுரர்கள் சந்திர சூரியரிருவர்களையும் தடுப்பதற்குக்

கெட்டிக்காரர்கள். அங்ஙனமே மற்றுஞ்சிலர் திக்கு யானைகளையுமொன்றாகக் கூட்டத் தடையற்றவர்கள். ஓ மதிமான்களே! இப்படிப்பட்ட தைத்தியர்களால் மூன்று புவனங்களும்; மிகுந்த மேகங்களால் ஆகாயமும், இருட்டால் பூதலமும் போல வியாபிக்கப்பட்டன. அப்போது நெருப்புகள் சாந்தமாயின. ஆகாயத்தில் சூரியன் பிரகாசமற்றான். நதிகள் கோணலாக ஓடின. சுழல்காற்று வீசினது. உலக நாசகாரணங்களான அநேக அரிஷ்டங்களுண்டாயின. கொழுத்த அசுரக்கூட்டங்களால் மூன்றுலகங்களும் துன்புறுத்தப்பட்டன. திக்குப்பாலர்களுடைய உலகங்களில் ஆக்கிரமித்துத் தேவக்கூட்டங்களைப் பலாத்காரமாகத் தள்ளினார்கள். மிகுந்த தனங்களைப் பிடுங்கிக்கொண்டு, (அவர்களைக்) கட்டிவிட்டு மேலான தேவர்களுடைய மனைவிகளோடு பலாத்காரமாய் இரமித்தார்கள். சத்தியலோகஞ் சென்று தாடியைப்பிடுங்குதல் முதலியவற்றால் எங்கு முகமுடைய பிரமதேவரை மிகவுந் துன்பப்படுத்தினார்கள். விஷ்ணுலோகத்திற்குச் சென்று ஹரியின் லோகத்தைத் தடுததார்கள். தைத்தியர்களால், குறித்தறியப்படாத விஷ்ணு மாயையால் சீக்கிரம் வெளியே போனார். அந்தப் புரத்தை மிகவுங் கொள்ளையிட்டார்கள். விஷ்ணுகணங்களைக் கட்டி விஷ்ணுவைக் காட்டுங்களென்று மிகவும் பயமுறுத்தினார்கள். இந்திரன் முதலிய சகல தேவர்களும் மிகுந்த பயத்தால் உலகங்களை விட்டவர்களாய்ப் பிராணனை மாத்திரங்காப்பதில் கருத்துடையவராய் தேவிமார்களோடு ஓடினார்கள். பரமேசருடைய தோழனை குபேரனும் நிதிகளையும் உயர்ந்த இரத்தினங்களையும் தள்ளிவிட்டுக் கைலாசத்திலுள்ள வனத்தில் நுழைந்தான். துஷ்டர்களான அசுரக்கூட்டங்களால் இங்ஙனமுலகம் துன்பஞ் செய்யப்பட்டது! ஓ! பூசுரோத்தமர்களே!



ஸ்வாஹா, என்பதும் "ஸ்வதா" என்பதுமுண்டாகவில்லை. யக்ஞங்கள் காரணத்தோடு அழிந்தன. தேவர்களும் பசியால் பீடிக்கப்பட்டார்கள். பூலோகத்தில் சகல முனிகளும் தவத்தின் நிலையைவிட்டனர். மிக்ககருணையின்றிய தானவர்களால் செய்யக்கூடாத காரியங்களில் செலுத்தப்பட்டவரானார்கள். எப்போதுங் குற்றேவலையே செய்கின்றவர்களாய் மிகவுந் துக்கப்பட்டவர்களாய் அழுதார்கள். ஓ! துவிஜர்களே! சில முனிகணங்களின் மேல், சில தைத்தியர்கள் ஏறினார்கள். சிலபேருடைய ஜடைகளைப் பிடுங்கித் தானவர்கள் கட்டினார்கள். சில பேர்களை மாமிசங்களையும் கட்குடங்களையுஞ் சுமக்கும்படிச் செய்தனர். நல்ல அழகான மனிதர்களைத் திநந்திநந் தின்றார்கள். மீன் பிடிக்கவேண்டுமென்ற ஆசையால் சமுத்திரத்தைக் கலக்கினார்கள். சூரியனுடைய இரதத்தை ஒடித்தனர். அவனுடைய குதிரைகளையுமடித்தனர். ஓ! ஆஸ்திகர்களே! பிரளயத்திற்போல இங்ஙனஞ் சகலமும் பயமுறுத்தப்பட்டன. சகல தேவர்களுங்கூடி மேருவின் வடபுறத்திலிருப்பவரும், சித்தர் கந்தர்வர் இவர்களால் துதிக்கப்படத் தக்கவருமான பிரமதேவரை அடைந்தார்கள். சிரசில் அஞ்சலியைவைத்துப் பூமியில் தண்டம்போல் நமஸ்கரித்தார்கள். தேவர்கள் அஞ்சலியஸ்தராய்ப் பிரமதேவரைத் துதிக்க ஆரம்பித்தனர்.

## தேவர்கள் சோல்லல்.

சர்வக்ஞரே! சகல வுலகேசரே! சகலத்திற்கு மதி[illegible]ரே! பரத்திற்கெல்லாம் பரமானவரே! சகல வேதாந்தங்களாலு முணரத்தக்கவரே! சிருஷ்டி, திதி, நாசகாரணரே! சகல வேதங்களுக்கு மிருப்பிடமானவரே! சகல சம்பத்தையுமளிப்பவரே! ஐந்துமுகமுடையவரே! உமக்கு நமஸ்காரம். விஷ்ணு வடிவமானவருக்கு நமஸ்காரம்.

தேவர்கள் வணங்கத்தக்கவருக்கு நமஸ்காரம். நான்குமுக முடைய உமக்கு நமஸ்காரம். ஓ பிரமதேவரே! சகல வுலகமும் இரவும் பகலும் துஷ்டர்களால் வருத்தப்படு கின்றன. முன்னுண்டாகாத மிகப்பெரிய துக்கம் எங்க ளுக்குண்டானது. புகலிடமின்றியவர்களாய்த் தேவரீரைச் சரணமடைந்த தேவர்களான எங்களை ஓ லோகேசரே! நீரே இரக்ஷிக்க யோக்கியமானவர் தேவரீரே உலகங் களுக்கு அடைக்கலமானவரன்றோ? இந்தச் சமயம் உபேக்ஷை செய்யக்கூடாது. துன்பத்தைப் பொறுக்க மாட்டோம். இங்ஙனந் தேவக்கூட்டங்களால் துதிக்கப் பட்ட பிரமதேவர், தேவர்களோடுங் கூடத் திருப்பாற் கடலை யடைந்து பரமபுருஷனை பகவான் யாண்டுச் சயனித்திருக்கின்றனரோ ஆயிரந் தூண்களோடுங் கூடின (அந்த) இரத்தின மண்டபத்தின் மத்தியில் முத்துக்களா லான மேற்கட்டியை யுடையதும், மந்தாரமாலைகளாலலங் கரிக்கப்பட்டதும், கஸ்தூரி சந்தன முதலியவைகளா லும், தூபங்களாலும் வாசனையாக்கப்பட்டதும், ஆயிரம் பணமுடிகளாலழகு விளங்குவதுமாய் இருக்கின்ற ஆதி சேஷனாகிய கட்டிலிலே சயனித்துக்கொண்டிருப்பவரும், நாரதர் முதலிய தேவரிஷிகளாலும் யோகீந்திரர்களாலும் துதிக்கப்படுபவரும், இந்திர நீலமணிப் பிரகாச முடைய வரும், மலர்ந்த தாமரை கண்களை யுடையவரும், நவரத் தினக் கிரீடமுடையவரும், இரத்தின குண்டலங்களா லலங் கரிக்கப்பட்டவரும், கஸ்தூரிப் பொட்டால் கொள்ளப் பட்ட வளைந்த புருவமாகின்ற கொடியின் மத்தியையுடை யவரும் ஆரம், கங்கணம், கேயூரம், கண்டாபரணம், இவற் றால் விளங்குபவரும், பீதாம்பரத்தையுடையவரும், பருத்த தோள்களையும் மார்பினையுமுடையவரும், தேவியான இல க்ஷ்மியால் எப்போதும் பிடிக்கப்பட்ட இருதிருவடிகளை



டயவருமான பகவானைத் தேவர்களனைவரும் ஆச்சரிய முடையவராய் அமிர்தக்கடலைப்போலப் பார்த்தார்கள். அப்போது பிரமதேவரை முதன்மையாகவுடையவர்கள் விஷ்ணுவைப் பார்த்து நமஸ்கரித்துத் துதித்தார்கள்.

### பிரமதேவர் முதலியவர்கள் சொல்லல்.

ஓ விஷ்ணுவே! சகல வுலகத்தின் காரணரே! உல கைப்பரிபாலிக்கும் முயற்சியுடையவரே! உலக பீடையை ஒழிப்பவரே! லோகேசரே! தேவர்களாலருச்சிக்கபட்ட வரே! உலகை யோம்புபவரே! மங்களத்தை யளிப்பவரே! வெல்க. அந்தமின்றியவரே வெல்க. மங்களவடிவினரே! கிரு பாசமுத்திரரே! இலக்ஷ்மியின் மனதிற்கு இரம்மியரே! வெல்க அசுர குலத்தை யழிப்பவரே! வெல்க கௌஸ்துப ஆபரணரே! வெல்க. பக்திகலையாலடையத்தக்கவரே! வெல்க. கோவிந்தரே! சுந்தரரே! வெல்க. முரனை நேரே அழித்தவரே! வெல்க. கருடக்கொடியை யுடையவரே! சுகம யுமக்கு நமஸ்காரம். உலகங்களுக்கு வரமளிப்பவரே! சுகத்தைக் கொடுக் ளிப்பவரே! நமஸ்காரம் நமஸ்காரம். கருமத்தின் சாக்ஷி குஞ் சீலமுள்ள வுமக்கு நமஸ்காரம். ஓ வியாபகரே! மத்ஸ்ய முதலிய யானவருக்கு நமஸ்காரம். மத்ஸ்ய முதலிய அவதாரங்களால் நீர் தயித்திய குலத்தைக்கொன்று முன் உலகத்தைப் பரிபாலித்தீர். தேவரீர் தருமத்தின் கரையா கவு மிருக்கின்றீரன்றோ. இந்தப் பதினான்குலகங்களும் உம் முடைய அவயவமன்றோ. ஓ பகவானே! விசுவ ரூபத்தின் அந்த அவயவங்களைத் திதியின் புத்திரர்கள் அழிக்கின்றனர். பிரமதேவர் முதல் நாங்களனைவரும் அவர்களால் எப் போதும் மலைக்குகையில் துன்புறுத்தப்பட்டவர்களாய் அதிகபயத்தோடு பெயரைக்காட்டாமல் இருக்கின்றோம். சத்தியலோக முதலியவைகளுமே அந்தத் துராத்மாக்க ளால் ஆக்கிரமிக்கப்பட்டன. "ஸ்வாஹா, என்பதும்

‘வஷட், என்பதும் “ஸ்வதா, என்பதும் அழிக்கப்பட்டன இவர்கள் மனிதர்களை யுண்கின்றனர். முனிகளின்மீது ஏறிக்கொண்டு நடக்கின்றார்கள். ஆகாயத்திற் சூரியன் சரிப்பதில்லை. சந்திரன் காணப்படவில்லை கிரகங்களெல்லாம் மறைந்தன. ஓ வியாபகரே! அதற்குக் கதியை நாங்களறியவில்லை. இவ்வளவு காலமும் நாங்கள் மேருவின் வடபாகத்திலிருந்தவர்களானோம். ஓ தாமரைக்கண்ணரே! பரிபாலிப்பவரில்லாதவர்களாய் உம்மைச் சரணமடைந்தவர்களான எங்களையும் மூவுலகையும் இரக்ஷிப்பதற்கும் அவர்களை யழிப்பதற்கும் தேவரீர் யோக்கியராயிருக்கின்றீர் தாமதஞ் செய்யக்கூடாது. அவர்களால் இவ்வுலகம் எரிக்கப்பட்டதாய் விடும்

சூதர் சொல்லல்.

இங்ஙனம் பிரமதேவர் முதலிய தேவர்களால் வாக்கியங்களைக்கொண்டு துதிக்கப்பட்ட விஷ்ணு, பெரிய மேகம்போல் கெம்பீரமான வாக்கால் தேவர்களுக்குச் சொன்னார்.

விஷ்ணு சொல்லல்.

ஓ! தேவசிரேஷ்டர்களே! மேருவின் சமீபமாக முன்போல் போங்கள் மதத்தினாற் கருவித்திருக்கும் தைத்தியர்களைச் சொற்ப காலத்திலே கொல்லுகின்றேன். அப்போது காரா (இருட்டு) கிருகத்தை யடையாமல் சகல தேவர்களுமிருக்கலாம். ஓ தேவர்களே! ஈண்டு எனது ஆணைப்படி பலவிதமான சத்தமிடவேண்டாம்.

சூதர் சொல்லல்.

உலக நியந்தாவாய்த் தைத்தியரைக் கொல்பவராயிருக்கும் விஷ்ணுவால் ஆக்ஞை செய்யபபட்டவர்கள் ஜெகத்பதியை நமஸ்கரித்துத் திருப்பாற்கடலினின்றும்



போய்விட்டார்கள். எப்படி அவர்களுக்கு நாசமுண்டாகுமென்று சிந்திக்கின்ற விஷ்ணுவிற்குச் சிவபிரானாற் சொல்லப்பட்ட வாக்கியத்தைச் சநார்த்தனருணர்ந்தார். சேஷசயனத்தைவிட்டு மகா லக்ஷ்மியை மார்பில் ஆலிங்கநஞ் செய்துகொண்டு கையில் சக்கரத்தையுடையவராய்ச் சமுத்திரத்தினின்றுந் தனிமையாய்ப் புறப்பட்டார். இந்தப் பூலோகத்திலே சிவபுரமென்ற இடத்தையடைந்து கிருபா சமுத்திரத்தில் மூழ்கி மகாதேவரான சிவபிரானைக்குறித்து லக்ஷ்மிநாயகர் தவஞ்செய்தார். புராதன இலிங்கத்தைக் கண்டு தாமரைகளா லருச்சித்தார். பழங்கிழங்குகளை நிவேதித்து விரும்பிய பயனை யெல்லாங் கொடுக்கும் தேவனை பார்வதியின் பதியை வேதத்திற்கூறிய நாமங்களால் துதித்தார். இங்ஙனஞ் சிலதினங்கள் செல்லுகையில் சிவபிரான், பக்தியைப் பார்க்கவேண்டுமென்ற இச்சையால் ஒரு தாமரைப்பூவை ஒளித்துவிட்டார். கொண்டுவந்த அந்தச் சகல தாமரைப்பூக்களாலும் உள்ளபடி பூஜித்து இந்தபூஜையின் கடைசி நாமத்திற்கு ஒரு தாமரை மலரைக் கண்டாரில்லை தாமரையைப்போன்ற (தனது) கண்ணைச் சீக்கிரமாகப் பிடுங்கினார். அதனால் மகாதேவரை விகாரமற்றவராய் நன்றாகப் பூஜித்தார். அவருடைய பக்திகுணத்தால் சந்தோஷித்த சிவபிரான் திரிசூலத்தையும், டமருகத்தையும், சக்கரத்தையும், பரசாயுதத்தையும், பிரகாசமுடைய கட்கத்தையும், மணியையுங் கயிற்றையும், கபாலத்தையும், நாகத்தையும், மேலான கட்வாங்கத்தையும், பத்துக்கைகளாலுந் தாங்கிக்கொண்டு கோடி சந்திரப்பிரகாசமுடையவராய் அந்த இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டார். உலகமாதாவான தேவியோடு முன்னிலையில் பரமேசர் இரத்தின குண்டலங்களாலலங்கரிக்கப்பட்டவைகளும், ஜடைகளான கிரீடத்தோடுங் கூடியவைகளும், பாதிச்சந்திரனாகிய இத

ழோடுங்கூடியவைகளும், பலவித நிறமுடையவைகளும், மிகத்தெளிவான புன்சிரிப்பாகிய முளைகளின் பிரகாசமுடையவைகளுமான ஐந்து முகங்களோடும் அனுக்கிரகித்தார். அநேக வாயிரங்கோடி சுரர்களாலும், கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டவரான சிவபிரானின், இரண்டு திருவடிகளில் வணங்கியவரும், கண்ணீரை வரிஷிப்பவரும், பரவசமானவரும், பரமானந்த சமுத்திரத்தில் மூழ்கிய மனமுடையவருமான விஷ்ணுவை (தயாநிதியான) பகவான் பத்துத்தோள்களாலும் எடுத்து ஆலிங்கனஞ்செய்தார். இவரை மிகவும் அழுத்தமாய்த் தழுவிக்கொண்டுச்சிமுகந்தார்.

### சிவபிரான் சொல்லல்.

ஓ சௌரியே! இப்போது இந்த வுனது பூஜையால் சந்தோஷமடைந் திருக்கின்றேன். பிரசந்நமான நான் விரும்பிய வரத்தை உனக்குக்கொடுக்கின்றேன், கேட்பாயாக.

### சூதர் சொல்லல்.

இங்ஙனம் இந்தச் சீதளமான வாக்கால் சிவபிரானால் சொல்லப்பட்ட இவர் மீண்டும் பரவசமாய் விழுந்தார். துள்ளிக்குதித்தார். (மீண்டும்) விழுந்தார். தெளிந்த வுணர்வுடையவராய்ப் பிரசன்னமான சிவபிரானைத் துதிப்பவராய் நன்றாய் நின்றார். கண்ணீரோடுங் தழுதழுத்த குரலோடுங்கூடின வாக்கியங்களால் விளக்கமின்றிச் சொன்னார்.

### விஷ்ணு சொல்லல்.

ஓ! தருணேந்து சேகரரே! தேவரீர் எனக்குப் பிரசந்நமாவீரேல் அசுர குலத்தை யழிக்கும் உம்முடைய ஆயுதத்தைச் சீக்கிரங்கொடுத்து ஓ சம்புவே! நிந்தையற்ற தொண்டனை வென்னைக் கிருபையால் இரக்ஷிக்கவேண்டும். ஓ சங்கரரே! தேவரீரின் இலிங்கத்தின் மகாத்மியத்தையும்



எனக்குச் சொல்லவேண்டுமென்றார் சிவன் மேலான பக்தியைப்பரீக்ஷிக்கும் பொருட்டு ஆண்டே அந்தர்த்தானமாயினார். சிவபிரான் காணப்படாத அப்போது உருத்திர நாமங்களால் (அவர்) தோத்திரஞ் செய்தார். மீண்டும் விஷ்ணுவால் செய்யப்பட்ட தோத்திரங்களால் பகவான் மிகப்பிரசன்னமானார். ஓ கோவிந்தரே! உமக்கு வசியமாயிருக்கின்றேன். சூரியப்பிரகாசமுடைய எனது சங்கையும் சத்துருவைக்கொல்லுவதில் சாமர்த்தியமுடைய மந்திர ராஜசவையும் வாங்கிக்கொள்வீர். ஓ கோவிந்தரே! இப்போது இலிங்கத்தின் வைபவத்தையுஞ் சொல்லுகின்றேன் கேட்பீராக. அநேக விஷ்ணுக்கூட்டங்களாலும் அநேக கமலாசனர்களாலும் அநேக உருத்திரர்களாலும் மற்றுமுள்ளவர்களாலும் அழிவற்ற இலிங்கம் பூஜிக்கப்பட்டது. ஓ அச்சுதரே! எவன் ஆண்டு என்னைப் பூஜிக்கின்றானோ அவனுக்கு நான் வசியனாகின்றேன். ஓ கோவிந்தரே! வேறு இலிங்கங்களைக்காட்டிலும் (இது) எனக்கு அதிக பிரீதியைக்கொடுப்பது. ஓ அச்சுதரே! என்னால் இலிங்கத்தின் வைபவத்தைச் சொல்லமுடியாது. அற்பபுத்தியையுடைய பிரமாமுதலிய வேனையோர்கள் எப்படி அறிவார்கள்? இந்த இலிங்கத்தின் பூஜையினால் நான் உனக்குச் சீக்கிரம் பிரசந்நமாயிருக்கின்றேன்

### சூதர் சொல்லல்.

இங்ஙனம் இலிங்கத்தின் மஹாத்மியத்தைச் சொல்லித் தடையற்ற சங்கைக்கொடுத்து மகா மந்திரத்தை அனுக்கிரகித்து இலிங்கத்தினுள்ளே மறைந்தார். பின்னர் சங்கை வாங்கிக்கொண்டு கர்வித்துள்ளவர்களும், இராட்சருள் மேலானவர்களும் பயங்கரமான தொழிலையுடையவர்களுமான இராக்ஷசர்களைச் சங்குத்தொனியால் நன்றாய்க் கொளுத்தி ஓடுதலையே உடையவர்களாகச் செய்து, இரா

க்ஷசக்கூட்டங்களைக் கொன்றவராய் உலகத்தை முன்போல் துன்பமற்றதாகக் கோவிந்தர் இரக்ஷித்தார். அற்புதமான இலிங்கமகாத்மிய முழுவதும் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. ஓ முனிவரர்களே! சிவபுரமென்னும் பெயரையுடைய க்ஷேத்திரத்தில் அத்புதமான இலிங்கத்தின் மகாத்மியத்தைச் சொல்லுகின்றவர்களாக ஓ ஆஸ்திகர்களே! பழமையான இலிங்கத்தின் மேலான பூஜையால் ஓ வேதத்தையுணர்ந்தோருள் மேலானவர்களே! பரமேசருடைய பிரசாதத்தை யடையுங்கள். சாதுக்களுள் மேலானவர்களே! சிவபிரானுடையவும் இலிங்கத்தினுடையவும் மாகாத்மியத்தோடுங் கூடின இவ்வத்தியாயத்தை எவன் படிக்கின்றானோ ஒருபோது மவனுக்குச் சமுசாரபயமில்லை. கேட்பவனுக்கும் பிரபு பிரசாதமளிக்கின்றார்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில் ஸநத்குமார ஸம்ஹிதையில்
சிவபுரிபுராணத்தில் இலிங்க வைபவ முரைக்கும்
ஆறாவது அத்தியாயம் முடிந்தது.

---

## ஏழாவது அத்தியாயம்.

### இலிங்க பூஜாவிதி யுரைத்தல்.

### முனிகள் வினவல்.

ஓ வேதவித்தமரே! ஐசுவரியமுடைய வும்மால் சிவபுரேசருடைய பழமையான இலிங்கத்தின் வைபவம் நன்றாகச் சொல்லப்பட்டது. விஷ்ணுவிற்குச் சங்குகொடுத்ததும் தைத்தியர்களைக் கொன்றதும். ஓ சூதரே! சகலார்த்தங்களையு முணர்ந்தோருள் மேலானவரே! விசேஷமாய் வருணிக்கப்பட்டன. அதன் பூஜாவிதியைக்கேட்க அதிகமான இச்சையுண்டாகின்றது. நல்ல சாது சிரேஷ்டரே! பரமேசருடைய அந்த இலிங்கம் பூஜிக்கத்தக்கது. ஓ நல்ல விரதசாலியே! எந்த இருதுவில் எந்தச் சவணத்தில் (மாசத்தில்) எந்த மந்திரத்தினால் ஓ நல்ல விரதமுடையவரே! தேவனுடைய பூஜைக்கு எந்தத் திரவியங்கள் பூஜிக்க யோக்கியமானவைகள்? எந்த ஆசாரத்தினால் விதிப்படி பூஜிக்கப்பட்டவராய் (அவர்) சந்தோஷத்தை யடைகின்றார்? ஓ! பகவானே! அவையனைத்தும் காருண்ணியத்தினால் எங்களுக்கு விரிவாய்ச் சொல்லல் வேண்டும்.

### சூதர் சொல்லல்.

ஓ வேதத்தையுணர்ந்தோருள் மேலானவர்களே! ஆண்டுள்ள இலிங்கம் திவ்வியமாயும், பழமையாயும் நித்திய சுத்தமாயும் பரஞ்சோதி சொரூபமாயும், வேதங்களாற் சொல்லப்பட்டதாயு முள்ளது. "ஊர்த்வாயதே நமஸ்துப்யம் ஊர்த்வ லிங்காயதே நம:" என்பது முதலிய இலிங்கமந்திரக் கூட்டங்களான வேதங்களால் இலிங்கஞ் சொல்லப்பட்டது. நிஷ்களங்கமானது. நோயற்றது. நித்தியமானது. தேவர்களா லுபாசிக்கப்பட்டது. பூஜையு மந்திரமுமில்லை. ஆவாகன முதலியவையுமில்லை. உபசாரமும் தோத்திரமுமில்லை.

பூஜையின் முடிவில் விசர்ஜ்ஜனமுமில்லை. சுவாநுபூதியொன்றுனேயே யறியத்தக்கது. கேவலம் ஞானகலை வடிவமானது. அதனது ஸ்மரண மாத்திரத்தால் பாதகங்களினின்றும் விடுபடுகின்றான். சச்சிதானந்த இலக்ஷணமுடைய சிவனே இலிங்கமாகின்றார். சிவனுக்கு இலிங்கமில்லையென்று ஹயக்ரீவர் முதலியோர்கள் அறிகின்றார்கள். ஹிருதயதாமரையிலேனும் புருவமத்தியிலுள்ள தாமரையிலேனும், (இலிங்கம்)எப்போதுந்தியானிக்கத்தக்கது. சிரசில்(பிரமரந்திரத்தில்) ஆயிரமிதழோடுங்கூடின தாமரையிலேனும், நல்ல யோகிகளால் பிராணவத்தோடு கும்பகத்தில் பிராணவாயுவைநிறுத்தி இலிங்கம்தியானிக்கத்தக்கது. மேலான இலிங்கம் அமிர்தத்தை வருஷிக்கின்றது. ஞானத்தால் ஜென்ம மரண ஜரை சோகங்களால் விடுபட்டவனாய், அமிர்தத்தை (மோக்ஷத்தை) அடைகின்றான். ஆஸ்திகர்களால் இந்திரியக் கூட்டங்களை யடக்கிச் சத்துவத்தோடுங்கூடிய புத்தியினால் ஏகாக்கிரமாக அந்த இலிங்கம் அநுசந்தானஞ் செய்யத்தக்கது. இங்ஙனந் தியானிக்கச் சக்தியற்றவர்களுக்கு வெளிப் பூஜை விதிக்கப்படுகின்றது. அது நித்தியம் அநித்திய மென்று இரண்டு பிரகாரமாகவுள்ளது. நித்தியமெனினோ, எக்காலத்திலுமுள்ளது. ஒவ்வோர் காலத்திலுள்ளது அநித்தியமானது. மனிதர்களுக்குச் சகல சித்தியைச்செய்வது சுருதி ஸ்மிருதிகளில் இலிங்கபூஜைக்கு வேறாய் மேன்மையானதொன்றுமில்லவேயில்லை. பிரமவிஷ்ணு முதலிய தேவர்கள் இலிங்கதின் பூஜையின் மகிமையால் சிருஷ்டி திதி முதலிய கிருத்தியங்களில்நெடுங்காலஞ் ஜீவிப்பவர்களாகநிலைத்திருக்கின்றார்கள். இலிங்கபூஜா பிரபாவத்தால் யோகிகள் நெடுங்காலஞ் ஜீவிப்பவர்களாகச் செல்லுகின்ற தினங்களையும், பிரமகற்பங்களையும் பார்க்கின்றார்கள். இலிங்கபூஜையால் அணிமாதி யஷ்டசித்தியும் வித்தை பொருள் தயாளத்



தன்மைகளும் மூன்றுலகிலும் பிரசித்தியுமுண்டாகின்றன. (அவை) இலிங்கமென்ற மகிமையினாலேயே யுண்டாகின்றன. வேறு கருமத்தாலன்று. இலிங்கத்தின் சேவையால் சாபமிடவும், அநுக்கிரகஞ் செய்யவும், சாமர்த்தியமுண்டாகின்றது. மகாத்மாக்களுக்கு இந்தப் பரமேச இலிங்கத்தின் பிரபாவத்தால் சிரவணஞ் செய்யப்படாத சாஸ்திரங்களை வியாக்கியானஞ் செய்யுஞ் சாமர்த்தியமுள்ள புத்தியுண்டாகின்றது. கந்தருவபதவியும், கருடபதவியும், யக்ஷஸ்பதவியும், உருத்திரபதவியும், பிரமபதவியும் விஷ்ணுபதவியும் ஆகிய இவைமுதலிய ஸ்தானங்கள் இலிங்கபூஜாபரர்களான மனிதர்களா லடையப்படுகின்றன. யாது யாது புதிய வானந்தமோ அதுவது இலிங்கத்தின் பூஜையினால் அடையப்படுகின்றது. நிஷ்பலமான வேறு கோடி கருமங்களாலுண்டாகவே மாட்டாது. ஓ பூசுரர்களே! சிரௌதஸ்மார்த்த சகல கருமங்களும் லிங்கார்ச்சனையின் பலத்தின் ஒரு அம்சத்தில் பதினாறிலொன்றிற்குச் சமமாகாதன. சிவலிங்க பூஜையில் அதிகாரமற்றவர்களுக்கு அக்கினிகோத்திர முதலிய கருமங்கள் முநீஸ்வரர்களால் விதிக்கப்படுகின்றன. நித்தியபூஜை மேலாகச் சொல்லப்பட்ட பிரம்ம விக்ஞானத்தைக் கொடுப்பது. அநித்தியபூஜை சாதகனுக்கு மேலான சித்தியைக் கொடுப்பது. ஓ ஆஸ்திகர்களே! மூன்று காலத்திலும் (மகேசருடைய இலிங்கபூஜை) பலவித வைதிக மந்திரங்களாலும், சோடசோபசாரங்களாலும் செய்யப்படுமிலிங்கபூஜையே நித்தியமெனப்படுகின்றது. மேலானதாயும், சுத்தமாயும், சகல பாபங்களைக் கெடுப்பதாயும், சகலானந்தத்தையுஞ்செய்வதாயும், திவ்வியமாயுமுள்ள கிருபாசாகரமென்னும் பெயருள்ள தீர்த்தத்தில் மூழ்கி நெற்றியினிடத்திலும், அங்ஙனமே மார்பிலும், நாபியிலும், இரண்டு கழுத்துபுரத்திலும், இரண்டு தோள்களிலும், சிரசிலும், கழுத்

திலும் "திரியாயுஷம்" என்பது முதலிய மந்திரங்களினால் வித்வான் திரிபுண்டரந் தரிக்கவேண்டும் உருத்திராக்ஷமுந் தரிக்கவேண்டும். நித்தியகருமமனைத்தையுஞ்செய்து அடக்கிய இந்திரிய மனமுடையவனாய் ஓ சௌரியே! சமுசாரத்திற்கு ஔஷதமான சிவனை பிம்பத்தில் தியானிக்கவேண்டும், பின்னர் அடங்கிய மனமுடையவனாய்ச் சிவபுரேசரை நமஸ்காரஞ் செய்யவேண்டும். முன்னர் தேவதேவரான பிநாகியை ஐந்து பிரகாரமாக நமஸ்கரித்து ஆலயத்தில் நுழையவேண்டும். பின்னர்க் கணத்தலைவரான யானைமுகத்தையுடையவரை நமஸ்காரஞ்செய்யவேண்டும். விதிப்படி விபுவின் சந்நிதியை யடையவேண்டும். பூஜைக்கு நிர்விக்கினமளிக்கும் பைரவரைப் புத்திமான் வணங்கவேண்டும். "கணாநாம்" என்ற மந்திரத்தினாலும் சோடசோபசாரங்களாலும் பிரமதர்களால் வணங்கப்பட்டவரும் சுராசுரர்களாலும் கந்தர்வர்களாலும் சேவிக்கப்பட்டவரும், சர்ப்பாபரணமுடையவரும், தேவதேவரும், சம்புவுமான சிபுரேசருடைய வாயிற்படியிலுள்ளவருமான நடனகணபதியைச் சகல காரியார்த்த சித்தியின் பொருட்டு மேலானபக்தியோடு பூஜிக்கவேண்டும். அவரது ஆணையைப் பெற்றுக் கிரமமாய்ப் பைரவரையு மருச்சிக்கவேண்டும். பின்னர் மகேசருடைய பின் பாகத்திலுள்ள ஸ்கந்தராகிய மயூரவாகனத்தையுடைய குகனை "சுப்ரமண்யோம்" என்று துதித்து, அந்த மந்திரத்தினாலேயே (ஸ்கந்தனை) அன்போடு அருச்சித்து பின்பு அந்த ஸ்கந்தனை நமஸ்கரித்துப் பின்னர் சகலாபரண முடையவளும், சகல துஷ்டர்களை யழிப்பவளுமான ஈசான சண்டிகையை "ஜாதவேதஸ" என்ற இந்த மந்திரத்தினாலும் ஆவாகனமுதலியவற்றாலும் பூஜித்துப் பின்னர் ஆக்ஞையைப்பெற்றுத் தேவனை நன்றாகப் பூஜிக்கவேண்டும். பிரணவத்தோடுங்கூடின பஞ்சா



க்ஷர மந்திரத்தினாலும் ஆவாகன முதலியவற்றாலும் சிவபுரேசரான தேவனை இலிங்கத்தில் பக்தியோடுங்கூடிய மனதால் அன்போடு பூஜிக்கவேண்டும். அல்லது பரமேசரை, உருத்திர மந்திரங்களினால் அபிஷேகஞ்செய்து வைக்கவேண்டும். தயிர், பால், இனிமையான தேன், எலுமிச்சரசம், இவைகளாலும் கஸ்தூரி பச்சைக்கருப்பூரம், குங்குமப்பூ இவற்றோடுங்கூடின சந்தனங்களாலும் திவ்வியமான சுத்த ஜல முதலியவைகளாலும் பக்தியோடு அபிஷேகஞ் செய்து வைக்கவேண்டும். சுகந்தத்தோடுங் கூடின மிருதுவான பரிசமுடைய வஸ்திரங்களினால் தேவனை உடுத்தவேண்டும். "கந்தத்துவாரே" என்ற மந்திரத்தினால் இலிங்கத்தைச் சந்தனங்களால் பூசி வில்வப் பத்திரங்களினாலேனும் அல்லது புதியசேகரமுடைய தாமரைகளினாலேனும் அருச்சிக்கவேண்டும். கொன்றைப்பூக்களாலும், தும்பைப்பூக்களாலும், ஊமத்தைப்பூக்களாலும், எருக்கம்பூக்களாலும், அர்ச்சிக்கவேண்டும் ஒரு கொன்றைப்புஷ்பத்தால் எப்படிச் சங்கரர் பிரியப்படுகின்றாரோ அப்படி மற்றைய புஷ்பங்களினால் பரமேசர் பிரியப்படுகின்றதில்லை. இலிங்கத்தின் சிரசில் வைக்கப்பட்ட ஒரு கொன்றைப் புஷ்பம் பிரம்மகத்தி முதலிய பாபங்களைச் சீக்கிரமாகவே (அது) அழிக்கின்றது. அப்படியே பரமேசரிடத்தில் பூஜிக்கப்பட்ட நீலோத்பலபுஷ்பம் கட்குடித்தலினாலான பாபத்தை உடனே க்ஷணத்திலழிக்கின்றது. சந்திர சூடரான தேவருக்கு அற்பித்த ஊமத்தம் புஷ்பம் குருத்துரோகமுதலிய வெல்லாவற்றையும் பஞ்சை (எரிக்கும்) அக்கினிபோல் எரிக்கும். கொன்றைப்பூ தேவனுக்குந் தேவிக்கும் மிகுந்த சந்தோஷத்தைச் செய்வது பிரசாதத்தை விரும்புகின்றவர்களால், தேவேசர் அதனாலேயே ஆதரவோடு பூஜிக்கத்தக்கவர். மாலைகளாலும் சுகந்தமுடைய புஷ்பங்களா

லும், மகேசரைப்பூஜித்து மற்றுமுள்ள புஷ்பபேதங்களா லும் பரமேசுரைப்பூஜிக்கவேண்டும். அப்படியே தூபங்க ளாலும், தீபங்களாலும், பலவித நைவேத்தியங்களாலும் சிலபுரேசரைப் பஜிக்கவேண்டும். சிவத்தைத் தாம்பூலங் களினால் பிரீதி செய்யவேண்டும். திவ்வியமான நீராஜநத் தால் சிவதத்தைக் கிரமமாக ஆராதிக்கவேண்டும். சாமரம் கொடை கண்ணாடி விசிறி முதலிய வுபசாரங்களாலும் விரும்பியவனைத்தையு மளிப்பவரும் காமனுக்கு விரோதியு மான உமையின் நாயகரை ஆராதிக்கவேண்டும். அழி வற்ற அம்பிகாபதியை வைதிகதோத்திரங்களினால் துதிக்க வேண்டும். மேலான பக்தியோடு இந்தப் பிரகாரமாக ஒருதரமேனும் பூஜை செய்யப்பட்டால் எந்த இடத்தி லிருந்தாலும் சகல பாக்கியங்களும் நிரம்பினவனாய் விரும் பியபடி போகங்களை யனுபவித்துப் புத்திரர் பௌத்திரர் முதலியவர்களோடுங் கூடினவனாய் சகல தேசங்களிலும் கீர்த்தியுடையவனாய்ச் சகல ஜந்துக்களாலும் பூஜிக்கப் பட்டவனாய் மனிதன் நூறுவருஷம் ஜீவிப்பான். இதில் விசாரிக்கவேண்டிய காரியமில்லை யாண்டு வசித்தவனா லும்தேவனாயும் கிருபாசமுத்திரமாயுமுள்ள பூஜிக்கப்பட்ட சிவபிரான் தனது சாரூப்பியத்தை அவனுக்குக் கொடுக் கின்றான். அநித்தியமான இந்த மகாபூஜை மனிதர்களுக் குச் சர்வாபீஷ்டத்தையுங்கொடுக்கும். ஓ விப்பிரர்களே! கிருபையின் வன்மையால் இது விரிவாக வென்று சொல் லப்பட்டது. ஓ சகல வேதார்த்தங்களையு முணர்ந்தோருள் மேலானவர்களே! சம்புவின் சாயுஜ்யத்தைக் கொடுக்கும் நித்தியபூஜையும் என்று சொல்லப்பட்டது. தேவர்களுக் குங் கிடைத்தற்கரியது. ஓ விப்பிரர்களே! உங்களுக்கு இப் போது இரகசியமு முண்மையாக என்னால் சொல்லப்பட்



டது. எப்போதும் பக்தியோடு தேவரான சிவபுரேசரைப் பூஜியுங்கள். உங்களுடைய ஜென்மதுக்கத்தை அழிக்கின்ற வரான சந்திரசேகரர் சீக்கிரம் அருச்சிக்கப்பட்டவராய்க் கருணாமூர்த்தி அனுக்கிரகஞ் செய்வார்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸனத்குமாரஸம் ஹிதையில் சிவபுரிபுராணத்தில்
இலிங்க பூஜாவிதி யுரைக்கும்
ஏழாவது அத்தியாயம் முடிந்தது.

# எட்டாவது அத்தியாயம்.

## சக்திபூஜா விதியுரைத்தல்

### முனிகள் வினவல்.

சிவனுடைய மேலான பூஜை நம்மால் இரண்டு விதமாகச் சொல்லப்பட்டன. சத்தியோடுங் கூடின தேவனுடைய பூஜையே புகழத்தக்கது. ஓ முனிபுங்கவரே! எதன்பொருட்டுத் தேவியின் பூஜை சொல்லப்படவில்லை? ஓ குருவே! வியாபகரே! சக்தியின் பூஜாவிதியைக் காருண்ணியத்தால் சொல்லுவீராக.

### சூதர் சொல்லல்.

எதனைக்கேட்டு மனிதன் விரும்பியதைச் சீக்கிரம் அடைகின்றானோ, அத்தகைய தேவியின் பூஜாவிதியைச் சொல்லுகின்றேன் சிரத்தையோடுங் கேட்பீர்களாக. முன்சொன்ன விதியினால் நித்திய கருமங்களையெல்லாம் முடித்துத் தேவியைக் காயத்திரியினால் பூஜிக்கவேண்டும். அல்லது பிரணவத்தினால் யஜிக்கவேண்டும். "பிரணோ தேவீ" என்ற மந்திரத்தினால் புத்திமான் தேவியை ஆவாகனஞ் செய்யவேண்டும். "ஆநோதிவ" என்ற இருக்கால் தேவிக்கு ஆசனங் கற்பிக்கவேண்டும். "சோதயித்ரீ" என்ற இருக்கால் அடங்கிய மனமுடையவனாகி அவளுக்கு அருக்கியங் கொடுக்கவேண்டும் "பாவிரவீ" என்றமந்திரத்தினால் பக்தியோடு பாத்தியங் கொடுக்கவேண்டும். "பாவகாநஸ்து" என்ற இருக்கால் பரமேஸ்வரியை அபிஷேகஞ் செய்துவைக்கவேண்டும். மூன்று கந்தங்களாலும், குங்குமப்பூ பச்சைக் கருப்பூரங்கூடிய மங்கள ஜலங்களாலும் சருக்கரை, தேன், பால், நெய், அரைத்த மஞ்சள் முதலியவற்றாலும் அருணோபநிஷத் மந்திரங்களாலும் பரதேவ



தையை அபிஷேகஞ்செய்து வைக்கவேண்டும். "இதத்வ" என்ற மந்திரத்தினால் புத்திமான் ஆசமநங்கொடுக்கவேண்டும். கஸ்தூரிவாசனையுள்ள குசும்பாவர்ணவஸ்திரங்களினால் சகல லோகத்திற்கு மொரே மாதாவான மகாதேவியை உடுத்தி "யத்வாசு" என்ற மகாமந்திரத்தினால் இளகிய குங்குமங்களைப் பூசவேண்டும். மல்லி, புன்னாகம், செங்கழுநீர் இவற்றாலும், முல்லை, பாதிரிமுதலியவற்றாலும், தாமரைகளாலும், வில்வபத்திரங்களாலும், தாழை, மகிழம், நீலோத்பலம் இவற்றாலும் வண்டுக்கூட்டங்கள் மொய்க்காத சம்பகங்களாலும், மலர்ந்த அசோகங்களாலும் "கௌரீமிமாய" என்ற மந்திரத்தினாலும் அகிலேசுவரியைப் பூஜிக்கவேண்டும். "சத்வாரீவாக்கு" என்ற இருக்கால் நைவேத்தியத்தையு நிவேதிக்கவேண்டும். தூபதீபங்களையும் உலகமாதாவிற்கு வரிசையாகக் காட்டவேண்டும். ஏலமுதலியவற்றோடுங்கூடின தாம்பூலத்தை சாக்ஷியானவளுக்குக் கொடுக்கவேண்டும். தேவிசூக்தத்தினால் சாந்திமந்திரங்களோடு உலகம் வணங்கத்தக்கவளைத் துதிக்கவேண்டும். "அதாம்பிதம்" என்ற இந்த மேலான மந்திரத்தை நன்றாக உச்சரிப்பவனாய் தேவிக்குப் புஷ்பாஞ்சலியை மிகுதியாக அடிக்கடிச் செய்யவேண்டும். மற்றுமுள்ள பலவிதமான தோத்திரங்களினால் உலகமாதாவைச் சந்தோஷிப்பிக்கவேண்டும். பிரதக்ஷண நமஸ்காரங்களாலும் பத்திபாவனையினால் குற்றமன்னிப்பை வேண்டவேண்டும். இதுவே சகல சித்தியையுமளிக்கும் சக்திபூஜையாம். சகலசௌபாக்கியத்தையும் மனிதர்களுக்குக் கொடுப்பது. சர்வவித்தையையளிப்பது. அல்லது முடிவான ஆசிரமத்திலிருப்பவரானால் பிரணவத்தினாலேயே பூஜிக்கவேண்டும். அல்லது காயத்திரியினாலேனும் அல்லது சக்தி பஞ்சாக்ஷரத்தினாலேனும் தேவியை பூஜிக்கவேண்டும். வெளிப்படாத சக்தியைப்

பூஜிக்கவேண்டும். இது வெளிப்பூஜையாகச் சொல்லப்பட்
டது. பூஜைகளுக்குள் உத்தமமாக அறியவேண்டும். மனி
தர்களுக்குச் சீக்கிரஞ் சித்தியை யளிப்பது. தியானஞ் செய்
யச் சக்தியில்லாதவர்களுக்கு இந்த வெளிப்பூஜை விதிக்கட்
டது. சுவாநுபவத்தைக் கொடுக்கின்ற சக்தியின் உட்பூஜை
யைக் கேளுங்கள். எட்டு இதழுடையதாயும் மாசற்ற
விளக்கமுடையதாயும் சுருங்கிய கேசரங்களை யுடையதாயு
முள்ள தாமரையை ஹிருதயத்தில் சிந்தித்துப் பிராணாயா
மங்களினால் மலர்ச்சியுள்ளதாக்கி ஹிருதயதாமரையின்
நடுப்போகுட்டில் ஜ்வாலையின் கூட்டத்தால் பூரணமாயும்
சூக்ஷ்மமாயும் வெளிப்படாததாயும் இருப்பதாக ஒரு
துவாரத்தை நினைக்கவேண்டும். அந்தத் துவாரத்தில்
எங்கும் முகமுடையதாகவும் கிரணக்கூட்டங்களால் மூடிய
தேகமுடையதாகவும் நிலைபெற்றதாகவும் இருப்பதாக அக்
கினியைச் சிந்திக்கவேண்டும். அதன் மத்தியில் மஹா
ஜ்வாலையுடையதாயும் சூக்ஷ்மமான நூலையொத்த பிர
காசமுடையதாயும் நீலமேகத்தின் மத்தியிலுள்ள மின்னல்
கொடிபோன்று விளங்குவதாயும் நெல்லின் வால் நுனி
போல் ரூபமுடையதாயும் மஞ்சள் வர்ணமுடையதாயும்
நிலைபெற்றதாயும் அக்ஞானமான உள்ளிருட்டை நீக்குவ
தாயுமுள்ள அதனைப் புத்திமான் நெடுங்காலந் தியானிக்க
வேண்டும். அதனது ஒருபாகத்தின் நுனியை இருப்பிட
மாகவுடையவளும், சேதன கலையானவளும், பரமேசுவரி
யும், சச்சிதாநந்த பரிபூரணமானவளும், ஞானவடிவின
ளும், சதாசிவையும் காருணிகையுமான சிவையை அடக்
கிய இந்திரியக் கூட்டமுடையவனாய் வாயுவை யடக்கிச்
சஞ்சலமற்றவனாய் உட்பொருளை குறிப்பாகக் கொண்ட
மனதால் பார்க்கவேண்டும். அவளையே சிவமென்று
சொல்லுகின்றனர். அவளைப் பிரமதேவரென்று ஏனை



யோர் சொல்லுகின்றனர். அவளை விஷ்ணுவென்றுஞ்
சொல்லுகின்றனர். அஹோ! அவளையே இந்திரனென
றுஞ் சொல்லுகின்றனர். அவளையே யுலகமென்றுஞ்
சொல்லுகின்றனர். அவளையே சரஸ்வதியென்றுஞ் சொல்
லுகின்றனர். அவளை வரங்கொடுக்கு மிலக்ஷ்மியாகவுஞ்
சொல்லுகின்றனர். அவளைச் சந்திரமண்டலமென்றுஞ்
சொல்லுகின்றனர். மனதையடக்கிய பிரம விஷ்ணு முத
லான யோகிகள் எப்போது முள்ளிருப்பவளாகவும்,
மனோவாக்குகளுக்குக் கோசரிக்க முடியாதவளாகவும்
(கருதி) அவளையே நமஸ்கரிக்கின்றார்கள். ஒருதரம் அவ
ளைத்தியானஞ்செய்தால் கோடி ஜென்மபாபத்தைக் கெடுக்
கும். மனிதர்களுக்குச் சகல ஆநந்தத்தைச் செய்வது.
யோகிகளுக்குங் கிட்டக்கூடாதது. பூஜையில்லை. ஆசார
மில்லை. முத்திரையில்லை. திரவிய சேர்க்கையில்லை. அநுசந்
தானமொன்று மாத்திரமே கைவல்லிய பதத்தின் காரண
மாகின்றது. அதற்குச் சமானமான பூஜை சுருதிஸ்மிருதி
களிலில்லை. வெளிப் பூஜையைப் பார்க்கிலும் பரமேசர் அநு
சந்தானங் கோடிபங்கு அதிகமாகின்றது. அல்லது ஹிரு
தயதாமரையில், அவயவமுடைய தேவியும் மங்களமான
வளும் கோடிசந்திரசமமான பிரகாசமுடையவளும் பாதி
சந்திரனையணிந்த சிரசையுடையவளும் நான்கு புஜமுடை
யவளும் விசாலமான கண்களையுடையவளும் நவரத்நகிரீ
டத்தையணிந்தவளும் புதிய மாணிக்க மாலையைத்தரித்தவ
ளும் சமமாய்ப் பருத்து உயர்ந்த தனங்களையுடையவளும்
வரத்தையும், அபயத்தையும், அக்ஷமாலையையும், கண்ணா
டியையும், தரிப்பவளும், அல்லது தாமரை அபயம் வரம்
இவைகள் விளங்குங் கரமுடையவளும், ஆழ்ந்த நாபியையு
டைய வளைந்த இடையையுடையவளும், பெருத்த நிதம்
பத்தின் பாரத்தால் வளைந்தவளும், மாணிக்க ஒட்டியாண

சத்தமுடையவளும், கங்கணந் தோள்வளை இவற்றால் அலங்கரிக்கப்பட்டவளும், சிவந்த வஸ்திரத்தால் மறைக்கப்பட்டவளும், பொன்மாலையை யுடையவளும், சச்சிதானந்த பிரவாகமானவளும், ஹிருதய தாமரையின் மத்தியிலுள்ளவளுமான தேவியைத் தியானித்துப் பின்னர் ஆசனமுதலிய உபசாரங்களால் தேவியைக்கிரமமாக பூஜிக்கவேண்டும். கலையோடுங்கூடின இந்தத்தேவிபூஜை விரும்பிய சகல பலத்தையுமளிப்பது. பிரயாசையின்றி மோக்ஷகாரணமானது. ஓ முனிவரர்களே! உண்மையாகச் சொல்லப்பட்டது. ஓ விப்பிரர்களே! முன்னொருகாலத்தில் பிரமதேவரின் புத்திரரும் தவசிகளுக்குள் மேலானவருமான நாரதர் வித்தையை விரும்பியவராய் உலககாரணரான பிதாவைக் கேட்டார். ஓ பிரமதேவரே! உம்மிடமிருந்து சகல வித்தைகளும் என்னால் படிக்கப்பட்டனவன்றோ? அவைகள் மறக்கப்பட்டன. ஓ பகவானே! அவைகள் எப்படி எனக்கு நிலையுடையனவாகும். என்ற அவரது வாக்கியத்தைக்கேட்டுப் பிரமதேவர் ஒரு க்ஷணம் சிந்தித்தார். அம்பிகையோடுங்கூடியவரும், அழிவற்றவரும், ஈசருமான மகாதேவரை யாண்டு உபாசித்தேனோ? சரஸ்வதியையும் சிருஷ்டித்தொழிலில் சாமர்த்தியத்தையும் யாண்டு அடைந்தேனோ? ஆண்டுபோகக்கடவீரென்று பிரமதேவரால் தவசிகளுக்குள் மேலானவர் அப்போது அனுப்பப்பட்டவராய் சுரர்களாலும் அசுரர்களாலும் நமஸ்காரஞ் செய்யப்பட்ட சிவபுரத்தை அடைந்தார். கிருபாசாகரத்தில் மூழ்கி அந்த ஜலத்தை மந்திரத்தால் ஆசமனஞ் செய்து தேவியையும் ஈசானனை தேவனையும் முனீஸ்வரர் தியானித்துக்கொண்டிருந்தார். நல்ல மனமுடைய மாணிபத்திரரென்ற ஒருவர் நாரதரைப் பார்க்கவந்தார். தேவரீர் தீனனைப்போல் ஏன் காணப்படுகின்றீரென்று கேட்டார்.



நாரதர் சொல்லல்.

ஓ மகா மதியுடைய மாணிபத்திரரே! ஈண்டுப் பூஜையின் பொருட்டு வந்திருக்கின்றேன். புஷ்பங்கள் வண்டுகளால் கெடுக்கப்பட்டிருக்கின்றன. அதனாற் றுக்கப்பட்டவனாக இருக்கின்றேன்.

மாணிபத்திரர் சொல்லல்.

ஓ முனியே! துக்கப்படவேண்டாம். சுவர்க்கத்திற்குப் போய் உனக்கு இப்போது நந்தன வனத்திலுண்டான திவ்வியமான மகத்தான புஷ்பங்களைத் தேவரீர் பூஜைசெய்யும் வரையிலும் நித்தியம் இங்கே அனுப்புகின்றேன்.

சூதர் சொல்லல்.

இங்ஙனம் மாணிபத்திரர் சொல்லிப் புஷ்ப பெட்டியைக்கொண்டுவந்தார். முனி தினந்தோறும் சுவர்ண நிறமுள்ளனவும் எப்போதும் வாசனையானவும் வாடாதனவும் வாசனையாக்கப்பட்ட திக்குகளான முகமுடையனவும் ஆகிய புஷ்பங்களால் அருச்சித்தார். அப்போது தேவி தனது திருமேனியைக்காட்டுபவளாய்ப் பிரசந்நமானாள். அவரது பூஜையால் மிகவும் சந்தோஷமடைந்தவரான சிவனும் பிரசன்னமானான். முனிவரர் நமஸ்கரித்துத் துதித்துத் தடையற்ற வித்தைகளை வேண்டிக்கொண்டார். பிரசந்நமான தேவனும் தேவியுமான இருவரும் (அதை) அவருக்குக் கொடுத்தார்கள். அதனால் முனிவித்தைகளுக் கிருப்பிடமாய்த் தனது இஷ்டப்படிபோனார் எப்போது சுவர்ண பூமாலைகளால் நாரதரால் அருச்சிக்கப்பட்டாளோ? அப்போது மங்களவடிவமான அவளை முனிகள் கநகவல்லியென்று துதித்தார்கள். ஓ ஆஸ்திகர்களே! சில முனிகள் அவளை வித்யா ஈஸ்வரியென்று சொல்லுகின்றார்கள். ஆகையால் கநகவல்லியென்னும் தேவியைப் பூஜிக்

கின்ற மனிதர்களான மகாபுண்ணிய முடையவர்களுக்கு ஓ சாதுவரர்களே! அடையமுடியாதது அற்பமுமில்லை. என்றுற்சொல்லப்பட்ட விதியோடு கநகவல்லியென்னுந் தேவியை ஓ முனிவரர்களே! பிரம்மவித்தையை யடையும் பொருட்டுச் சீக்கிரம் நன்றாக பூஜியுங்கள் சிவபுரத்திற்குச் சமமான க்ஷேத்திரம் உலகத்திலில்லை, கிருபாசமுத்திரத்திற்குச் சமமான தீர்த்தம் வேறொன்றுமில்லை. கநகலதா அம்பாளுக்குச் சமமான தேவி யெவளுமில்லை. சிவபுரேசருக்குச் சமமானதேவர் ஒருவருமில்லை.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸநத்குமாரஸம்ஹிதையில்
சிவபுரிபுராணத்தில் சக்தி பூஜாவிதியுரைக்கும்
எட்டாவது அத்தியாம் முடிந்தது.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

### வசிட்டர் புத்திரசோக நீங்குதல்.

### சூதர் சொல்லல்.

ஆசையால் பின் ஸ்தானத்தின் வைபவத்தைப் பிரியத்தோடு சொல்லுகின்றேன் ஓ பிரம்மத்தையுணர்ந்தோருள் மேலானவர்களே! கேட்டுக் கிருதார்த்தத் தன்மையை நீங்கள் அடையுங்கள். முன்னொரு காலத்தில் காதிபுத்திரரும் சகல ஐசுவரிய முடையவரும் அரசருமான விசுவாமித்திரர் மகாத்மாவான வசிஷ்டரோடு காமதேநுவின் பொருட்டுப் போர்புரிந்தார். காமதேநுவைப் பலாத்காரமாகப் பிடித்திழுக்கும்போது உக்கிரமான கீர்த்திவாய்ந்த விஸ்வாமித்திரருடைய சைனியம் ஹூங்காரத்தால் எரிக்கப்பட்டது. அதனால் அப்போது அரசர் "க்ஷத்திரியபலம் சீ! சீ!" என்று நினைத்துத் தேவனையடைந்து தவத்தால் அவனனுக்கிரகத்தையடைந்தார். ஸஸ்திர சாஸ்திரம், அஸ்திர சாஸ்திரம், இவற்றில் பிரவீணரான பிடிவாதமுடைய விஸ்வாமித்திரர் வசிஷ்டருடைய ஆசிரமத்திற்கு இருப்பிடமான வனத்தை அத்தியந்தம் எரித்து விட்டார். பின்னர் கோபமுள்ள வசிஷ்டர் பெரிய பிரம்மதண்டத்தால் சாதகப்புள் மழைதுளிகளை (க்கொள்வது)போல் சகல அஸ்திரங்களையும் இழுத்துக்கொண்டார். பின்னர் ஓ விப்பிரர்களே! யாதோவோர் காரணத்தால் காதி மைந்தர் அதிக கோபமுடையவராய் வசிஷ்ட முனிவருடைய நூறு புத்திரர்களையும் சபித்தார். அவருடைய சாபத்தால் வசிஷ்டர் புத்திரரான நூறுமுனிகளும் அழிந்துவிட்டனர். வசிஷ்டர் அவர்களைப் பார்த்துக் கடக்கமுடியாத துக்கத்தை யடைந்தார். அதிக துக்கத்தால் பீடிக்கப்பட்டவராய் மற்றைய ஜனங்களைப்போல் மிகவும் அழுதார்.

## வசிஷ்டர் சொல்லல்.

ஓ புத்திரர்களே! ஆதரவின்றிய வென்னைவிட்டு நீங்கள் போனீர்கள். அதிக தவத்தாலும் மிக்கச் செய்யமுடியாத விரதங்களாலும் நீங்கள் பிறந்தீர்கள். காமதேனுவின் பாலால் வளர்ந்தீர்களன்றோ? உங்கள் தவத்தின்வன்மையாண்டு சென்றது. உங்கள் பெருமையு மெங்கே போயிற்று. ஒரே நீச அரசனது சாபாக்கினிகளால் கொல்லப்பட்டீர்கள். கீர்த்திசாலிகளான உங்களை எந்த வயற்றினாற்பெற்றேனோ, இந்தப் பெரிய சோகமாகிய காட்டெரி அதனிடத்தில் இங்கே எனக்குண்டானது. அதில் போடப்பட்ட பிதாப் பொறுக்கின்றாரில்லை. ஓ புத்திரர்களே! ஜொலிக்கின்ற காட்டெரியை ஹிருதயத்தில் வைத்துவிட்டுப் பரலோகத்திலிருப்பவர்களாய் ஏன் என்னை வருந்தச்செய்கின்றீர்கள். நியமத்திலுள்ளவர்களும் சடைக்கூட்டங்களாலலங்கரிக்கப் பட்டவர்களும் பவித்திரத்தைக் கையிற்றரித்தவர்களுமான உங்களைப்பார்த்து எனக்குப் பசிதாகங்கள் ஓ புத்திரர்களே உண்டானதில்லையே. வசிஷ்டரான எனக்கு நூறுபுத்திரர்களாவென்று கோபத்தால் பிரமதேவர் எனது ஐசுவரியத்தைப் பொறுக்கவில்லையோ. பிரமதேவருக்கு என்னால் யாது செய்யப்பட்டது. அரசர்களுடைய சபையில் எனக்குச் சமானமானவர்களில்லை யென்று நானிருந்தேன். எரிக்கப்பட்ட புத்திரர்களை யுடையவனாய் அரசர்களுடைய சபையின் மத்தியில் நான் எப்படி நிற்பேன். சோகத்தினாலுண்டான நீர் நிரம்பிய கண்களையுடைய அருந்ததியை யெப்படிப் பார்ப்பேன். துன்பமாகிய நெருப்பு எனது மனதிலுள்ளே வடவாமுகாக்கினியைப்போலிருக்கின்றது. விவேகமாகிய நீர் முழுவதையும் மேலே ஜொலிப்பதாய் வற்றச்செய்கின்றது. புத்திரர்களுடைய மலர்ந்த தாமரைக்குச் சமானமான முகங்களை நான் பார்க்காமல்



ஓ எனது விதியே! யெப்படி உயிர் வாழ்வேன். புண்ணிய கருமமுடைய முனிகள் புத்திரர்களையுடையவர்களாகவிருக்கின்றார்கள். என் தலையிலேயே அனர்த்தக்கூட்டம் பிரமதேவரால் போடப்பட்டது. உபாசனையால் யாது எனக்குண்டானது. தவங்களால் யாது. விரதங்களால் என்ன. என்னால் சகலமும் செய்யப்பட்டு இப்படிப்பட்ட மிகப்பெரியதான பலன் அடையப்பட்டது. பர்வதத் தாழ்வரையினடியிலேனும் அல்லது மிகவுஞ் ஜொலிக்கின்ற நெருப்பிலேனும் உடலை விடுகின்றேன். மகரமத்ஸியங்கள் விழுங்கும் பொருட்டுச் சமுத்திரத்தில் விழுவேன். இவர் வசிஷ்டரென்று அறிந்து என்னை மகரமத்ஸியங்கள் கொல்லாதனவாகும். தருமராஜாவும் என்னைப் பாசத்தால் கட்டுப்பட்டவனாகச் செய்யமாட்டார். எப்படி யெனக்கு மரணமுண்டாகும். பூமியில் எப்படி யுடலை விடுவேன். யாண்டு எனது புத்திரர்களிருக்கின்றனரோ இங்கே யுடலைவிட்டு அந்த லோகத்திற்குப்போவேன். புத்திரர்களின்றி உயிர் வாழ மாட்டேன். எப்படிப்பட்ட மகாத்மாக்கள். உருக்கிய பொன்னுக்குச் சமமானவர்கள். தவத்தால் நெருப்புக்குச் சமமாய் விளங்குபவர்கள். அதிக வலுவுடையவர்கள். அந்த எனது புத்திரர்கள் சிங்கக் குட்டிகள் யானையாற் (கொல்லப்படுவது) போல் விசுவாமித்திரரால் கொல்லப்பட்டார்கள். எனது சோகாக்கினி எனது புத்திரர்களைக் கொன்ற அரசனை அத்தியந்தம் ஏன் சாம்பலாக்கவில்லை. எனக்கு இது எப்படி வந்தது. எனது பிரம்மபுத்திரத்தன்மை சீ! சீ! எனது புண்ணிய[illegible]லித் தன்மையுஞ் சீ! சீ! எனது முனீந்திரத் தன்மையும் சீ! சீ! எனது புரோஹிதத் தன்மையுஞ் சீ!

## சூதர் சொல்லல்.

இப்படியே புலம்புபவராய்த் தீனராய்ப் பூமியில் அடிக்கடி புரளுபவராய் இரண்டு கைகளாலும் சிரசிலும் வயிற்

றிலும் வாயிலும் மோதிக்கொண்டு, ஓ வேத முணர்ந்தோருள் மேலானவர்களே! வசிஷ்டபகவான் பெருங்குரல் விட்டழுதார். ஒரு நாட்டிலிருந்து ஒரு நாட்டையும், ஓரிடத்திலிருந்து ஒரு இடத்தையும் அடைந்து ஓ பூசுரர்களே! தீனனைப்போலும், உன்மத்தனைப்போலும், அதிகமாகப் பிதற்றுபவராய்க் கங்கை முதலிய புண்ணிய நதிகளிலும், பரிசுத்தமான குளங்களிலும், புண்ணியமான காடுகளிலும் தேவாலயங்களிலும் பிதற்றுபவராய்ச் சஞ்சரித்தும் முனி, துக்கத்தின் கரையை யடையவில்லை. இரம்மியமான சிதம்பரத்தை யடைந்து அதினின்றுஞ் சிவபுரத்தை யடைந்தார். எப்போது சிவபுரக்ஷேத்திரத்தில் முனி பாதங்களை வைத்தவராறோ அப்போது அவரது சோகமாகிய நெருப்பு நீரில் (விழுந்த) நெருப்புப்போல் சாந்தமானது. வசிஷ்டர் வியப்பை யடைந்தார். எனக்கு இஃதென்னே ஆச்சரியமா யிருக்கின்றது.

வசிஷ்டர் சோல்லல்.

சாபத்தால் எரிக்கப்பட்ட நூறு புத்திரர்களுடைய எந்தச் சோகம் எனது மனதில் நுழைந்துகொண்டு விருக்ஷத்தை (க்கொளுத்தும்) நெருப்புபோல் எப்போதுங் கொளுத்தினதோ அந்தச் சோகம் இப்போது என்னால் அற்பமு மனுபவிக்கப்படவில்லை. இஃதென்ன வியப்பு. மனதில் சாந்தி நன்றாயுண்டானது. துன்பமற்றவனாய்த் தாபமற்றிருக்கின்றேன். அமிர்தக்கடலில் மூழ்கினவனைப் போல் சந்தோஷமுடையவனாக அசைவின்றி யிருக்கின்றேன். சஞ்சலமின்றி யெனதுமனம் நித்திய கருமத்தில் முயலுகின்றது. ஈண்டுத் தவஞ் செய்யத் தக்கதென்று சிரத்தை மனதிலுதயமாகின்றது. துக்கத்தைக்கொடுத்த அவர்களுடைய மரணம் சொப்பனம்போல் விளங்குகின்றது. சிவருத்திராதி நாமங்கள் இயல்பாய் வாயினின்று



முண்டாகின்றன. எனக்கு முன்னிலையில் வேதங்களும் மந்திரக்கூட்டங்களும் மிக விளங்குகின்றன. எனது பிரமதண்டமும் அந்தத் தபோவனத்திலிருந்து வந்துவிட்டது. இது அதிக புதுமையானது. இது மிக வியப்பானது. பரமேசருடைய யாதோ சிறிது மகத்துவம் ஈண்டு இருக்கின்றதென்று ஆராய்ச்சி செய்கின்றேன். இல்லையென்றால் சோகமாகிய நெருப்பில் மூழ்கினவனுக்கு இப்படிப் பட்ட புத்தி யெப்படி யுண்டாகும். தேவியினுடைய அல்லது தேவனுடைய மேலான கருணையின் பெருக்கை ஈண்டு வெளிப் படுத்துகின்றது. மற்ற வேறொன்று மன்று என்று நினைக்கவேண்டும்.

சூதர் சோல்லல்.

பிரமதேவரின் புத்திரரான அந்த வசிஷ்டமுனிவர் இங்ஙனம் நன்றாக ஆலோசித்து க்ஷேத்திரத்தின் எல்லையில் கண்களைப் பரவச்செய்தார். விசுவகருமனாலுண்டு பண்ணப்பட்டதும், கோபுரத்தோடுங்கூடியதும், யுத்ததளத்தோடுங்கூடின மதிலையுடையதும், இரத்தினங்கள் பதித்த திண்ணையை யுடையதுமாயுள்ள இடத்தைப் பார்த்தார். ஆண்டு வில்வமரத்தின் கிழலடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களும், விபூதி உருத்திராக்ஷங்களா லலங்கரிக்கப்பட்டவர்களுமான முனிவரர்களையும், பின்னர், மலர்ந்த செங்கழுநீர்த்தாமரைப் பூக்களையுடையதாயும், அதிக ஆவலோடுங்கூடின கண்களுக்கு விருந்தாளியைப்போல் அழகுடையதாயுமுள்ள தீர்த்தத்தையும் பார்த்தார். பின்னர்ப் பேரிகை மத்தளங்களின் உத்தமமான சத்தத்தைக் கேட்டார். எங்கும் மயிர்க்கூச்செறிந்த வுடம்பையும், அன்பால் தழுதழுத்த குரலையும், ஆனந்தக் கண்ணீரோடுங்கூடின கண்களையும், உடைய முனிவர் அன்பால் பூரிக்கப்பட்டவராய்ச் சிவா வென்று உரக்க உச்சரித்துக்கொண்டு பூமியின்

மேல் விழுந்தார். பக்தியின் பெருக்கத்தால் தனது தேகத்தை அத்தியந்தம் மறந்தார். எங்ஙனமோ முனியெழுந்து இருபாசாகர தீர்த்தத்தில், ஓ விப்ரர்களே! மந்திர வுச்சாரணத்தோடு மாநசசரோவரத்தில் அழகிய அன்னப்பறவை (மூழ்குவது) போல் மூழ்கினர். அற்ப கிலேசமுமின்றியவராய் குளிர்ச்சியாக்கப்பட்ட திக்குக் கூட்டங்களையுடையதாகிய பூரணசந்திரன் சமுத்திரத்தினின்று மெழுவது போல் அந்தத் தீர்த்தத்தினின்று மெழுந்தார். ஆண்டுச் சாவித்திரியைச் செபித்து நித்திய கருமங்களை முடித்து உலகங்களுக்கு மாதாபிதாக்களாயும் மங்களவடிவாயுமிருக்கின்ற தேவனையுந் தேவியையுந் தரிசித்தார். இந்தமுனிவர் நமஸ்கரித்துச் சகல வுபநிஷதங்களிலுள்ள தோத்திரங்களினல் யானைமுகத்தையுடைய கணேசரையும், ஆறுமுகத்தையுடைய ஸ்கந்தரையும் துதித்துத் தேவரிஷி பக்தி பாவனையை முன்னிட்டவராய்ப் பூஜித்தார். பரமேசரான சிவபுரேசருடைய திருவடித்தாமரையை முனிவர்மார்பிலும் சிரசிலும் இரண்டு நேத்திரங்களிலும் தோட்களிலும் மிகத் திடமாய்த் தழுவிக்கொண்டார். தேவனுடையவும் தேவியினுடையவும் அனுக்கிரகத்தால் கிருதார்த்தனகை யிருக்கின்றேனென்று எண்ணிக்கொண்டு ஓ முனியே! தபோவனத்திற்குப் போவாயாகவென்று சொல்லப்பட்ட அசரீரி வாக்கை அவர் கேட்டார்.

## முனிசொல்லல்.

ஓ பகவானே! உண்டான உண்டாகப் போகின்றவைகளுக்கு ஈசனே! சகல வுலகங்களுக்கு மொரேகாரணனே! ஓ பக்தப் பிரியனே! உன்னுடையமாகாத்மியத்தை உன்னை விட யாரறிவார். உனது மேலான இந்த க்ஷேத்திரத்தில் ஓரடிவைக்த (மாத்திரதானுண்டாம்) வைபவத்தை ஹரியும், பிரமதேவனுமறிகின்றிலர். தேவர்களும் மனிதர்



களும் உணர்கின்றிலர் ஓ வியாபகனே! சிவனே! உனது மகிமையை நாங்களெப்படி யறிவோம். எப்போது சந்திரனைச் சிரசி லணிந்தவரும், அம்பிகையை யுடையவரும், புத்திரர்களை யுடையவரும், அழிவற்றவரும், நீலகண்டத்தை யுடையவரும், சமான மற்றவரும், மனோவாக்குகள் செல்லுகின்ற வழிக்கப்பாலானவருமான உம்மைப் பார்த்தேனோ? (அப்போதே) தன்னியனகை யிருக்கின்றேன். கிருதகிருத்தியனகை யிருக்கின்றேன். சந்தேகமில்லை. ஓ சந்திரகலையைத் தரித்தவரே! எப்போது உமது க்ஷேத்திரத்திற்கு வந்தேனோ (அப்போது) சகல அக்ஞானத்தினலான துக்கங்களின் சிரசில் என்னல் அடி வைக்கப்பட்டது. அத்தியாத்ம ஞான திடத்தின் பொருட்டு அம்பிகையோடு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வசிஷ்டரால் வேண்டப்பட்ட கருணைசமுத்திரான மகேசர் சொரூப சாக்ஷாத்காரத்தின்பொருட்டு முத்திரையைக் காட்டினர். சின்முத்திரையைக்கண்டதினலேயே சாக்ஷாத்காரத்தை அவர் அனுபவித்தார். ஓ சம்புவே! உன்னுடைய கிருபையின் பலத்தால் அடையவேண்டியவனைத்து மடையப்பட்டன வென்று சொல்லிப் பூமியில் தண்டம்போல் லோகேசரையும், தேவியையும், நமஸ்கரித்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தனது தபோவனத்திற்குப் போனர். அக்ஞான நாசகாரணமான ஸ்தானம் அதற்குச் சமானமாய் வேறொன்றுமில்லை. ஓ துவிஜர்களே! ஆண்டு ஒருக்ஷணமிருத்தல் மாத்திரத்தினலேயே அக்ஞான இருள் விடுபட்டவனைத் தனது ஆன்மஞானத்தை யடைகின்றான். ஓ முனிவர்களே! அந்தத் தீர்த்தத்திற்குச் சமமாய் கங்கையுமாகாது. அந்த க்ஷேத்திரம் தோஷமற்றது. அந்தத் தீர்த்தந்தோஷமற்றது. அந்தச் சிவனுந்தோஷமற்றவர். நான், மூன்றுதரம் உறுதி செய்கின்றேன்.

சூதர் சொல்லல்.

பிரமதேவர் இந்திரர் முதலானவர்களாலும் தேவசிரேஷ்டர்களாலும் அருச்சிக்கப்பட்டதாயும், சிவனுக்கு மேலானதாயுமுள்ள அந்த க்ஷேத்திரத்திற்கு நீங்களும் போய்த் தீர்த்தத்தில் மூழ்கி அம்பிகையோடுங்கூடின சிவபெருமானை நமஸ்கரித்துப் பக்தியை யுடையவர்களாய் வேண்டிய சித்தியை அவர்பாலடைவீர்களாக.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில்
ஸநதகுமாரஸம்ஹிதையில் சிவபுரி புராணத்தில்
வசிஷ்டர் புத்திரசோக நீங்கின.
ஒன்பதாவது அத்தியாயம் முடிந்தது.

## பத்தாவது அத்தியாயம்.

### மகா பாதகன் சிவபத மடைதல்.

சூதர் சொல்லல்.

ஓ நல்ல விரதசாலிகளே! மீண்டும் மேலான க்ஷேத்திரத்தின் மகிமையைச் சொல்லுகின்றேன். நீங்கள் மேலானசிரத்தையோடுங்கூடமேலானதும்இரகசியமானதுமான விதனைக்கேட்பீர்களாகவும். கொள்ளிவைப்பவனேனும், விஷங்கொடுப்பவனேனும், சுராபானஞ்செய்தவனேனும், குருமனைவியைக் கூடினவனேனும், பிராம்மணனைக் கொன்றவனேனும், பூமியைப் பிடுங்கினவனேனும், ஸ்தானத்தைப் பார்த்தலினால் (அப்பாதகங்களால்) விடுபடுகின்றான். இவ்விஷயத்தில் மேலாயும், இரகசியத்தினுமதிரகசியமாயும் நன்மையாயுமுள்ள வோர்கதையிருக்கின்றது. விசாலமென்னும் நகரத்தில் விசுக்கிரனென்னும் பெயரையுடைய ஒரு பிராம்மணனிருந்தான். சகல சாஸ்திரங்களிலுங் கெட்டிக்காரன். நற்குலத்தையுடையவன். புண்ணியகருமத்தைச் செய்தவன். யாகஞ்செய்வித்தவன். ஓ ஆஸ்திகர்களே! சகல யாகங்களுக்குந்தானே கருத்தாவாயிருந்தவன். பிராம்மணர்களால் பூஜிக்கப்பட்டவனாய் வைகானச மதத்தில் நன்றாகவிருந்தான். அவனுக்குச் சிவசிந்தையில் தக்ஷனுக்குப்போல் புத்தியுண்டானது. ஓ பிராம்மணருள் மேலானவர்களே! பூர்வத்திற் செய்யப்பட்ட மிகுந்த பாபத்தினால் சிவனுடைய மாகாத்மியத்தை நிந்திப்பவனாய் விஷ்ணுவிற்கு மேன்மையைச் சொல்பவனாயிருந்தான். மூடக் கொள்கையுள்ள சில ஜனங்களைக் குருபாவனை! செய்யும்படிக் கொண்டான். ஓ விப்பிரர்களே! யாண்டுச் சிவத்தியானபரர்களான யோகிகளிருக்கின்றனரோ ஆண்டுச் சென்று எப்போதும் பலாத்

காரமாய்ச் செய்யப்பட்ட வாதங்களால் பண்டிதனென்று தன்னை நினைப்பான். உடம்பை யுடையவர்களுக்குத் தமது ஆன்மவடிவானவரும் ஈசானராயு மிருக்கும் உருத்திரரைத் தூஷித்தான். சமுசாரத்திற்கு மருந்தானவரும், அம்பிகையோடுங் கூடினவருமான சிவபெருமானது பர தத்துவத்தை யார் அறிவார். அந்தத் தேசத்தின் அதிபதியான அரசன் சர்வக்ஞன். சகல சாஸ்திரார்த்தங்களையு முணர்ந்தவன். சிவநிந்தகன் யாண்டிருக்கின்றானோ அந்தத் தேசம் கொளுத்தப்பட்டதாகின்றது. விபூதி உருத்திராக்ஷமின்றிய பிராம்மணாதமன் யாண்டிருக்கின்றானோ அந்தத் தேசம் சகல ஜனங்களாலும் கெட்டதேசம்போல் தள்ளத்தக்கது. சிவருத்திராதி நாமங்களை நிந்திக்கின்ற மனிதன் யாண்டிருக்கின்றானோ அது க்ஷேத்திரமாயினும் நரகமேயாகும் சமுசயகாரணமில்லை. பஸ்மம், உருத்திராக்ஷம், நாமகீர்த்தனம், இவற்றில் தற்பரனானவன் நீசனானாலும் அவன் சத்துக்களால் எப்போதும் பூஜிக்கத் தக்கவனே. இதில் விசாரிக்க வேண்டிய காரியமில்லை. சுருதிகளும் ஸ்மிருதிகளுமே தடையின்றிக் கூறுகின்றன என்று (அம்) மகாராஜா நினைத்துச் சூத்திரத்தையும், சிகையையும், அறுத்து ஊருக்கு வெளியில் விசுக்கிரனைப் பலாத்காரமாகத் தள்ளிவைத்தார். அதுமுதல் அவனது முகத்தைத் தேசங்களிலுள்ள ஜனங்கள் பார்க்கவில்லை. பிராம்மணர்களது வீடுகளில் உணவின்றியவனாய் அன்னியர்களுடைய வீடுகளிலும், நீசரது வீடுகளிலும் தானே நுழைந்து அந்நங்களைப் புஜித்தான். பிறகு கெட்டுப்போன அவனை எல்லோரும் வீட்டில் நுழைய விடவில்லை. அவன் அந்தத் தேசத்தை விட்டுத் தெக்ஷிண திசைக்கு வந்தான். கொடிய ரக்ஷசால் ஆவேசிக்கப்பட்டு மயங்கியமனமுடையவனாய்ச் சுழன்றான். எப்போதும் மலத்தையுண்



பவனைக் கற்களால் ஜனங்களை யடிப்பவனைத் திகம்பரனாய் அணுகக் கூடாதவனாய் அநேக கெட்ட வார்த்தைகளைச் சொல்லுபவனாய் அவன் எந்த வீதியில் திரிகின்றானோ அங்கே ஜனங்கள் நிற்பதில்லை. குவித்த கையினால் மூத்திரத்தைப் பிடித்து ஜனக்கூட்டத்தில் இறைத்து அசுத்தஞ் செய்பவனையும் மிகவும் பாலர்களால் கற்களாலடிக்கப்படுபவனையும் இங்ஙன மநேகதேசங்களில் சஞ்சரித்தான். (நடக்கும்) வரிசையால் சிவபுரத்திற்குச் சென்றான். ஸ்தானத்திற்கு ஒரு குரோச தூரத்தில் இரவில் தனது இச்சைப்படி நடப்பவனைப் பெரிய சர்ப்பத்தால் கடிக்கப்பட்டு இருட்டில் விழுந்து மரித்தான். அவனை இழுத்துக்கொண்டு போக (வந்த) யமபடர்களுள், சிலர் சிங்கபற்களுடன் பயங்கரமான செந்நாய் முகமுடையவர்களும், சிலபேர் தேள் போல் மயிரை யுடையவர்களும், சிலபேர் காக்கையின் முக முடையவர்களுமாகக் குரூரர்களாய், உலக்கையையும், பிண்டிபாலத்தையும், கதையையும், கோடாரியையும், அங்குசத்தையும் எடுத்துக்கொண்டு அடிக்க முயற்சி யுடையவர்களாக வெப்போது காலனா லேவப்பட்டவர்களாய் விசுக்கிரனுடைய முன்னிடத்தில் வந்து நின்றனரோ? அதற்குமுன்பே திரிசூலத்தையேந்தியவர்களும், பயங்கரமானவர்களும், சிவாக்ஞையையுடைய கணத்தலைவரான நந்திதேவரால் ஏவப்பட்டவர்களுமான அந்தச்சிவகிங்கரர்கள் வந்தடைந்தனர். யமபடர் ஓ! தூதர்களே! அடியுங்கள் நன்றாயழியுங்கள் கொல்லுங்கள் பாசத்தால் கட்டுங்கள் என்று கோபத்தால் துவிஜனைக்கட்ட ஆரம்பித்தனர். அப்போது சிவகணங்கள் அவனைக் கோடிசந்திரப் பிரகாசமுடைய விமானத்தோடு கொண்டுபோக விரும்பியவர்களாய்த் தமது கணங்களைக்குறித்து இவ்வாக்கியத்தைச் சொன்னார்கள். பரமேசரது விமானத்தில் இந்தப் பிராம்

மணனை ஏற்றுங்கள். ஆபரணங்களா லலங்கரியுங்கள். மங்கள சந்தனங்களைப் பூசுங்கள். கற்பகவிருக்ஷத்திலுண்டான பட்டுகளால் இவனை ஆடையணிந்தவனாகச் செய்யுங்கள். கற்பகவிருக்ஷத்திலுண்டான புஷ்பமாலைகளைச் சீக்கிரம் சூட்டுங்கள். கந்தர்வஸ்திரீகளும் அப்ஸரஸ்திரீகளும் இவனுக்கு முன்னிலையில் நடனஞ்செய்யட்டும். ஏனென்றால் நமக்கு நந்திகேசர் எப்படிப் பூஜிக்கத்தக்கவரோ இவனு மப்படிப் பட்டவனன்றோ? என்ற கோலாகலமான பல சத்தங்களை (யெமபடர்கள்) பார்த்துப் பாபகருமமுடைய விசுக்கிரனை ஓ பூசுரர்களே! பலாத்காரமாக நாகபாசத்தால் பிடித் திழுத்தார்கள். பின்னர் மிகுந்த கோபத்தோடு சூலத்தையும் உலக்கையு மெடுத்துக்கொண்டு சிவகணங்கள் எமபடர்களை உடனே மிகவு மடித்தார்கள். மீண்டும் அந்தப் படர்களும் உலக்கை முதலானவைகளால் சிவகணங்களை அடித்தனர் ஓ புத்திமான்களே! இந்தப் பிரகாரமாக அவர்களுக்கு மூன்று முகூர்த்தநேரம் யுத்தமுண்டாயிற்று மிக்கபலமுடைய பிரமத கணங்களால் யமபடர்கள் தோல்வியடைந்தனர். சூலம், கதை முதலிய ஆயுதங்களையுடைய கணங்களை நியாயவாதத்தினால் கேட்டார்கள்.

## படர்கள் சொல்லல்.

உலகிற்குச் சாக்ஷியான அழிவற்ற சிவனே எல்லோருக்குந் தலைவராவார். அவருடைய கட்டளையால் நாங்கள் பாபமுடைய ஜனங்களை வதைப்போம். விஷ்ணுவின் அவதாரங்களையும் சிவன் காலவடிவத்தா லுண்கிறான். கலங்கிய மனமுடைய காலனாகிய ஈசனால் நாங்களனுப்பப்பட்டுப் பாபத்தில் இரமித்துக் கொண்டிருக்கும் விசுக்கிரனை வதைப்பதற்கு (நாங்கள்) வந்தோம். நெற்றிக் கண்ணையுடைய அந்தச் சம்புவே எங்களுக்குத் தலைவராவார். நாங்களெப்படியோ அப்படியே நீங்களும் அதிகாரத்தில் ஏவப்



பட்டீர்கள். ஓ கணங்களே! விபூதி, உருத்திராக்ஷம், சிவார்ச்சனை, இவற்றின் வயமாயுள்ள சிவபக்தர்களைத் திவ்வியமான விமானத்தோடு கொண்டுபோக எப்போதுமுங்களுக் கதிகாரமுண்டு. எங்களுக் கதிகாரம் வேறு. அப்படியே உங்களுக்கும் வேறு. பாபத்தில் இரமித்துக் கொண்டிருக்கும் விசுக்கிரனைக் கொண்டுபோகத் தெரியாமல் வந்துவிட்டீர்கள். உலக பயத்தை யுண்டாக்கும் யுத்தம் நம்மால் ஏன் செய்யப்பட்டது. நந்திதேவர் உங்களை வேறொருவனைக் கொண்டுவரும்படி அனுப்பினார். அந்த மகாத்மாவை மறந்து விட்டுப் பாபங்களுக் கிருப்பிடமான விசுக்கிரனைக் கொண்டுபோக இங்கே வீணாக வந்தீர்கள். நீங்கள் சிவனிடம் போங்கள். இப்போது தங்களை யொத்தவரது இந்த வரவு பரிகாசஞ் செய்யத் தக்கதானது. யுக்தியோடும் விவேகப் போக்கோடும் நியாயமாகவும் நாங்கள் சொல்லுகின்றோம். வேறன்று இந்தப் பிராம்மணன் பிறப்பால் தாந்திரீக மதத்தைப் பற்றியவன் ஆகையால் அகங்காரத்தால் அதிக மதம் பிடித்தவனாய் ஆசாரத்தை நழுவவிட்டவனானான். எவன் சகல வுலகிற்கும் பிரபுவான தேவேசனை அவனை நிந்தித்தான். சகல பாதகங்களுக்கும் பிராயச் சித்தம் விதிக்கப் படுகின்றது. ஒருதரமேனுஞ் சிவ நிந்தை செய்தவனுக்கு நரகக் கூட்டங்கள் போதாது. வாயையும், நாக்கையும், தலையையும், உடம்பையுங் குறுக்கேயறுத்துச் சூலத்தின் நுனியில் ஏற்றுதலையுஞ் சிவ நிந்தையின் பிராயச் சித்தமாகச் செய்கின்றார்கள். கேட்டவர்களுடைய காதுகளில் பழுக்கவைத்த எழுத்தாணியால் குத்துதலையும், நிந்தித்தவனைப் பார்த்தவர்களுடைய கண்களைப் பிடுங்குதலையும், பிராயச்சித்தமாகச் செய்கின்றார்கள். நிந்தகனைக் கொண்டாடும் மனிதர்களுக்கு ஸ்மிருதியில் சித்திரவதை சொல்லப்பட்டது. இதுவே சம்

புவின் எல்லாவற்றிற்கும் தலைமையாகவுள்ள ஆக்ஞையாகும். பிரமவிஷ்ணு முதலியோர்களாலுங் கடக்கமுடியாதது. நம்மால் எப்படிக் கடக்க முடியும்? ஆகையால் ஓ சிவகண சிரேஷ்டர்களே! கிங்கரர்களே! நீங்கள் சந்தோஷத்தோடுங்கூடினவர்களாய் சிவலோகம் போங்கள். நந்தீசருக்குத்தெரியப்படுத்துங்கள். நாங்கள் பாபியான இந்த விசுக்கிரனென்பவனைப் பாசத்தாற் கட்டிக்கொண்டு யமனுடைய பட்டணத்திற்குப் போகின்றோம். ஓ கணத்தலைவர்களே! மங்கள முண்டாகட்டும்.

## சூதர் சொல்லல்.

இந்தப் பிரகாரம் நியாயமானதாயும் தெளிவானவெழுத்துக்களை யுடையதாயுமான அவர்களுடைய வாக்கியத்தைக் கேட்டு அந்தச் சிவகணத்தலைவர்கள் கொஞ்சம் யுக்தியால் நினைத்ததைச் சொன்னார்கள்.

## கணங்கள் சொல்லல்

உங்களாற் சொல்லியவனைத்து முண்மையேயாகும் வேறன்று, அங்ஙனமேனும் இந்தத்துவிஜசிரேஷ்டன் ஆகாயவிமானத்தால் கொண்டு போகப்படுகின்றான். சிவநிந்தைக்குப் பரிகாரங் காணப்படுகின்றதில்லை. (ஆனாலும்) எல்லோருக்கும் சிவப்பிரசாதமே சிவநிந்தையைக் கெடுப்பது. நிந்திப்பவனுக்கு எப்படிச் சம்பு அருள்புரிவாரென்று சொல்லவேண்டாம். எந்தப் பிரகாரத்தாலும் எல்லோராலுமுபாசிக்கத் தக்கவராகவும்,உருத்திரராகவும்,சர்வவியாபகராகவும், யாரிருக்கின்றாரோ அவருக்கு இந்தஸ்தானம் ஓ புத்திமான்களே! மிகப்பிரியமானதென்று தெரிந்துகொள்வீர்கள். யாண்டு மனிதர்கள் மரணமடைகின்றனரோ ஜனங்கள் ஒருநாளேனு வசிக்கின்றனரோ மனதினாலேனு நினைக்கின்றனரோ அவர்களுக்குக் கெட்ட கதியுண்டாகக் கூடாதென்று சங்கரரது ஆக்ஞையென்று சுருதி ஸ்மிருதி



கள் கூறுகின்றன. பகிரங்க(வெளிச்) சாதனந்தாழ்ந்ததென்றும், அந்தரங்க (உள்) சாதனம் மேலானதென்றும், நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. உத்தர (சிந்தாந்த) பக்ஷங்கொள்ளத்தக்க தாகையால்(அது) பூர்வ (தள்ளத்தக்க) பக்ஷத்தை வாதிக்கின்றது. ஓ கிங்கரர்களே! உங்களால் அந்தத் தள்ளவேண்டிய பக்ஷஞ் சொல்லப்பட்டது. எங்களால் சொல்லப்பட்ட விதிசாஸ்திரத்தால் நிச்சயஞ் செய்யப்பட்டுள்ள அபவாத (தள்ளக்கூடாத) பக்ஷமாம்.

## சூதர் சொல்லல்.

இங்ஙனங் கிங்கரர்களுக்குச் சமாதானஞ்செய்து துவிஜசிரேஷ்டனைத்தேவவாத்திய முழக்கங்களோடுங்கூட விமானத்தோடு அழைத்துக்கொண்டு சிவகணங்கள் அவ்விடம் விட்டுத் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் வணங்கத்தகுந்த சிவபதத்திற்கு எல்லோரும் போனார்கள். கருணாநிதியான சிவபெருமான் அவனுக்குச் சாயுஜ்யத்தைக் கொடுத்தார். ஓ விப்பிரர்களே! ஆகையால் உங்களுக்குச் சொல்லுகின்றேன். அந்தஸ்தானம சிவபெருமானுக்கு மிகவும் இரகசியமானது ஓ புத்திமான்களே! நித்தியகருமத்தை விட்டவனேனும், ஆண்டு ஒரு க்ஷணம் வசித்துச் சம்புவின் சாயுஜ்யத்தை யடைகின்றான். இதில் விசாரிக்கவேண்டிய காரியமில்லை வேதத்திற் சொல்லப்பட்ட பலவிதமான சித்திகளை மனிதர்களுக்குச்செய்வது. நன்றாகத் தரிசித்தலினாலும் மரணமாதலினாலும், இருத்தலினாலும், சாயுஜ்யத்தைக் கொடுப்பது. விஷ்ணு, பிரமதேவர், முதலியவர்களாலும், தேவேந்திரர்களாலும். பூஜிக்கப்பட்டது. ஓ பிராம்மணவரர்களே! இந்த க்ஷேத்திரத்தை அடையுங்கள்.

இங்ஙனம் ஸ்காந்த புராணத்தில்
ஸநத்குமார ஸம்ஹிதையில் சிவபுரி புராணத்தில்
மகா பாதகன் சிவபதமடைந்த
பத்தாவது அத்தியாயம் முடிந்தது.

---

## பதினோராவது அத்தியாயம்.

### அநேக தீர்த்த வரலாறுரைத்தல்.

ஓ முனிவர்களே! உங்களுக்குப் பின்னர்த் தீர்த்தங்களையும், ஸ்தானங்களையும், நன்றாகச் சொல்லுகின்றேன். அதிக அன்போடு விசேஷமாய்க் கேளுங்கள். தேவனுடைய ஆலயத்தின் மத்தியில் ஆனந்தவாபி யென்னுந் தீர்த்த முண்டு. (அது) களங்கமற்ற தீர்த்தம் குடிப்பவர்களுக்கு எப்போது மானந்தத்தைக் கொடுப்பது. பரமேசரா லுண்டாக்கப்பட்டது. க்ஷேத்திரத்னால் தீர்த்தம் மேன்மையானது. அபிஷேகத்தின் பொருட்டானது. தெளிந்தது. உருசியுள்ள நீரால் மனதிற்குப் பிரீதியானது. ஆண்டுக் கங்கை முதலிய நதிகள் தத்தமது பாப நிவர்த்தியின் பொருட்டுச் சூரியன் தனுர் ராசியோடுங் கூடும்போது முயற்சிப்பட்டு (இடத்தை) வந்தடைகின்றன. தாமரை வாசனையோடுங் கூடின சீதளமான ஆனந்த வாபியினுடைய ஜலத்தால் (யாவன்) இலிங்கத்தின் சிரசில் பக்தியோடு அபிஷேகஞ் செய்கின்றானோ அவனுடைய புண்ணிய பலத்தைச் சொல்ல ஆதிசேஷனுஞ் சமர்த்தனல்லன். ஆனந்தவாபியின் தீர்த்தத்தால் சிவபெருமான் எப்படிச் சந்தோஷமடைகின்றாரோ அப்படி பால் தயிர் முதலியவற்றின் அபிஷேகத்தாற் சந்தோஷமடைவதில்லை. தேவனான பரமேசரது ஸ்நானத்தின் பொருட்டு ஆனந்தமே. ஓ விப்பிரர்களே! சிவனுடைய கட்டளையாலேயே வாபிரூபமாகவானதன்றோ? ஆனந்த சக்தியோடுங் கூடின தேவதேவனான சூலத்தை யுடையவனுக்கு அந்தத் தீர்த்தம் மிகப் பிரியமானதென்று எனக்கு வியாசர் சொன்னார். அதில் சாயைப் பார்க்காமல் நிர்ம்மலமான ஆனந்த தீர்த்தத்தை எடுத்துச் சகல துக்கங்களும் போகவேண்டி ஸ்நானஞ்



செய்யவேண்டும். மூழ்கினவனது சிரசில் கங்காதேவி யுண்டாகின்றாள். கண்டத்தில் கறுப்புண்டாகின்றது நெற்றியிற் கண்ணுண்டாகின்றது. சிரசி னிடதுபாகத்திற் சந்திரனும், உடனே ஒருகையில் மானும், மற்றோர் கையில் பரஸாயுதமு முண்டாகின்றன. அந்தத் தீர்த்தம் மனிதர்களுக்கு இந்தப் பிரகாரமாகச் சங்கரத் தன்மையைக் கொடுப்பதாகின்றது. எவனுக்கு மேலான ஜென்ம மிருக்கின்றதோ அவனாண்டு மூழ்க விரும்புகின்றான். ஆண்டு எம்மனிதர் மூழ்குகின்றனரோ (அவர்கள்) நித்தியமான சாரூப்பிய பதவியை யனுபவிப்பாகின்றனர். அதனது மகாத்மியத்தைச் சொல்ல நூறு வருஷங்களும் போதாது. ஆண்டு எவர்கள் சிவபக்தருக்குத் தனத்தையும், தானியத்தையும், வஸ்திரத்தையும், பூமியையுங் கொடுக்கின்றனரோ அவர்களுக்குச் சிவவடிவமே பலமாகின்றது வேறன்று. ஈண்டதிகமாகச் சொல்வதினால் யாது (பயன்.) சுருக்கமாகச் சொல்லுகின்றேன். மோக்ஷசுகத்தை அடைகின்றவனே அந்தத் தீர்த்தத்தில் மூழ்க இச்சிக்கின்றான். மற்றவனன்று. பைரவர் காலபாசத்தால் மிக்கப் பாப முடையவர்களை வேறிடத்திற்குக் கொண்டுபோகின்றார். அதற்குச் சமானமான தீர்த்தம் மூன்றுலகிலுமில்லவேயில்லை. க்ஷேத்திரத்தின் ஈசானிய திக்கு மூலையில் சக்தி தீர்த்தம் (ஒன்றிருப்பதாக) எண்ணப்படுகின்றது. அதில் மனிதன் பக்தியோடு, மாக (மாசி) மாதத்தில் மக நக்ஷத்திரத்தில் மூழ்கிச் சக்தியளவாய்த்தனங் கொடுத்துச் சிவசாயுஜ்யத்தை அனுபவிக்கின்றான். க்ஷேத்திரத்தின் கிழக்குத்திக்கினிடத்தில் உத்தமமான குமாரதீர்த்தமுண்டு ஆண்டு சங்கராந்தியிலே பௌர்ணமி திதியிலே வியதிபாதத்தில்(நித்தியமுண்டாகும் யோகத்தில்ஒன்று)(மூழ்கி) விசேஷமாய்க் கிருத்திகையிலு மூழ்கிச் சக்தியளவாய்த்

தனத்தைத் தானஞ்செய்து சீக்கிரம் பாபங்களினின்றும் விடுபடுகின்றான். பிராம்மணனைக் கொன்றவனும் விடுபடுகின்றான். அதற்கு மேற்கில் ஸ்கந்தரை இஷ்டசித்தியின் பொருட்டு அருச்சிக்கவேண்டும். பின்னர் வடக்கில் காவேரி தீர்த்தம் சகலத்திலும் மேலுக்கு மேலானது. ஒரு தரமூழ்கல் மாத்திரத்தினால் உடலைத்தாங்குகின்றவர்களுக்குச் சுவர்க்கத்தைக் கொடுப்பது. ஆண்டே கன்னிகையையும் பூமியையும் வஸ்திரத்தையும் தானியத்தையும் தனத்தையுந்தானஞ்செய்து சீக்கிரம் நித்தியமான பதவியையடைகின்றான். க்ஷேத்திரத்தின் தெற்குப் பாகத்தில் அங்குஷ்டமென்னும் பெயருள்ள தீர்த்தம் கிருபையினால் சிவனுடைய அங்குஷ்டத்தினால் கீறியுண்டுபண்ணப்பட்டது. அருச்சுனனோடு யுத்தஞ் செய்து பக்தியின் திடத்தன்மையை யறியும் விருப்பத்தினால் அருச்சுனனை உருண்டையாகச்செய்து கட்டி ஆகாயத்தின் சந்தில் எறிந்தார். அவன் வீழ்வதற்கு முன்னர்த் தாமரை, செங்கழுநீர் முதலிய பூக்கள் நிரம்பிய தீர்த்தத்தைத் தானே ஈசர் அங்குஷ்ட விரலால்கீறியுண்டாக்கி அதில் வீழும்படிச்செய்தார். பின்னர்ச் சிவபெருமான் பிரசாதமளித்தார். வேடரூபத்தை விடுத்துப் பிரமதேவர் விஷ்ணுமுதலியோர் வணங்கத்தக்கவராய்க் கருணைநிதி பிரகாசமுடைய பாசுபதாஸ்திரத்தை அவனுக்குக் கொடுத்தார். அதில்மனிதன் மூழ்கினால் மீண்டும் பூமியில் பிறப்பை யடையான். ஆண்டுத்தேவனை முதற்கடவுளாயுள்ள சிவனைப்பக்தியோடு பூஜிக்கவேண்டும் பின்னர் மாதுருகை யென்னு முத்தமமான தீர்த்தத்தை நன்றாகச்சொல்லுகின்றேன். இந்தத் தீர்த்தத்தில் எந்த மனிதன் மகா நவமியில் மூழ்கி மந்திரத்தைச் செபிக்கின்றானோ (அவன்) பிரம்மவித்தையை யடைகின்றான். நிச்சயமாய்க் கவிராஜனுமாகின்றான். மேற்குத் திக்கில் பிரமதேவரால்



முன்னொரு காலத்தில் பிரமகுண்டமென்னுந் தீர்த்தமுண்டு பண்ணப்பட்டது. ஆண்டு மகா தீர்த்தத்தில் மூழ்கிச் சிவபக்தனுக்குத் (தானம்) செய்யவேண்டும். விஷு (சித்திரை ஐப்பசி மாசங்)களிலும் அயனங் (தக்ஷிணாயன உத்தராயண காலங்)களிலும் மூழ்கினவன் சகல பாபங்களினின்றும் விடுபடுகின்றான். கட்குடித்தல் முதலிய பாதகங்களினின்றும் விடுபடுகின்றான. இதில் சந்தேகமில்லை. அந்தத் தீர்த்தத்தின் சமீபத்தில், உத்தமமான பைரவதீர்த்தமுண்டு. சகல அபஸ்மார (காக்கைவலி பைத்திய)ம் குஷ்ட முதலிய வியாதிக்கூட்டங்களை யெல்லா நீக்குவது அதில் மங்கள வாரத்தில் அடங்கிய மனமுடையவனாய் மூழ்கித் தனது சக்தியனுசாரம் தனம் வஸ்திர முதலியயவற்றைச் சிவயோகிக்குக்கொடுக்கவேண்டும். பைரவருடைய பிரசாதத்தினால் பயங்கரமான கஷ்டத்தை யடையமாட்டான். அதற்கு வடக்குத் திக்கில் உத்தமமான வசிஷ்டதீர்த்தமுண்டு மூடபுத்தியுள்ள மனிதனாலும் மூழ்கி முனிகணங்களால் சேவிக்கப்பட்ட வசிஷ்டேசரை நமஸ்காரஞ்செய்து தபோசித்தியையடைகின்றான். ஆண்டுப் பஞ்சாக்ஷரத்தைச் செபித்தால் மனிதன் பிறப்பை யடையமாட்டான். அதனது வடக்குத் திக்குப்பாகத்தில் விநாயக தீர்த்தமுண்டென நினைக்கப்படுகின்றது. அதன் கரையில் கணங்களைப் பரிபாலிக்குந் தலைவரோடுங்கூடக் கணபதியான பிரபுவிருக்கின்றார். ஆவணி மாசத்தில் சுக்கிலபக்ஷத்தில் சதுர்த்தியில் வெள்ளிக்கிழமையில் மூழ்கித் தேவனாகிய கணேசரான விக்கின ராஜாவை விதிப்படி நன்றாகப் பூஜித்துப் பக்தியோடுங் கூடினவனாகப் பதினாயிரம் மோதகத்தை நிவேதிக்கவேண்டும். அறுகுகளாலும், கரும்புத் துண்டுகளாலும், பொரிகளாலும், தேன், நெய்களாலும், ஓ முனீசர்களே! கணநாதருடைய பிரசாதத்தின் பொருட்டு ஓமஞ்

செய்யவேண்டும். அந்த மேலான மனிதனுக்கு அனுக்கிரகஞ் செய்த வித்தையை யுடையவனாகவுந் தனதிபதியாகவுஞ் செய்கின்றார். அவனுக்கு உலகங்களும் வசமுடையன[illegible]ன்றன. ஓர் காலத்தில் ஸ்ரீமானான கணபதி, பிரமதர்களால் சூழப்பட்டவராய்ச் சந்தோஷத்தால் வில்வவனத்தில் இங்குமங்கும் மிகுதியாகச் சஞ்சரித்தார். மிகுதியாகச்சுற்றினமையால் எல்லோருந் தாகத்தால் பீடிக்கப்பட்டவர்களாய்ப் பூமியில் விழுந்தவர்களானார்கள். அப்போது கணங்களுக்குத்தலைவர் பார்த்தார். தனது வலுமையால் சீக்கிரம் தனது துதிக்கையின் நுனியை நீட்டி அலைக்கூட்டங்களோடுங் கூடின கங்கையைச் சீக்கிரங் கொண்டுவந்து அவர்களுக்குக் குடிக்கும்பொருட்டு யானைமுகத்தையுடையவர் கொடுத்தார். அந்தச் சீதளமான ஜலத்தைக்குடித்துப் பிரமதர்கள் சிரமமற்றவர்களானார்கள். எவன்கணேச தீர்த்தத்தில் மூழ்குகின்றானோ அவனுக்குச் சகல விக்கினங்களுமில்லை. மகோதயமான கிருபாசாகரமென்னு மிந்தத் தீர்த்தம் தீர்த்தங்களுக்குள் பிரதானமானது. எவன் எந்தத் தீர்த்தங்களில் மூழ்கி (யெவன்) தீர்த்த சிரார்த்தத்தைச் செய்கின்றானோ அவன் இருபத்தொரு குலத்தைக் கரையேற்றிச் சிவலோகத்தை யடைகின்றான். மேலான தீர்த்தங்களின் மாகாத்மியம் அன்போடு சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. இவற்றின் மகிமையை முழுவனஞ் சொல்ல நான்முகப் பிரமதேவருஞ் சமர்த்தரல்லர். ஓ தீரர்களே! இரகசியத்தினு மதிக ரகசியமாயு முள்ள வுத்தமமான ஸ்தானஞ் சொல்லப்பட்டது. அதற்குச் சமமான ஸ்தானமில்லை. மூன்றுதரம் நான் சத்தியஞ் செய்கின்றேன். சில பேர் பிரகஸ்பதியினிடமிருந்தும் அங்ஙனமே மற்றுஞ் சிலர் வியாசரிடமிருந்தும் மற்றுஞ் சிலர் நந்திகேசரிடமிருந்தும், அங்ஙனமே மற்றுஞ் சிலர் ஸநகரிடமிருந்தும்



சிவபுரேசருடைய வேத சம்மதமான மாகாத்மியத்தைக் கேட்டு ஆண்டுச் சிவனைப் பூஜித்துச் சாஸ்வதமான சித்தியை யடைந்தனர். சிவனுடைய புரமென்னு மிந்தஸ்தானம் வேதத்தால் மிகவும் பிரதிபாதிக்கப்பட்டது. ஆண்டு வசித்தல் மாத்திரத்தினால் * மூன்று கிரந்திகளையும் பிளந்து தேவதேவசனாகிய சிவன் தனது சாயுஜ்யமான நல்லபதத்தைக்காண்பிக்கின்றான். இரம்மியமான தீர்த்தங்களும் ஸ்தானங்களும் பலவிதமாயிருக்கின்றன. அவைகளுக்குள் சிவபுரம் இரம்மியமானது. சீக்கிரம் ஈசரது பிரசாதத்தை யளிப்பது. ஓ முனிகளே! இப்போதுங்களுக்கு ஸ்தானத்தின் வைபவஞ் சொல்லப்பட்டது. எவர்கள் ஸ்தானத்திற்கு அநிஷ்டத்தைப் பூமியில் மயக்கமுடையவராய்ச் செய்கின்றனரோ அவர்கள் கோரமான யமகிங்கரர்களால் நூறு பிரமதேவர்களின் கற்பகாலம் வரையிலும் துன்புறுத்தப் படுகின்றார்கள். பிராகாரம், கோபுரம், தீர்த்தமுதலியவைகளையும் எவர்கள் செய்து வைக்கின்றனரோ அவர்கள் சிவனுக்குச் சமான மானவர்களாய்ப் பிரம விஷ்ணுமுதலிய தேவர்களால் துதிக்கப்படுகின்றார்கள். பழமையான மதில் முதலியவற்றைப் புதுப்பித்தால் உருத்திரசாரூப்யத்தையடைவான். கிருபாசாகர தீர்த்தத்திற்கு எவன் கெடுதியைச் செய்கின்றானோ ஓர்போதேனு மவனிடத்தில் யமன் கருணை செய்யமாட்டான். இந்தத் தீர்த்தத்தில் விளையாடக் கூடாது. ஓர் போதும் கைகளால் நீந்தக் கூடாது. மண்ணால் சுத்தி செய்யக்கூடாது. பாதங்களைக் கழுவக்கூடாது. உடலின் மலத்தைக் கழுவக்கூடாது.

---

* பிரம்மகிரந்தி, விஷ்ணுகிரந்தி, ருத்திரகிரந்தி, என்பனவாம். அல்லது கர்மகிரந்தி, சகஜகிரந்தி, பிரமகிரந்தி, எனினுமாம். முன்னையதே புண்மையானது.

வஸ்திர முதலியவற்றை வெளுக்கக்கூடாது. அப்படிச்
செய்தவனுக்குப் பாப நீங்காது. இதில் விசாரிக்கவேண்
டிய காரியமில்லை. எப்படிச் சிவனிடத்திலும் எப்படி
வேதத்தினிடத்திலும் எப்படி மந்திரத்தி னிடத்திலும் எப்
படிக் குருவினிடத்திலும் (பக்தியுண்டோ) அதைவிட மிக்க
அதிகமாகவே கிருபாசாகரத்தில் பக்தி வைக்கவேண்டும்.
பிரம்மஹத்தி முதலிய சகல பாபங்களையும் காட்டெரி
காட்டை முழுவதும் அழிப்பதுபோல் தீர்த்தம் எரித்து
விடுகின்றது. அந்த மகா தீர்த்தத்தில் பாபஞ் செய்தவன்
அழிந்துபோய் விடுகின்ருன். ஆகையால் ஓ நல்ல விரத
சாலிளே! ஆண்டுத் தவறில்லாமல் வசிப்பவர்களுக்குச் சிவ
புரேசருஞ் சதாசிவருமான அம்பிகாநாதர் கிருபைசெய்
கின்ருர். இன்றேல் பாபஞ்செய்த ஜனங்களைப் பைரவர்
கோபித்துக் கொல்லுகின்ருர். இரு பிறப்பாளரை ஸ்தா
னத்தின் தீர்த்தத்தில் நிந்திக்கக்கூடாது. தனது க்ஷேத்தி
ரத்தை யவமானஞ் செய்தபடியால் சிவபெருமான் கோப
முடையவராய் எரித்து விடுகின்ருர். ஆகையால் மேலான
அந்த க்ஷேத்திரத்தில் பக்தியோடு மிருக்கவேண்டும். சக்தி
யளவாகத்தனத்தையும் தானியத்தையும் வஸ்திரத்தையும்
புஷ்பங்களையுந் தீபங்களையும் மோக்ஷத்தின் வசமான ஜன
ங்களானல் பக்தி யுடையவர்களாக பரமேசரிடத்தில் செய்
யவேண்டியது. மிகத்தனிகனுனல் தேவதேவனுடைய ஆல
யக்கட்டுக் கோப்புக் குலைந்திருந்தால் நன்ருகச்செய்து சிவ
பெருமானுக்குப் பிரியமான நந்தவனத்தையு நன்ருக வுண்
டாக்கவேண்டியது. பரமேசருக்கு இரம்மியமான உத்ஸவ
முதலியவற்றையும் நடத்தவேண்டும். பதாகை(க்கொடி)
முதலியவற்ரு லலங்கரிக்கப்பட்ட இரதம், மேரு முதலிய
வற்றைச் செய்துவைக்கவேண்டும். மகேசருடைய பாலபி
ஷேகத்தின்பொருட்டு அநேக பசுக்களைக் கொடுக்கவேண்



டும். வெள்ளிமயமாகவுந் தங்கமயமாகவும் பாத்திரங்களைப்
பக்தியோடு செய்துவைக்கவேண்டும். பலவிதமான மேல்
கட்டியையும் மிருதுவான விரிப்புக்களையுஞ் சந்திரனை யணி
ந்த சிவபுரேசருக்குச் செய்து வைக்கவேண்டியது. சம்பு
விற்கு இரஷப முதலிய பலவித வாகனங்களையுஞ் செய்து
வைக்க வேண்டும். தூப தீப முதலிய பாத்திரங்கள்
பக்தியோடுஞ் செய்யத்தக்கன. ஆலயத்தை நன்ருகக்கூட்
டவேண்டும். புற்களையும் பிடுங்கவேண்டும். மதில்களைச்
சுண்ணும்பினுல் மெழுகவேண்டியது. படிகளையுஞ் செய்து
வைக்கவேண்டியது. ஆண்டு நிச்சயமாகச் சிவபக்தர்களுக்
குப் பிரியமானதை எவ்விதத்தினுலுஞ் செய்து நடக்க
வேண்டியது. இவை முதலியவைகள் தேவிக்குந் தேவ
னுக்கு மதிகபிரியத்தைச் செய்வனவாகும். இப்படிப்பட்ட
செய்கைகளால் சீக்கிரம் பிரமவிஷ்ணு முதலிய தேவர்க
ளுடைய பதவிகளும் அடைய யோக்கியமாகின்றன மற்று
ள்ள செய்கைகளினுல் முடியாது. ஓ பிராம்மணோத்தமர்
கள்! அதிகமாகச் சொல்லுவதால் யாதுபயன். முமூ
க்ஷுக்களால் மோக்ஷலாபத்தின் பொருட்டு அந்தப்புரம்
எப்போதுஞ் சேவிக்கத்தக்கது. சிவபுரத்தின் பெரு
மையை விளக்குவதாயும் எல்லோருக்குஞ் சுகத்தைக்
கொடுப்பதாயுமுள்ள விந்தமேலான புராணத்தைக் கேட்
கின்றவர்களும் இதனைச் சொல்லுகின்றவர்களும், தனம்,
வீடு, பாக்கியம், பொருள் போகம் இவைகளை அதிக சந்
தோஷத்தோடு அந்நியர்களுக்குக் கொடுக்கின்றவர்களாய்
சுகத்தையனுபவிக்கின்ருர்கள். உலகத்திலே புத்திரனை
விரும்புகின்றவன் இந்தப் புராணத்தைக் கேட்கவேண்டி
யது. அதனுலனேக புத்திரர்களை யடைவான். அப்

படியே தனத்தை விரும்புகின்றவன் அதிக தனத்தை
யடைகின்றான். வித்தையை விரும்புபவன் வித்தையையு
அப்படியே முமுக்ஷு பரமபதத்தையு மடைகின்றான்.

இங்ஙனம் ஸ்காந்தபுராணத்தில் ஸநத்குமார சம்ஹிதையில்
சிவபுரி புராணத்தில் அநேக தீர்த்தவரலாறுரைக்கும்
பதினோராவது அத்தியாயம் முடிந்தது.

ஹரிః ஓம் குருப்யோ நமః

இங்ஙனம் சிவபுர மஹாத்மிய மென்னும்
சிவபுரிபுராணம்
முடிந்தது.

---

O23:38.9114SP
1127

ஓம் தத் ஸத்.

உகந்தலிங் கேசன் ஒண்கழல் வாழ்க
முத்து ராமலிங்க முனிவன்றாள் வாழ்க
பொன்னம்பல குரு பொற்கழ லோங்க
திருக்கள ராண்டவர் திருவடி வாழ்க
சிதம்பர தேசிகன் சீரடி வெல்க
கோயில் பட்டியைக் கோயிலாக் கொண்டருள்
முத்தா னந்த முனிவன்றாள் வாழ்க.
பல்லோரு மேற்றப் பணிந்து

சென்னை-600 00
142506